தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௬ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௧ விகிருதி—கார்த்திகை 1950—நவம்பர் | மலர் ௮

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பேரவை (Senate) உறுப்பினர் தேர்வு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவையில் கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினராக, சங்கத் தலைவரும், முத்தமிழ் வள்ளலு மாகிய இராவு பகதூர் திருவாளர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் சங்க உறுப்பினர்களால் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளது யாவர்க்கும் பேருவகை தரும். முத்தமிழ் வள்ளலை நாம் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றோம்.

* * * * *

மதிப்புரை

திருவாசகம்—கதிர்மணி விளக்கம்.

பகுதி-உ—நீத்தல் விண்ணப்பம்.

ஆசிரியர் : மகாமகோபாத்தியாய, முதுபெரும்புலவர், பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்.

விலை ரூ. 2—12—0.

கிடைக்குமிடம் : செட்டிநாடு அச்சகம், காரைக்குடி.

அருள் நூல்களுள் ஒன்ருகிய திருவாசகத்திற்குப் "பொருள் எழுதலாகாது" என்பது மரபு. ஏடு பிடித் தெழுதிய நடராசப் பெருமானே திருச்சிற்றம்பலத்துட் பொருளைக் காட்டினுர் என்பதும் மரபு. இதன் கருத்து, திருவாசகத்திற்குப் பொருளுரைத்தலும், உரைத்த பொருளை அறிந்து கோடலும் இயலாதன வென்பதாம். திருவாளர் செட்டியார் அவர்கள் உரை இந்தக் கருத்தை மாற்றுகின்றது. இந்த வுரை விளக்கம் நீத்தல் விண்ணப் பத்தின் கருத்தினை, படிப்பார் நிலைமைக் கேற்ப, விளக்குவ தாயிருக்கின்றது. நம் பொழில் அன்பருள் ஒரு பெரியார் பிறிதோர் இடத்தில் விளக்கியுள்ளபடி அரிய கருத்துக் களும் விரிந்த பொருள்களும் இந்தக் கதிர்மணி விளக்கத் தில் வேணமட்டும் தரப்பெற்றிருக்கின்றன. இவ்வுரை விளக்கத்திற்கு முகவுரை தந்துள்ள கோயம்புத்தூர்ப் பேரறிஞர் வீரத்திரு. R. K. சண்முகஞ் செட்டியார் அவர்களும் அணிந்துரை தந்துள்ள திரு தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்களும் இக்கதிர்மணி விளக்கத்தின் ஒப்பிலாச் சிறப்பினை விரிவாக எடுத்து உரைத்துள்ளதை நம் அன்பர் கருத்திற்குக் கொண்டு வருகின்ருேம்.

ஜியார்ஜ் பெர்னர்ட் ஷா[1]

திரு. சோ. தி. அரசு, எம். ஏ., எல். டி.

உயர்ந்த எண்ணங்கள், அரிய கருத்துக்கள், அழகிய தோற்றங்கள் கொண்டனவே கவிகளாம். அவற்றை வெளியிடும் கவிஞர்கள் தம் மன நிகழ்வுகளையே அவ்வாறு வெளியிடுகின்றனர். எனவே, கவிஞர், உண்மையும், ஒழுங்கும், தூய்மையும், முறைமையும், அழகும் நிறைந்த மனத்தினர். அவர்கள் இயற்றும் கவிகள், காவியங்கள், நாடகங்கள், நூல்கள் யாவற்றினும் அவர்களுடைய உள்ளக்கிடை பரந்தும், மறைந்தும், நிறைந்தும் இருக்கக் காணலாம். அவர்கள் தங்கள் மனத்திட்பத்தாலே. தம் மனநிலையை உள்ளபடியே வெளிப்படுத்தி, மக்களைத் தம் வழிப் படுத்தும் ஆற்றல் பெறுகின்றனர். அவர்கள் கூறும் உண்மைகள், முறைமைக் கருத்துக்கள், அழகிய தோற்றங்கள் முதலியன காலப் போக்கையும், உலக வழக்கினையும் பண்படுத்தி அமைக்கின்றன. எனவே, இத்தகைய கவிஞர்கள் உலகில் வாழும் காலத்தை அவர்கள் காலம் எனக் கூறுதல் மரபு. இவ்வாறு காலங் கண்ட மாபெரும் கவிஞரான ஜியார்ஜ் பெர்னர்ட் ஷா[1] அண்மையில், அதாவது நவம்பர் 2 ஆம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இக் கவிஞர் பெருமான், இயல், இசை, நாடகம் என்னும் மூவகை மொழிக்கலையிலும் வல்லுநர். நகைச் சுவை பொழிய எழுதுபவர். மக்கள் இன நன்மையை நாடித் தம் எழுத்தாற்றலைப் பயன்படுத்தியவர். இவர் தாம் பிறந்த நாட்டை மட்டுமன்றி உலக முழுவதையுமே தம் கருத்துக்களால் பண்படுத்தியவர். ஆதலால் இவரை ஓர் உலகக் கவிஞராக மக்கள் ஏற்கின்றனர்.

இக் கவிஞர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இரு பெரு நிகழ்ச்சிகள் ஏற்பட்டன வென்றும், அவற்றுள்

---

1. George Bernard Shaw.

ஒன்று தம் பிறப்பென்றும் மற்றொன்று டென்னிஸன்[1] என்னும் ஆங்கிலக் கவிஞர் **'ஆண்டவன் தம் அலுவல்களை நிறைவேற்றும் வகைகள் பலப்பல'**[2] என்று எழுதியதுமாம் என்றும் ஒரு சமயம் குறிப்பிட்டுள்ளார். ஆண்டவன் தம் வழிகளை உலகத்தார்க்கு விளக்கித் தம தொழில்களை நடத்தக்கூடிய ஒருவராகத் தம்மைப் பிறப்பித்தார் என்பதை ஷா உணர்ந்திருந்தார்.

ஜியார்ஜ் பெர்னுர்ட் ஷா அயர்லந்தின்[1] தலைநகராகிய டப்ளின்[2] நகரில் *1856* ஆம் ஆண்டு ஜூலை, *26* ஆம் நாள் பிறந்தார். ஷேக்ஸ்பியர்[3] இயற்றிய மக்பெத்[4] என்னும் கொடுநாடகத்தில் தோன்றும் மக்டப்(f)[5] என்பவரும் இங்கிலந்தின் மாபெரும் புரட்சியின் நாயகரா[6]யிருந்த ஆலிவர் க்ராம்வெல்[7] என்பவரும் தம் முன்னோர்கள் என பெர்னுர்ட் ஷா கூறிக் கொள்வார்.

பெர்னுர்ட் ஷாவின் தந்தையாரான ஜியார்ஜ் கார் ஷா[8] என்பவர் வாழ்க்கைவழி பயனற்ற ஒரு வணிகரா யிருந்தார். தந்தை தன் மகற்கு ஆற்றவேண்டிய உதவி எதுவும் பெர்னுட் ஷாவுக்குச் செய்ய அவருடைய தகப்பனுர் வழியற்றிருந்தார். தன் மகனைச் சான்றோனுக்குதற் கேற்ற தன்மையற்றுத் தந்தையா இருந்தாலும், ஷாவின் தாயின் பெற்றியினுலேயே நல்ல பண்பாடுகள் அவருக்கு இளமையிலேயே அமைந்தன. ஷாவின் தாயார் இசை வல்லுநர். அவர் இசை வன்மையே ஷாவின் இசைப் பற்றுக்கும் இசைத் திறமைக்கும் காரணமா யிருந்தது. முறையான பள்ளிப் படிப்பு ஷாவுக்கு மிகக் குறைவே, பல பள்ளிக்கூடங்களுக்கு அரைகுறையாகச் சென்ற பின் 'வாளாவிருத்தலே' நலம் என ஷா முடிவு செய்தார். எனினும் தம்முடைய பதினைந்தாம் ஆண்டளவில் ஷா பக்குவமடைந்த சிறந்த அறிவு வளம் படைத்தவராயினுர்.

---

1. Lord Tennyson.

2. ' God fulfills himself in many ways '

1. Ireland. 2. Dublin. 3. Shakespeare. 4. Macbeth. 5. Macduff. 6. Revolution of 1688. 7. Oliver Cromwell. 8. George Carr Shaw.

(265ஆம் பக்கம் பார்க்க.)

பரத சாத்திரம்.

பாவவியல்

ரு-ஆவது நவரச லக்ஷணம்[1]

நாமகள் கலைகட் கெய்து நயந்தரு ரசங்கள் கூறின்
ஏமுறு நகையே சோகம் எழில்பெறு கருணை வீரம்
தாமுறும் அச்சஞ் சாந்தம் அற்புதம் ரௌத்திரம் சந்தத்
தோமறு சிங்கா ரத்தோ டொன்பதாச் சொல்வர் மேலோர்.

நவரசத்தைத் தொகுத்துணர்த்துகின்றது.

(இ-ள்) பெருநகைரசம், சோகரசம்[2] அல்லது பீபத்ச ரசம், கருணாரசம், வீர ரசம், அச்ச ரசம்,

---

1. நகை, சோகம், கருணை, வீரம், அச்சம், சாந்தம், வியப்பு, வெகுளி, உவகை என்னும் ஒன்பது சுவைகளின் இயல்பினை விளக்கும் பகுதி. இன்பம் துய்த்த உள்ளத்திலிருந்து மலர்ச்சியும் உயர்ச்சியும் தோற்றுவன. துன்பந் தோய்தலினாலே மனத்தில் அசைவும் கலக்கமும் ஏற்படுவன. மலர்ச்சி, உயர்ச்சி, அசைவு, கலக்கம் என்னும் இந் நான்கிலிருந்து உவகை, பெருமிதம், இளிவரல், வெகுளி என்னும் இந் நான்கு சுவைகளும் முறையே தோன்றுவன. உவகையிலிருந்து நகைச் சுவையும், பெருமிதத்திலிருந்து மருட்கையும், இளிவரலிலிருந்து அச்சமும், வெகுளியிலிருந்து அவலமும் தோன்றுவனவாம். இச் சுவை யெட்டும் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுள் விரிவாக ஆராயப் பட்டன. இவ் வெட்டுடன் சமநிலை (சாந்தம்) என்னும் சுவையினையும் சேர்க்கச் சுவை ஒன்பதாகும்.

பீபத்சம்—இளிவரல். குற்சை—ஜுகுப்ஸை என்பதன் திரிபு. ரௌத்திரம்—வெகுளி.

சிங்காரம்—சிருங்காரம் என்னும் வட சொல்லின் திரிபு சிருங்காரம்—காமச் சுவை.

2. ரசம்-சுவை. "சுவை யென்பது காணப்படுபொருளாற் காண்போர் அகத்தின் வரும் விகாரம்" என்பர் இளம் பூரணர்.

சாந்தி ரசம், அற்புத ரசம், ரௌத்திர ரசம், சிங்கார ரசம் என்னும் ஒன்பதாம்—எ-று.

சில நூல்கள் சோகத்தை நீக்கிக் குற்சையைக்கூட்டி ஒன்பதென்றும், சோகத்தை நீக்கி இழிவரலைக் கூட்டி ஒன்பதென்றும், ரௌத்திரத்தை நீக்கி மருட்கையைக் கூட்டி ஒன்பதென்றும், சிங்காரத்தை நீக்கி உவகை அல்லது பெருமையைக் கூட்டி ஒன்பதென்றும் சொல்லு கின்றன. (கூகூ)

க-ஆவது பெருநகை ரசம்[1]

சாற்றிய நகையின் றன்மை சார்வது வேறுளோரால்
தோற்றிய விகழ்ச்சி மைந்தர் சொல்லிடு குதலையானும்
கூற்றிசை விகடம் பேதைக் குறியினு மடமையானும்
போற்றுமற் புதத்திற் காட்சிப் புதுமையிற் சோிடத்தில்

வேம்பும் கரும்பும் முதலிய சுவைக்கப்படுபொருளும் அதனை நுகர் தற்குரிய நாவென்னும் பொறியும் ஒருங்கு கூடிய வழிக் கசப்பு இனிப்பு முதலிய சுவைகள் பிறத்தல் போல நகை முதலிய வற்றிற்குப் பொருளாகிய சுவைக்கப்படு பொருளும் அதனை நுகர்ந்த பொறியுணர்வுங் கூடியவழி சுவை தோற்றுவதாகும். சுவைக்கப்படுபொருளும் அதனை நுகர்ந்த பொறியுணர்வும் அது மனத்திற்பட்ட வழி மனத்திற்றோன்றுங் குறிப்பும், உள்ளக் குறிப் பின் வழிக் கண்ணீ ரரும்பல் மயிர் சிலிர்த்தல் முதலாக உடம்பில் தோன்றும் சத்துவங்களும் ஆகிய இவற்றினியல்பினைத் தொல் காப்பிய மெய்ப்பாட்டிய லுரையிற் காண்க. ஒன்பான் சுவைக்கு ஏதுவாகிய பொருளினை நாடக அரங்கில் நிறுவி, அது கண்டு குறிப்புஞ் சத்துவமும் நிகழ்த்துகின்ற கூத்தனையும் கொண்டு வந்து, அவன் செய்கின்ற மெய்ப்பாட்டினை அவையிலுள்ளவர்கள் உணர்வதாக வருகின்ற முறைமை யெல்லாம் நாட வழக்கிற்குரிய வாகலின் இச் சுவைகளினியல்பு இப் பரத நூலில் விரித்துரைக் கப் பெறுகின்றது.

1. நகை யென்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலும் என மூன்று வகைப்படும். எள்ளல், இளமை. பேதைமை, மடன் என்னும் இந் நான்கினை யுங் காரணமாகக் கொண்டு நகைச் சுவை பிறக்கு மென்பர். 'எள்ளல், இளமை, பேதைமை மடனென், றுள்ளப்பட்ட நகை நான்கென்ப' என்பர் தொல்காப்பியர்.

அன்புறு பொருளின்ரூப வழகினும் புகழ்ச்சி யானும்
வன்புறு சூட்சி யானும் மகிழ்வினும் அரியசெய்கை
இன்புறு நகைவந் தெய்து மிடம்பதினொன்கா மென்றே
தென்வரை யுறைந்த சந்தத் திருமுனி யுரைசெய் தாரே.

இவ்விரண்டு செய்யுளும் ஒருதொடர்.

(இ-ள்) பெருநகை ரசமாவது - ஒருவராலுண்டா கும் இகழ்ச்சியானும், குழந்தைகளின் மழலைச் சொல்லி ஞனும், இராகவிசையினானும், விகடச் சொல் விகட நடிப்பு முதலியவற்றானும், பேதையர், மடையர் குறிப்பி ஞனும், அற்புதத்தினானும், நூதனப் பொருட் காட்சி யானும், சோதிடச் செயலிலறிந்த வுண்மையினானும், மனோரம்மியப் பொருள்களின் அழகினானும், புகழ்ச்சி யினானும், உபாயச் செய்கையினானும், சந்தோஷத்தின னும், அரிய தொழிற் றோற்றத்தினானும் வரும் - எ-று. (௱-௱க.)

உ-ஆவது சோகரசம்.[1]

ஆரியர் விரித்த மெய்ப்பாட் டழுகைவந் தெய்தல் கேண்மோ
ஏர்விலாப் பூச்சியக்கே டெய்தினு மிழிப்பினாலும்
பாசில்பொன் னிழத்தலானும் பரிவுசெய் நோயினாலும்
சோர்வுறு வறுமையாலுஞ் சொல்லிய சோகம் போதும்.

மன்னர்தம் மிடுக்கத்தாலும் மனையுளோ ரிழவினாலும்
புன்மையர் சேர்க்கை யானும் பூவையர்க் கடலானும்
நன்னிலை நீங்கிக் கீழா நண்ணிடும் போதும் பொல்லா
உன்னிடு செயலினாலு முண்மையாத் தோன்றுந் துக்கம்.

இவ்விரண்டு செய்யுளும் ஒரு தொடர்.

(இ-ள்) சோகரசமாவது-பெருமைக்கேடு, இகழ்ச்சி, பொன்னிழவு வந்தபோதும், நோயுற்றபோதும், வறுமை

---

1. சோகரசம்—அவலச் சுவை. அழுகை யென்னும் இச் சுவை இளிவு, இழவு, அசைவு, வறுமை என்னும் இந் நான்கும் பற்றித் தோன்றுவது. 'இளிவே யிழவே யசைவே வறுமை யென, விளிவில் கொள்கை யழுகை நான்கே' என்பது தொல் காப்பியம். இளிவு—பிறரால் இகழப்படும் தாழ் நிலையினனாதல். இழவு—தந்தை தாய் மனைவி முதலிய சுற்றத்தாரையும் இன்பம் தரும் நுகர்ச்சிப்பொருளையும் இழத்தல் அசைவு—பண்டை யுயர் நிலை கெட்டுத் தளர்தல். வறுமை—விரும்பிய நுகர்ச்சியினை அடையப் பெறாத பற்றுள்ளம்.

வந்த போதும், அரசர் செய்கின்ற இடுக்கத்தானும், வீட்டிலுள்ளோர்களை யிழந்தபோதும், புல்லியர் சேர்க்கையானும், பெண்கள் ஊடினபோதும், தம்முடைய வுயர்வு நீங்கிக் கீழ்நிலையுற்றபோதும், கெட்ட செயலினாலும் வரும்-எ-று. (௩௨. ௩௩.

ங-ஆவது கருணாரசம்[1]

மெய்யுறு கருணை யென்னும் ரசத்தினை விளம்பக் கேளு
தெய்வநூற் கேள்வியானுஞ் செப்பிடு முயிர்கள் தம்மை
மையுற வதைக்கும் போதும் வன்பிணி வறுமை துன்பம்
எய்தியோ ருயிர்வருத்த மியன்றிடு போதும் போதும்.

(இ-ள்) கருணாரசமாவது-புராண கேள்விகளாலும், ஊன் விற்போர் முதலியோர் ஒருயிரைக்கொல்லும் போதும், பிணிகளாலும், வறுமையினாலும், பலவித துன்பங்களினால் ஒருயிர் வருந்தும்போதும் வரும்-எ-று, (௩௪)

ச-ஆவது வீரரசம்[2]

குறையுரை கூறும் போதும் குலவீன னென்னும் போதும்
நிறைதபு செய்கை யானு நேர்ந்தசத் துருவினானும்
பொறையின்றிப் பொய்பொன் வவ்வும் போதினும் போதுந் [தத்தந்
நிறை காணி மானவீனஞ் சேர்ந்திடு போதுந் தோன்றும்.

---

1. கருணாரசம்—கருணைச் சுவை. பிறன்கண் தோன்றிய இளிவு, இழவு, அசைவு, வறுமை யென்பன பற்றி ஒருவன் பால் தோன்றும் அழுகை கருணை யெனப்படும். தன்கண் தோன்றிய இளிவு முதலியன பற்றித் தோன்றுவது சோகரசமாகும் இதுவே இவ் விரண்டிற்குமுள்ள வேறுபாடாகும். தன்கட் டோன்றுதலும் பிறன்கட் டோன்றுதலுமாகிய இரண்டும் அழுகை யென ஒன்றாகவே தொல்காப்பியங் கூறும்.

2. வீர ரசம்—வீரச் சுவை. கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் இந் நான்கும் பற்றி ஒருவன் எல்லாரோடும் ஒப்ப தில்லாது எல்லார்க்கும் மேலாக இவை நான்கினும் மேம் பட்டுத் திகழ்தல் பெருமிதம் எனப்படும். கல்வி—தவம் முதலிய கலைத்திறம். தறுகண்—அஞ்சத் தக்கன கண்ட போதும் அஞ்சாத மனத் திண்மை. இசைமை—எஞ்ஞான்றும் பழியொடு கூடிய இழி செயல்களைச் செய்யாத புகழ்த்திறன். கொடை—

வேலுற வெகுளி தோன்ற வினவியே வுறுப்பிலார் தம்
பாலது மொழித லானும் பகர்குல நலமில் லார்தம்
சீலமே சொலினுஞ் சிந்தை நினைத்தவை சேரா தானும்
வேலுறு கொலைபி னனும் வீரம்வந் திறந்த லாமே.

இவ்விரண்டு செய்யுளும் ஒருதொடர்.

(இ-ள்) வீர ரசமாவது-ஒருவர் தம்மை யிழித்துச் சொல்லும்போதும், குலவீனனென்னும் போதும், ஒருவர் தமக்குக் கெட்ட செயல் செய்யும்போதும், பகைவரைக் காணினும், பொறுமை யில்லாமையானும், பொய் சொலல், களவு செயல் முதலியவைகளானும், தமக்கு வரவேண்டிய வரிகளிற் குறையினும், காணி, மானங்களுக்குக் குறைவுவரினும், அங்கவீனருக்குக் கோபம் வர அவருறுப்பிலாமையைக் கூறும்போதும், குலவீனர் தமது குலப்பெருமையைச் சொல்லும் போதும், தாம் நினைத்தது முடியாதாயினும் கொலையி னலும் வரும்—எ-று. (௱௫, ௱௬)

௫-ஆவது அச்சரசம்.[1]

நிகழ்வுறு மச்சந்தோன்று நெறியது நீர்மை யன்றி
வெகுளிவே தாளங் கூளி மேல்வருங் காலும் மேலாத்
தகுவிலங் குறுத லானுந் தந்தொழில் நீங்க லாலும்
தொகுமற வரசர் தண்டச் சூட் சியினலுந் தோன்றும்.

எல்லார்க்கும் இல்லை யென்னாது வேண்டுவன கொடுத்தல். இவை நான்கினுள்ளும் தறுகண் பற்றிய பெருமிதமே வீரச் சுவை யெனச் சிறப்பித்துரைக்கப்படும். "கல்வி தறுகண் இசைமை கொடை யெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" என்பர் தொல்காப்பியர்.

1. அச்ச ரசம்—அச்சச் சுவை. தெய்வம், விலங்கு, கள்வர், இறைவர் என நான்கும் பற்றி அச்சம் பிறக்கும். அணங்கு—பேய் பூதம் முதலியன. விலங்கு—சிங்கம் புலி முதலியன. கள்வர்—தீத் தொழில் புரிவோர். இறை யெனப் படுவார் தந்தை ஆசிரியர் அரசர் முதலாயினர். "அணங்கே விலங்கே கள்வர் தம் மிறை யெனப், பிணங்கல் சாலா அச்சம் நான்கே" என்பது தொல்காப்பியம்.

இடிமின்கான் மழையி னாலு மிருளினால் வெயிலி னாலும்
படிகமார் வெள்ளம் பாம்பு பருவரை நெறியி னாலும்
கொடுமையிற் படையிற் கூரும் குருதியிற் களத்தி னாலும்
வெடியொலி யாதி தன்னின் மேவிடு மச்சந் தானே.

இவ்விரண்டு செய்யுளும் ஒருதொடர்.

(இ-ள்) அச்ச ரசமாவது-தலைவர் கோபித்த போதும், பிசாசு, பூதம், துஷ்ட மிருகங்கள் தம்மேல் வரினும், தம்முடைய தொழிலுக்குக் கேடுவரினும், அரசர் தண்டிக்கும் போதும், இடி, மின்னல் பெருங்காற்று, பெருமழை வரும்போதும், இருள், வெயில், வெள்ளம், சர்ப்பம், பருத்த மலைவழி, சேனைகள், இரத்தவெள்ளம், படுகளம் இவற்றைக் காணும்போதும், பீரங்கி முதலிய ஓசைகளைக் கேட்கும்போதும் வரும்-எ-று. (௭௭, ௭௮)

௬-ஆவது சாந்திரசம்.[1]

பொன்னணி மாதே சாந்தி பொருந்துசாத் வீகத் தானும்
துன்னுசத் துருக்க ளொன்றித் தொழுதிடும் போதும்போத
மன்னுசாத் திரங்க ளாலும் வறுமையின் னெறியி னாலும்
மன்னிய சாந்தி யென்னு மாரசந் தோன்று மென்ப.

(இ-ள்) சாந்தி ரசமாவது-சாத்வீகத்தாலும், பகைவர் வணங்கிச் சார்தலானும், சாஸ்திர விசாரணையாலும் வறுமையினாலும் வரும்-எ-று. (௭௯)

௭-ஆவது அற்புதரசம்.[2]

சோதிடத் தியற்கை யாலுஞ் சொல்லுமஞ் சனத்தி னாலும்
ஓதுநூற் புலனெத் துரைத்த வொப்பறு பொருளி னாலும்
தீதறு சூத்திரத்தாற் செய்பொருள் காண லாலும்
காதுறு விழியாய் சொன்னோம் அற்புதக் காட்சி தோன்றும்.

(இ-ள்) அற்புத ரசமாவது - சோதிட நூலிற் சொல்லும் கிரகணாதிகளின் நேற்றத்தாலும், பாதா

---

1. சாந்திரசம்—நடுவு நிலைச் சுவை. பிறர் தமக்கு நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் ஒரு சிறிதும் விகாரப்படாத உள்ளத்தின் அமைதி. "செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடா நிலைமை" என இதன் இயல்பினைப் பேராசிரியர் விளக்குதல் இவண் கருதத் தகுவதாம்.

2. அற்புத ரசம்—வியப்புச் சுவை. இதனை மருட்கை யென்பர்தொல்காப்பியர். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும்

ளாஞ்சனம், பூதாஞ்சனம், சோராஞ்சன முதலியவை களாற் பொருள் கண்டெடுக்கும் போதும், நூலிற் கவிகள் கூறிய பொருளறிதலாலும், சூத்திரங்களாற் செய்யப்பட்ட பொருள்களைப் பார்க்கும் போதும் வரும் —எ-று. (௱௰)

௨-ஆவது ரௌத்திரரசம் [2]

தோன்றிய வுத்திரத்தைச் சொல்லிடி னுருத்திர பாவம்
ஊன்றிய வாதினுலும் உண்மையை மறுத்த லாலும்
ஆன்றவே தியர்கள் வேசை ஆயுள்வே தியர்கள் தம்முன்
என்றிடுங் கோப முண்டா மியற்கையீ தென்பர் மேலோர்.

(இ-ள்) ரௌத்திர ரசமாவது-வாது செய்யு மிடத்தும், உண்மையை மறுக்கு மிடத்தும், அந்தணர், வேசையர், மருத்துவர்கள் ஒருவர் இருந்துழி மற்றையோர் போயினும் வரும்—எ-று. (௱௰௧)

௩-ஆவது சிங்காரரசம். [3]

இன்பமெட் டுக்தம்மேது வெய்திடின் மெய்யி னுன்றும்
அன்புடைக் காமங் கூடும் ஆடவ ரகன்ற காலை
பொன்புரை மதரீ குள்ளப் புணர்ச்சியாங் காதல் பூண்டு
நன்கெறி யிருந்தார் மையல் நயம்பெற நயத்திற் காட்டும்.

இந் நான்கும் பற்றி வியப்புச் சுவை தோன்றும். புதுமை—யாண்டும் என்றுங் காணுத புதுப் பொருள். பெருமை—மிகப் பெரியன. சிறுமை—மிகச் சிறியன. ஆக்கம்—ஒன்று திரிந்து மற்றொன்றுதல். 'புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே" என்பது தொல்காப்பியம்,

2. ரௌத்திர ரசம்—வெகுளிச் சுவை. உறுப்பறை, குடிகோள், அலை, கொலை யென்னும் இந் நான்கும் பற்றி வெகுளிச் சுவை பிறக்கும். உறுப்பறை—கையை வெட்டுதல், கண்ணைக் குத்துதல் முதலியன. குடிகோள்—தன் குடும்பத்தவர்க்குப் பிறரால் உளதாகுங் கேடு. அலை—கோல்கொண்டு அடித்தலும் வைதலும் போல்வன. கொலை—அறிவும் புகழும் முதலியன வற்றைக் கொன்றுரைத்தலும் பிறரைக் கொல்லுதற்கு ஒருப்படுதலும். 'உறுப்பறை குடிகோள் அலை கொலை யென்ற, வெறுப்பின் வந்த வெகுளி நான்கே' என்பது தொல்காப்பியம்.

3. சிங்கார ரசம்—உவகைச் சுவை. செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்னும் இந் நான்கும்பற்றி உவகைச் சுவை பிறக்கும். செல்வ மென்பது நுகர்ச்சி. புலன் என்பது கல்விப்

நயமுகம் புருவ நெற்றி வியர்த்திடல் நகை மறைத்தல்
மயணினை யாமை பூத்தாண் மணக்குழன் முகம் விரித்தல்
செயல் வருஞ் செங்கை வைத்தே சேயிழை வருடல் [செம்பொன்
இயலுடை நெகிழ்த் துடுத்த னிதம்பத்தி னிரம்புங் காமம்.

எய்திய வணிதிருத்தல் இதஞ்சொல்லல் உறுதி சொல்லல்
கைகளை யுயர்த்தி நிற்றல் கனிந்துபா ராட்டுரைத்தல்
நையுறு நாக்கடித்தல் நயக் கடுஞ்சொல் லுரைத்தல்
மெய்யினைப் பிறர்க்கு நாணங் கொடுப்பது விளக்கலாமே.

வேட்கையாற் புலம்பிக் கூறல் மிகமனங் கலங்கிச் சோர்தல்
வாட்கையுற் றெழுகக் காம வழியுடன் படுத்தவன்பால்
சூட்சியின் மறுத்தல் நாணி யொளித்தலே விழித்துக் கண்கள்
மீட்கரி தென்ன நோக்கல் மெய்யுற விளங்குங் காமம்.

இந் நான்கு செய்யுளும் ஒரு தொடர்.

(இ-ள்) சிங்காரரசமாவது-மேற்கூறிய எண்வகை ரசங்களும் ஏதுவாய்க் காமமிக்கோர்க்கு ஆடவர் பிரிந்த காலத்தில் வேட்கையால் உள்ளப் புணர்ச்சிதோன்றும் மெய்ப்பாடாம். அம்மெய்ப்பாடு முகம்[1], புருவம், நெற்றி வியர்த்தல்[2], நகைப்பில்லா திருத்தல்[3], மயங்கல்[4], நினைப் பின்றி அளகத்தை முகத்தில் விரித்து விடல்[5], கையால் பாங்கி முதலியோரை வருடல்[6], [7] ஆடையை நெகிழ்த்

பயனாகிய அறிவுடைமை. புணர்வு—காமப் புணர்ச்சி. விளையாட்டு—ஆறு குளம் என்பவற்றிலும் சோலையிலும் விளையாடி மகிழ்தல். "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென், றல்லல் நீத்த உவகை நான்கே" என்பர் தொல்காப்பியர். மேற் கூறிய உவகை நான்கினுள்ளும் மகளிரொடு நுகரும் காமப் புணர்ச்சியா னுளதாம் உவகையே ஈண்டு அரபத்தநாவலராற் சிங்கார ரசம் எனச் சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

1. புகுமுகம் புரிதல்.
2. பொறி நுதல் வியர்த்தல்.
3. நகுநயம் மறைத்தல்.
4. சிதைவு பிறர்க்கின்மை.
5. கூழை விரித்தல்.

6, 7. செயலருஞ் செங்கை வைத்தே சேயிழை வருடல் என்பது மூலம். ஈண்டு இழை என்பதற்கு அணி யெனப் பொருள் கொள்ளுங்கால் தொல்காப்பியர் கூறிய "காதொன்று களைதல்" "ஊழணி தைவரல்" என்பன ஈண்டு அடங்கும்.

துடுத்தல்[8], கடி தடத்தல் மத நீருறல்[9], ஆபாரணத்தைத் திருத்தல்[10], இதங்கூறல், உறுதிசொல்லல்[11], கைகளை யுயர்த்திக் காட்டல்[12], மனமுருகிச் சொல்லல், நாவினைத் தட்டுதல், நயமாகக் கடுஞ்சொற் சொல்லுதல், தேகவுறுப்பைப் பிறர்க்கு நாணமுண்டாகக் காட்டல், ஆசையோடு புலம்பல், மனங்கலங்கிச் சோர்தல், பாங்கியால் காமவழியில் தலைவனை உடன்படச் செய்தல், குறிப்பினாலே யுணவு முதலியவற்றை மறுத்தல், நாணியொளித்துக் கொள்ளல், நிமை கொட்டாது உறுத்திப் பார்த்தல் முதலியவாம்—எ-று. (௩௰௨-௩௰௫)

காமத்தாற் பிரிந்து கூடிக் கலந்தபின் பிரிந்த போது
சேமவின் பத்தை நீத்தல்[1] செயலறு புலவி தேர்ந்து

---

8. உடை பெயர்த் துடுத்தல்.

9. அல்குல் தைவரல்.

10. அணிந்தவை திருத்தல்.

11. இல்வலி யுறுத்தல்.

12. இரு கையும் எடுத்தல். இவை பன்னிரண்டும் முறையே நான்கு நான்காய் மூன்று பகுதியாகி ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழி அவ் வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சி நிகழுமளவும் முன்னிகழ்வன எனத் தொல்காப்பியங் கூறும். தொல்காப்பியத்திற் சொல்லப்பட்ட இவற்றை இந் நூலாசிரியர் இங்கு இயைத்துக் கூறியுள்ளார்.

1. இன்பத்தை வெறுத்தல் எனத் தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டது. யாழுங் குழலும் பூவும் சாந்தும் முதலாக இன்பத்திற் கேதுவாகிய பொருள் கண்ட வழி அவற்றின் மேல் வெறுப்புத் தோன்றுதல் என்பது மேற் காட்டிய தொடரின் பொருளாகும்.

தாமுள்ள வடிவு காண்டல் சாதமுங் குற்றம் பேசல்
ஆமுணர் வதனை நீக்கல் பசலைமேற் படரச் சோர்தல்.

(இ-ள்) முன்னாடிக் கூடின தலைவர் பிரிந்துழித் துணிவற்று நிற்கும்போது, மஞ்சட் பூச் சாதிகளை நீக்கல், ஊடலை யறிந்து உள்ளக் குறி காணுதல், சத்தியஞ் செய்தல், குற்றங் கூறல், உணர் வழிதல், பசலை நிறங் கொண்டு சோர்தல் முதலியவாம்-எ-று. (௱௰௬)

நவரசக்கை.[2]

நவரச மென்னு மிந்த நாட்டிய வகையொன் பானும்
அவனியில் வழக்க மான வடையாளந் தம்மைக் கேளு
நவமுறு பெருநகைக்குப் பதாகை தாடனமா மென்ப
அவமுறு சோகத்திற்கோ அரவின்கை கபோலம் வைத்தல்.

(இ-ள்) பெருநகை ரசத்துக்குப் பதாகையும், தாடனமுமாம். சோக ரசத்திற்குச் சர்ப்பசிரக்கையைக் கன்னத்தில் வைத்தலாம்-எ-று. (௱௰௭)

சூசிமுன் மூக்கின் வைத்தல் சொன்னதோர் சோகத் [திற்காம்
நாசியி லதனை வைத்து நன்முகங் கவிழ்தல் துக்கம்
வீசிய வீரத்திற்குப் பதாகை மேனோக்கி யோச்சல்
காசறு கருணைக் கையோ கஞ்சநன் மலரா கும்மே.

(இ-ள்) சூசிக்கையை மூக்கில் வைத்தலும், மூக்கில் வைத்து முகங் கவிழ்தலும் மேற் சொன்ன சோக ரசத்துக்காம். வீர ரசத்துக்குப் பதாகையை மேனோக்கி வீசலாம். கருணாரசத்துக்குப் பற்ம கோசக் கையாம் -எ-று. (௱௰௮)

---

2. ஒன்பான் சுவைகளையும் புலப்படுத்துதற்குரிய கைவகைகளைக் கூறுகின்றார். இங்குக் கூறப்படும் கைகளின் இலக்கணம் "காலக்ஷணம்" என்னும் பகுதியில் முன் விளக்கப்பெற்றுளது.

பயமெனு ரசந்தனக்கு மென்னிலை பகர லாகும்
நயமெனு வணக்கஞ் சாந்தி யஞ்சலி யிரண்டு[1] நன்றும்
உயர்வுறு மற்புதத்தான் ஒப்பறு சிகரங் கொள்ளும்
வியர்வுறு ரௌத்திரத்தான் முஷ்டியை விரும்பு மன்றே.

(இ-ள்) அச்ச ரசத்துக்கு மென்னிலைக்கையும், சாந்தி ரசத்துக்கு அஞ்சலிக் கையும் புஷ்பாஞ்சலிக் கையும், அற்புத ரசத்துக்குச் சிகரக்கையும், ரௌத்திர ரசத்துக்கு முஷ்டிக் கையுமாகும்—எ-று. (௱௰அ)

சிங்கார ரசந்தனக்கே செப்புநற் பொருத்த முற்ற
இங்கிதக் கரங்க ளெல்லாம் இயைந்திடு மெனத்தென் [குன்றில்
தங்கிய கும்ப யோனி சாற்றினர் பாத நூலில்
அங்கிதன் விரிவை யெல்லாம் அறிவுளோர் அறிந்து கொள்க

(இ-ள்) சிங்கார ரசத்திற்கு முன்சொன்ன கைகளுள் பொருந்துவன வெல்லாங் கொள்கவென்று குறுமுனி கூறினர். அவற்றின் விரிவை மகா பரத நூலிற் காண்க.எ-று. (௱உ௰)

அறுசுவைக் கை.[2]

ஆதியாம் அறுசுவைக்கும் அற்புத மான கைகள்
ஓதுவோம் இனிப்புக்குத்தான் உயர் பற்ம கோசமாகும்
நீதிசேர் துவர்ப்பினுக்கோ நேர்பிறைக் கைய தாகும்
சோதியா மெரிப்பினுக்கு[3]ச் சொற்றிடுஞ் சாலையக்கை,

(இ-ள்) இனிப்பினுக்குப் பற்ம கோசக் கையும், துவர்க்குப் பிறைக் கையும், காரத்திற்குச் சாலையக் கையுமாகும்-எ-று. (௱உக)

---

1. அஞ்சலி யிரண்டு—அஞ்சலி, புஷ்பாஞ்சலி என்பன.
2. இனிப்பு, துவர்ப்பு, காரம், கைப்பு, புளிப்பு, உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவைகளையும் புலப்படுத்தற்குரிய கைவகைகள் இங்குக் கூறப்படுகின்றன.
3. எரிப்பு—காரம்.

கற்பமாங் கைப்பினுக்குக் காட்டிய முஷ்டிக் கையாம்
பொற்புறு புளிப்பினுக்குப் புகன்றிடு பதாகை யென்றே
அற்புத வுவர்ப்பினுக்கே யறைகுவர் அன்ன வாயைச்
சிற்ப ரனடியைப் போற்றுந் திருமுனி யுரைத்த வாறே.

(இ-ள்) கைப்புக்கு முஷ்டிக் கையும், புளிப்புக்குப் பதாகைக் கையும், உவர்ப்புக்கு அன்னவாயும்-ஆகு மென்று பரமசிவனைப் பரவும் குறுமுனி கூறினர் -எ-று. (௱உஉ)

கரவகை யாதியாகக் கழறிய விதங்க ளாறில்
உரைசெய்த பொருள்க ளன்றி யுற்றவை பலவா மெல்லாம்
உரைபெறு பரத நூலி லோதிய விதியை யோர்ந்து
உரைசெய்க வுலகினோருக் குயாறி வுற்ற மேலோர்.

(இ-ள்) கரவகை யாதியாக ரச வகை யீறாகக் கூறிய ஆறனுள்[2] உரைத்த பொருளே யன்றி யின்னும் பல வுளவாம்; அவற்றை மகா பரத நூலிற் கண்டு உலகத்தவர்களுக்கு நல்லறிவினோர் விரித் துணர்த்துக -எ-று, (௱உ௩)

க-வது பாவவியல் முற்றிற்று.

---

1. இச் செய்யுள் இவ் வியலுக்குப் புறனடையாக அமைந் துளது.

2. கரவகை, சிரவகை, பாதவகை, நேத்திரவகை, சுவை வகை, சுவைக் கைவகை என இப்பாவ வியலுள் உணர்த்தப் படும் பொருள்கள் ஆறும் எனப் பொருளுரைத்தல் பொருத்த முடையதாகும். அன்றி இவ் வாறனுள் ஒற்றைக் கை இரட்டைக் கை எனக் கைவகையினை யிரண்டாக்கிச் சுவைக் கை வகையினை ரச வகை யென ஒன்றாக அடக்கி, ''கர வகை யாதியாக ரச வகை யீறாகக் கூறிய ஆறு'' என உரையில் வகுத்துக் காட்டிய படி கோடலுமாம்.

நந் நாட்டுக் கொடி.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

'தாயின் மணிக்கொடி பாரீர்! —அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்.'

ஒரு நாட்டின் உயிர்க்களையினையும், இயலழகினையும் உள்ளுணர்வினையும் சிறப்பாக விளக்க வல்லது அந் நாட்டின் கொடியாகும். நாட்டின் உயரிய குறிக்கோளையும், பண்புகளையும் மெய்ப்பிக்கும் கொடி அந் நாட்டு மக்களின் உயிர்நாடியாகும். நாட்டு மக்கள்பால் சுரந்து கிடக்கும் அறிவு ஆண்மை உணர்வு முதலாய் உள்ளியல்புகளைக் கிளரச்செய்து நாட்டின் செய்திகளையும் புலப்படுத்தற்கு முதலேதுவாக நாட்டுச்கொடி வயங்குவதால் அதனைப்போற்றி வழிபடுவது தலைச்சிறந்த கடன்மையென நம் முன்னோர் துணிந்திருந்தனர். அதனை, அவனியுளோர் நனி நாகரீகராய்த்திகழ, வணங்குதல் தொல்லியன் மரீஇய உயர் வழக்கங்களுள் ஒன்றாகு மென்பது தெளிய விளங்கிக் கிடக்கும் உண்மையாம்.

கொடியின் மாண்பினை நந்நாட்டு முன்னோர்கள் நன்குணர்ந்து அதனை உரிமையாக ஓம்பும் இயல்பும், அது சிறப்புற மக்கள் முனைந்த நிலையும், அதற்குத்தக ஒழுகின மேன்மையும் பழந்தமிழ் மரபினை விளக்க எழும் செழுங்களஞ்சியங்களாய பெருங்காப்பிய நூல்களிலே குறிக்கப்படுதல் அறிந்து இன்புறற்பாலன. முடியுடை பண்டைத் தமிழ் மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் முறையே வெல்லும் வலியுடைய வில்லையும், பாயும் வீரப் புலியையும், தம்முயிரனைத்தையும் செவ்வியுற நோக்கி அறியாமை மருட் செறிவினை எதிரேறிக்கலைத்து அளியால் வளர்க்கும் மீனையும் தனித்தனி அடையாளமாகத் தம் கொடியினில் கொண்டிருந்தனர். மற்றும் அப்பேரரசர்கள் தம் ஆட்சிக்குரிய இலச்சினையினை கொடியாகக் கொண்டிருந்த இனிய உள்ளப்பாங்கு அன்னவர் தம் உணர்வின் எழில் மலர்ச்சியினையும் விழுத்திருவினையும்

உறுதிப்படுத்தும். இலங்கையர்கோனுக்கு வீணைக்கொடியும், விசயனுக்கு அநுமக்கொடியும் துரியோதனனுக்கு பாம்புக்கொடியும் அவரவரியல்புக்குத்தக இருந்ததாக இராமகாதையாலும் பாரதத்தாலும் பெறப்படும்.

முடியரசியல் முற்றி வளமுற விளங்கிய காலத்தில் குடிமக்கள் நாட்டு மன்னர்களை இறைநிலையில் வைத்து வணங்கினர். ஆனால் முடியரசுகள் கழிய பூமுகத்தே குடியரசுகள் வலியுறுங்காலத்தில், நாட்டுமக்கள் இறவாத மங்கலத்தகுதி வாய்ந்து யாவரையும் உரிமையோடு இனிமையுற வாழ்விக்க வல்லது கொடியெனக்கொண்டு முடிவணக்கத்தைக் கைவிட்டு கொடிவணக்கத்தை உள்ளம் கதுவலுற மேற்கொண்டனர்.

மிக்க உணர்வாட்சியுடைய மக்கள் ஊரூர்தோறும் திருவிழா நிகழுவதற்கு முதற்கண் கொடியேற்றுவிக்கும் வழக்கத்தை விழிப்புறுத்தி வற்புறுத்தியருளிய பொருண்மை இவண் கருதற்பாற்று. கொடியேற்றும் வழக்கம் மக்களின் ஒற்றுமை நலத்தினையும் ஆளுந் திறத்தினையும் விளக்கி அதனாலாய அறமுதலாகிய விழுப்பத்தின் அருமையினைப் புலப்படுத்தும். கண்ணுதற் பெருமானது உருவத்தை ஒளிரும்படி செய்வது பிந்து கலையாதலின் அக்கலை வெண்கொடிபோன்று மேல் எழும்புவதையே கொடியேறுதல் எனும் செய்கையினால், மெய்வகையுணர்ந்த விழுமியோர் விளக்கியுள்ளார். கொடியேறுதல் மூலம் தெய்வப் பண்புகள் திகழ்ந்து, வசியும் வளனும் சுரக்க விழுமிது நிகழ்தலென்பது பெருந் துறைக் கோன் 'கோலம் பொலியுங் கொடி' என விதந்துரைக்குந் தீந்தமிழ்க் கிளவியான் விளங்கக் கண்டு கொள்ளப்படும். மற்றும் அக்கொடி அஞ்ஞான தத்துவங்கள் ஒடுங்கி அடங்கும்படியாய், பிரணவத்தின் மேல் பாகத்தில் துண்ணென மிளிர்ந்து மிக்க எழில் நலத்தோடு காட்டும் மாசற்ற அதோமுகத்திலிருந்து மேலேறும் பரவிந்துவின் கொடியாகும் என மெய் யுணர்வு கடைப்பிடிக்கலுறுவார் கருதுவதால், கொடி யேறுதல் மூலம் தெய்வத் தன்மை சுடர் விட்டு விளங்கும் வகையில் விழுத்தகை உண்மைகளும் புலனாதல் தேறப்படும். ஆளுடைய அடிகள் இறைவனது கொடியினைப் பற்றி

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந் துறைக் கோன்
கோலம் பொலியுங் கொடி கூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்னமேல் விளங்கி யேர்காட்டுங்
கோதிலா ஏறுங் கொடி

என அழகுற இசைத்து அருளிச் செய்ததை உன்னுந்தோறும் தெளிவான விளக்கம் சிலை நிலையாக எழுவது காணலுறுவார் அறிந்து கொள்வர்.

உணர்வாட்சியிலும் அருளாட்சியிலும் தலைப்பட்டு நுண்மாண் நுழைபுலம் விழைந்து மாஞெளி விளக்கம் கைவரப்பெற்ற இலக்கிய நல்லிசைச் சான்றோர் கொடிகள் காற்றில் நெளிந்து நெளிந்து அசைந் தலையும் நிலையினைக் கண்டு பேரிறும்பூதுகொண்டு பொருண்மைதோன்ற வெகு ஆர்வமுடன் மகிழ்ந்திசைப்பர். இனிதாக அசைந்து விளங்கும் கொடிகளின் இயல்பில் தோய்ந்த நாவலர்தம் மெய்யுரைகள் பலவாயினும், ஒன்றினை எடுத்துக் காட்டல் ஈண்டைக்குப் பொருத்தமுடைத்து. உலக இயற்கையில் நிகழ்வனவற்றை கொடி மேலேற்றி ஓராங்கு திரளப் புனைந்து கவினுற இளங்கோவடிகள் கூறியுள்ளதுமட்டும் அறிதற்பாற்று. தென்னன் தொன்னகருக்கு, கண்ணகியும் கோவலனும் ஏகுங்காலை புறமதிலில் உள்ள நெடுங்கொடி காதலர்க்குறும் துன்பத்தை எண்ணி 'மதுரைக்கண் வாரா தொழிவாய்' என அசைந்துக் காட்டுவது போலத் தோன்றியதென்பது

'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென்னபோல் மறித்துக் கைகாட்ட'

எனும் சிலப்பதிகார அடிகளால் உணர்ந்து கொள்ளப்படும். இலக்கியத்தின்கண் கொடியினைப் பற்றிய செய்யுட்கள் இன்னும் பல உளதாயினும் அவை விரிவஞ்சி விடப்பட்டலாயின.

இன்னணம் பலபடப் பாடல்சால் சிறப்புடையகொடி. உரிமை வாழ்வில் பெறலரியதான ஒண்மையினை மக்களுக்கு அளித்து மாட்சிமை எய்திச் சிறந்து யாவர்க்கும் பயன்படுதல் சான்று. வாழ்த்துக்கும் வணக்கத்துக்கும் உரிய நம் நாட்டுக் கொடியின் வரலாற்றினைப்பற்றி தெளிதல் இன்றியமையாதது.

நமது நாட்டுக் கொடியினை உருவாக்கின பெருமை, தாய்மையுடைய பெண்ணுடன் பொருந்தியுள்ளது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள.' அடக்கம், பொறுமை, தியாகம்—இவை மூன்றும் ஒருங்கே இழைந்திருக்கும் கலவையே பெண்மையாம். பெண்ணின் தண்மையினை மக்கள் தெளிந்து அறிய வில்லையேல், எங்கணும் உயிரில்லை : நுண்ணிய பொருளை உணரும் ஆற்றலில்லை : இறைமை யில்லை : அன்பு இல்லை : அமைதி நிலை இல்லை : விடுதலையு மில்லை. முதற்கண் நாட்டுக் கொடியை குணக்கில் அயல் நாட்டில் தங்கியிருந்த இந்திய மக்களின் நாப்பண் 1906-ம்ஆண்டில் உருவாக்கிக் கொடுத்தவர் திருவாட்டி ருசுதாம்சி காமா அம்மையார். இம் மாதரின் வீறு பெற்ற ஆண்மை உள்ளத்தில் எழுந்த இக்கொடி அம்மங்கையாரது சிந்தை போல் தூயது. காமா அம்மையார் எத்தகைய இடையூற்றிற்கும் இடையூருய் நின்று, எடுத்த காரியத்தை எளிதே நிறைவேற்றும் மனத்திண்மை யுடையவர். செய்தற்கரியனவற்றை சடுதியில் செய்து முடிக்கும் பேராற்றலு முடையார். ஆங்கிலேயரது ஆட்சித் திறன் நம் நாட்டு மக்களின் மானத்தினைக் கொன்று உயிரியல்புகளையும் ஒடுக்கி ஊன அறிவினை விளைவித்து பிறவிப் பயனைப் பாழாக்கிய தென்று அவ் வாட்சிக்கு மாருக சொற் பெருக்காற்றினமையால் இவ் வம்மையார் நாடு கடத்தப்பட்டார். இவர் மேனுட்டில் வாழ்ந்தாலும் அந்நாட்டினர், இந்திய மக்களது பெருமித உணர்ச்சியின் மேம்பாட்டினை உணருமாறு இந்திய நாட்டின் விடுதலைக்கு அரும் பணி புரிந்து வந்தார். அயல் நாட்டில் வதிந்த நம் மக்கள், இக் கொடியினைப் போற்றினுலும் இந்திய நாட்டுப் பொது மக்கள் ஏற்கும் வகையில் அக் கொடி சிறந்த வளநுகர்வினைப் பெறவில்லை. அக் கொடி பெண்மையின் உறுப்புகளாகிய அடக்கம், பொறுமை, தியாகம் முதலியவற்றைக் குறிக்கும் செந் நிறக் காவிப்பட்டை வெண்ணிறப் பட்டை, பசுமை நிறப் பட்டை முதலியவற்றைக் கொண்டுள்ளது. செந் நிறம் உள்ள பகுதியில் எட்டு விண் மீன்களும், பச்சை நிறம் உள்ள பகுதியில், இடப் புறத்தே செஞ் ஞாயிறும் வலப் புறத்தே இள மதியமும் அமைக்கப்பட்டன. வெண்மைப் பகுதியில் 'வந்தே மாதரம்' எனும் சொல், கொடி வழங்கும் தேயங்களில் அவ் வவ் மொழிகளுக் கேற்ப இடம் பெற்றுளது.

1916-ஆம் ஆண்டில் பெசண்டு அம்மையார் உரிமை வாழ்வின் இயக்கத்தைத் தொடங்கி இணையற்ற சொற் போர் இயற்றி வந்த காலத்தில் இக் கொடி மாறுதலடைய நேர்ந்தது. இக் கொடியில் ஐந்து செந் நிறப் பட்டைகளும் நான்கு பசுமைப் பட்டைகளும் ஒன்றின் பின்னொன்றாக மாறி அமைந்துள்ளன. இக் கொடியின் இடது தலைப்பின் கண் ஆங்கிலேயரது கொடியும், இடைநிலைக் கண் ஏழு விண் மீன்களும் அழகு கொழுகத் திகழ்ந்தன. இக் கொடி சிறிது காலம் வரை நந் நாட்டு மக்களில் பெரும் பாலோ ரால் ஒரு தனிச் சிறப்புடையதாய் போற்றப்பட்டு வந்துள்ளது.

அறிவான் நிறைந்த மக்கள் நாட்டுப் பற்றில் ஏது நடை கடைப் பிடிப்பவராய் விளங்குங் காலை, பிற தேயத் துக் கொடி நந் நாட்டுக் கொடியில் இடம் பெற்றிருப்பதை விரும்பாது கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். பொது மக்கள் பெரும் பான்மையாக இயற்கையிற் படியும் நீர ராதலின், இக் கிளர்ச்சியில் தம் மியல்பு புலப் படுத்தி அடிமை உணர்வு அகன் றொழிந்திட, உரிமைப் போர் உணர்ச்சி யில் வீறு கொண்டனர். விடுதலைப் போராட்ட வுணர்வு பொது மக்கள் சார்பில் இயங்கி ஊட்டம் பெற்று வருங் காலத்தில் காந்தி யடிகள், இயக்கம், இழுக்கமும் வழுக்க நிலையும் எய்தி இடருறு வண்ணம் அறப்போ ரொன்றினை தோற்றுவித்தனர். அவரது ஆணைவழி, பொது மக்களில் நன் மக்களாவார், தொண்டர் படையினை நிறுவவே, வாய்மை, உறுகண் செய்யாமை, மனத்தூய்மை, உண்மைப் பணி செய்து பயன் கருதாமை முதலியவற்றை ஆயுதங்க ளாகக் கொண்டு வலி பொருந்திய ஏகாதிபத்திய அரசியல் முறையினை காந்தி யடிகள் எதிர்த்தார்.

அறப் போருடற்றும் உணர்ச்சியால், தமக்கென வாழாப் பிறர்க்குரி யாண்மை, பொது மக்கள் பால் வேரூன்றவே, மக்கள் நாட்டுப் புகழின் பொருட்டு தமக்கு எத்தகைய துன்பம் வரினும் அத்தால் மனங் கவலாது தம் முயிரையும் கொடுக்க உறுதி கொண்டனர். இவ் வமயத் திற்றான் பழைய கொடி மாறுபாடடைந்தது. கொடியினில் முறையே ஒன்றின் பின்னொன்றாக வெண்மை, பசுமை, செந் நிறங்கள் இடம் பெற்றன. கொடியின் வண்ணங்களிலும்

பொருந்தத் தோன்றும்படி இராட்டையின் உருவம் அமைக்கப்பட்டது. செய்யும் தொழில்களில் நிகரற்று நிற்கும் நெய்யும் தொழிலின் நலமும் சிறப்பும் துணிதற்கு இராட்டை, கொடியின்கண் விளக்கமுற்றுள்ளது. மற்றும் வாழ்க்கையை, உயிர்ப் பியல்பு மிக்க இயற்கையோடு செயற்கை மூலம் ஒன்றுபடுத்தி புலன் மன மாட்சிமையினை மக்களுக்கு ஆக்கமுற புகட்டுவதற்கும் இராட்டை ஒரு அறிகுறியாய் விளங்கி மேம் படுதற்குரியதா யிருந்தது. இந் நுண்மாண் இனிய கொடி ஈரைந்து ஆண்டுகளாக பொது மக்கள் மனத்தில் பெரிதுலாவி அன்னுரை இன்புறுத்தா நின்றது.

காலத்திற் கேற்ப மாறுபாடுற்ற இக் கொடி நாளடை வில் நாட்டு உரிமை யுணர்வினை உலகியல் வழக்காய் இயங் கச் செய்து பொது மக்கள் ஆதரவில் நிலை பெற்று உயிர்த் தன்மை மேவ வீறி விளங்கியது. இவ் வண்ணம் கொடி தனதுயிர்ப்பில் வன்மை யுற்று மக்களுக்குப் பயன் றந்து உலவி வருங் காலையில் வையத்தே வாழ்வாங்கு வாழ்தற் குரிய மக்களின் தேவைகளையும் நடை முறைகளையும் மக்கள் பாலே முன் வைத்து ஆய்ந்து ஏற்பன பகுத்தறியும் கடைப் பிடிப்பினைப் பின் பற்றும் நலனில் மக்கள் பெரிதும் விழிப் புடைய ராயினர்.

இவ்வாறு கொடி மக்களுக்கு எக்காலும் உறு கருவி யாய் விளங்கி பயன் றருங் காலத்து, கொடியில் சில மாறு தல்கள் மக்களின் மனப்பான்மைக்குப் பொருந்த ஏற்பட லாயிற்று. செந் நிறக் காவி நிறம் மேலேயும், வெண்மை நிறம் அதற்கப்பாலும், பசுமை நிறம் அதன் கீழ் இடத்தி லும் கொடியில் இடம் பெற்றன. இடையிலுள்ள வெண்மை நிறத்தில் மட்டும் இராட்டை நீல நிறத்தில் விளங்கப் பொலிவுற்றது. இக் கொடியின் கீழ் நாட்டு மக்கள் முழு உரிமை வாழ்வு பெறும் வரையில், ஆண்டுகள் தோறும் கொடி வணக்கம் கொண்டாடி பல்வகை உரிமை யுணர்வில் முயற்சியும் பயிற்சியு முடையராய் வாழ் நாட் கழித்து வருவா ராயினர். காந்தி யடிகளும் இக் கொடிக்கு யாதொரு ஊறும் நேராதவாறு தனது அறிவானும், நடை யானும், தக வொழுக்கத்து நேர்மையானும் அதனைப் பேணி அக் கொடியின் கீழ், மக்களை வேற்றுமையின்றி

பொது நலத்திற்காக வாழ்வியல் மாசடையாவாறு வாழச் செய்து நல்லொழுக்க நெறியின் நுண்ணிய மாண்பினையும் அளவினையும் புதிது தேர்ந்து புலப்படுத்தினர். காந்தியடிகள் இத் தகையவாறு மக்களுக்கு இடைவிடாது கண்ணுறுத்தி வந்ததால், வாழ்வியல் நடை, நாட்டு மக்களின்பால் திட்ட வட்டமாக இனிது தொடங்கி வர, நாட்டுப் பொது மக்கள் குரல் இறைவன் பேரொலியாய் வயங்கி உலகுக்கே ஆணை பிறப்பித்து உறுத்தி யருளும் வகை பெற்றது. இங்ஙனம் உருவாகிய பேரியக்கம் இயலாற்றல் கொள்ளவே நம் நாடு உரிமை நாடாக (15—8—47). சருவசித்து ஆண்டு ஆடி மாதத்து முப்பதாம் நாளில் விளங்கியது.

நம் நாடு உரிமை நாடாக விளங்கும் வரை நாட்டு மக்களின் பெரும் பகுதியினரால் போற்றப்படும் மூன்று வண்ணங்களை யுடைய கொடி, இனி தனிப்பட்ட ஒரு சாராரின் கொடியாக இருத்தல் சாலா தென நாட்டு மக்களில் ஒள்ளறிவினர் கருதி, உயிர்ப்பு மேவும் வாழ்க்கை பெரிதும் முற் போக்கும் கவர்ச்சியும் திருத்தமும் கொள்ள நாட்டுப் பொதுக் கொடியினைப் புதிதாக அமைப்பதில் தெளிவு கண்டு நாட்டங் கொண்டனர். கொடியின் இரு புறத்திலும் காணுங் காலை இராட்டை ஒரே விதமான காட்சியினை அளிக்காதது அதனை மேற் போக்காகக் காணலுறுவார் தெளிந்து கொள்வார். இத் தகைய காட்சி ஊறு கொடிக்கு சிறிதும் ஏற்புடைத் தாகா தென, சிறந்தது பழகும் தெளிவுடைய மக்கள் கொடியினில் இறவா உயிர்க்கலை மேவவும் நாட்டு மக்கள் நாளும் முயற்சி யவியாது பெருமிதங் கொள்ளுமாறு வாழ் வளித்து வரவும், குறையினை சுழற்றி நீக்கி அறங் காத்து அருள் முறை வழங்குதற்குரிய சக்கரத்தினை கொடியின் நடுவிலுள்ள வெண்ணிறப் பட்டையில் நந்தா மணி விளக்கமாய்த் திகழ வைத்தனர்.

அன்பெனும் உயிரியல்பு மக்கள் பால் கிளர்ந் தோங்க பட்டொளி வீசி வீறிட்டுப் பறக்கும் மூன்று வண்ணத்தாலாய நந் நாட்டுக் கொடி ஆதிக் கண் அறப் போராட்டத்திற்குரிய கொடியாக இயங்கி இதுபோது உரிமைப் போருடற்றி எளிதில் எய்துதற்கரிய வெற்றிக் கொடியாக வயங்கும் சிறப்பெய்தி யுள்ளது. இக் கொடியின் கீழ் உரிமை வாழ்வு உயிர்ப்பியல்பு கொள்ள நாட்டு மக்கள்

நுவல வொண்ணு இடையூறுகளையும் இடுக்கண்களும் ஏற்றதும் எண்ணமிட்டுப் பார்க்கின் அறிவு பேதுற்று அலமரலுறும்.

நங் நாட்டுக் கொடி, நல் வாழ்க்கை நிலைகளை நமக்கு அறிவிக்க வல்லதாய்த் திகழ்கின்றது. இக் கொடியின் பால் விளங்கும் வண்ணங்கள் வியப்பினையும் ஆராய்ச்சியினையும் விளக்க வல்லதா யுள்ளது. மற்றும் உயிர் உடல் உடைமை முதலானவற்றை நாட்டுப் பணிக்கே உரிமை யாக்கும் நம் நாட்டு மக்களது சிறை நீங்கிய விரிந்த மங்கல வாழ்வி னியல்பையும் மாண்பினையும் இக் கொடி நன்கு புலப்படுத்துவதாயிற்று. நாட்டு மக்களது நலப் பாது காப்பிற் காகிய இக் கொடி மூன்றடி நீளம் இரண்டடி அகலங் கொண்ட சிறு துணியா லாகினும், அக் கொடியின் வண்ணங்களின் வழி மென்மையாக அசைந்து துணிவும் வன்மையும் விளங்க துள்ளிக் குதிக்கும் நுண் பொருள்கள் பலவுள. வண்ணங்களில் கருக் கொண்டு விளங்கும் அப் பொருள்களின் வன்மை மென்மை தேறுதல் ஈண்டைக்கு இன்றியமையாதது.

கொடியினில் திகழும் செங் நிறக் காவிப் பட்டை மக்களது அற வுணர்வினையும், செங் நெறி பால் படரும் ஒழுக்கலாறுகளையும், துறவு நிலைக் கண் அமையும் தியாகத் தோடு விரவித் திகழும் அடக்கத்தினையும் உள்ளச் செம்மை யினையும் பிறர்க்குப் புலப்படுத்தி இயக்கும் வகையினைக் குறிக்கும்.

புலனும் மனனும் மாட்சிமை யுறுதற் கேற்ற உண்மை அறிவின் இயக்கத்தினையும், உயிர்ப்பியல்பு கொண்டு எளிய நிலையில் நிலையுறும் மெய்யின்ப வாழ்வினையும் இயக்கி, அவைகளை ஏது நடையாலே உலகிற் பிறர்க்கு ஊட்டும் அருமை வாய்ந்தது வெண்ணிறப் பட்டையின் தோற்றம். வெண்ணிறப் பகுதியின் கண் ணுள்ள சக்கரம், ஏதுநடை யான் மேவாங் கமையும் அற நெறி யாவருக்கும் ஒரு படித் தாய் உண்மை யியல் வழாது இயலாற்ற லுற்று எதிர் நிற்ப தெதூஉ மின்றி இயக்கமும் முற் போக்கும் காணச் சுழலும் முறையினை வழி துறையாக வகைப் படுத்தி விடுதற் கேற்ற அறி குறியாய் விளங்கி, காட்சி வகையானும் கருத்து வகை

யானும் கொடியினை அழகு படுத்தும் வாய்ப்பு கொண்டுள்ளது.

அறத் துறை வாழ்க்கை முறையினை விளக்கும் வெண்ணிறப் பட்டையின் கீழ் வயங்கும் பசுமை நிறம் நமது நாட்டின் இயற்கை எழில் மலர்ச்சியையும், இணையற்ற பைங் கூழ் வளன் எஞ் ஞான்றும் செழித்திருத்தலையும் காட்டும். மற்றும், அப் பசுமை நிறம், எளி முறையுணர்ந்து பயிர் செய்து ஏராளமான கூல வகைகளைக் குவித்து பலரோடு அளவுடன் இன்ப மார்ந்து உண்ணும் பெரு நல வாழ்வியலை கையாளத் தக்க பொருள் நிலை வாழ்க்கைத் தெளிவில் மக்களைச் செயலாற்றுப் படுத்தி மக்கள் வாழ்க்கையினை வளர்ச்சி யுறச் செய்கிறது. எனவே, இக் கொடியினைக் கண்ட ஞான்று பல்லுணர்வுகள் பல் வகையானும் வீறிட்டுக் கிளர்ந் தெழ நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாய உண்மைகள் துலங்குகின்றன வென்பது குறிக்கற் பாற்று.

உண்மை நலனும் இயற்கை மாட்சியுங் கொண்டு இத் துணைச் செவ்விதாய்த் தேறிச் சிறந்த நந் நாட்டுக் கொடியினை மக்கள் உயிரினும் சிறந்ததாகக் கருதி வணங்கிப் போற்றுதல் சீரிது. இக் கொடி மக்களின் உணர்வுகளைப் போற்றி நற் பணி வேட்கையில் மக்களை ஈடுபடுத்திச் செயலாற்றும் இயலழகினை உருவாக்க வல்ல அருமை யுடையதாய்த் திகழ்கின்றது. இடக் கரையும் அன்பானும் அறிவானும் அடக்கி இனியராகச் செய்யும் ஆற்றலையும் ஆண்மையினையும் சிறப்புரிமையாக இக் கொடி வாய்ந்துள்ள தாதலான் பிற நாட்டாருடன் துளக்க லாகாத் துணைமை யெய்தி யிருக்க இக் கொடி இசைவு கொள்ளும் அசைதலை யுடையது. மற்றும் உரிமை வாழ்வு வீறுடன் ஓம்பும் மக்களுக்கு நம் நாடு நயப் பாடும் தொடர் பாடும் கொண்டு கேண்மையுடன், தங் கோள் விடாது, ஆன்ற அறிவு நலத்தால் துணைபுரிந்து இணைந் தமைந்து இனி தொழுகும் உறுதியினை நம் நாட்டுக் கொடி குறிக் கோளாகக் கொண்டுள்ளது இனிது தேறப்படும்.

இவ்வாறு குற்ற மற்ற உணர் வாற்றலையும் ஊறற்ற பெரு வாழ் வினையும் உலகத்து மக்களுக்குப் பயந் தளித்து,

பொருந்துமா? (10)

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

வான் என்ற இச் சொல்லிற்கு அகர வரிசையில் பல பொருள் கொடுக்கப்பெற்றுள்ளன. அவையாவன,

1. ஆகாயம் 2. மேகம் 3. தேவருலகு
4. பெருமை 5. அழகு 6. இடி 7. சிறப்பு.

1. வான் என்ற சொல்லுக்கு ஆகாயம் என்பதே முதலில் உண்டான பொருள்.

2. ஆகாயத்தின்கண் மேகம் இருப்பதால் இட ஆகு பெயராய் மேகத்தைக் குறித்தது.

3. ஆகாயத்தின் மேலே தேவருலகம் இருக்கிறது என்பது நூற் கொள்கை. ஆகையால் தேவருலகு என்ற பொருள் வந்தது.

4. மற்றை நிலம், நீர், தீ, காற்று நான்கையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதால் பெருமை என்ற பொருள் பெற்றது.

5. வான் நீல நிறமாய் அழகாகக் காணப்படுவதால் அழகு.

6. வானின்கண் இடிப்பதால் இடி எனப் பெற்றது.

7. வான் பெருமை காரணமாய்ச் சிறப்பு.

ஆக இப் பொருள்களில் வந்துள்ளன. பொருந்துமா. சிந்திக்க.

நங் நாட்டு மக்களுக்கு உயிர் நிலையாகத் திகழ்ந்து கடவுட்டன்மையை விளங்கச் செய்யும் உரு வெழில் கொண்ட இக் கொடி, வணக்கத்திற்குரிய தாதலை நன்கு தேற, நங் நாட்டுக் கொடியின் தெய்வ மாட்சியும், பறந்து செல்லுமிடங் தோறும் வாகை மிலைந்து வீறி விளங்கும் இயற்கை ஆற்றலும் புலனும். எனவே, நலன் பல பொதிந்து எழில் கனியத் திகழும் இக் கொடியினை நெறி முறைப்படி ஏற்றுப் போற்றி அதன் கீழ், மக்கள் வேற்றுமை யின்றி ஒருங்கு நிலவி வாழ்ந்து வரின், அன்னார் ஆற்றலும், இனிமையும், வீறும், வளனும், அறிவு வளர்ச்சியும் தெளிவுங் கைவரலுற்று, வேண்டிய வேண்டியாங் கெய்துவ ரென்பது திண்ணம்.

உரைநூல்.

கனவு.

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்.
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

நனவின்கண் பல்வேறு வகைப்பட்ட பொருள்களைக் கண் கூடாகக் காண்டல் போலக் கனவின்கண் உண்மை என்று நினைக்கும் வண்ணம் காணுதலே யாகும். இதனை, "இரவு கண்டதொரு கனு நன வெனத் திகழ்ந்த தென்ன, வொன்று நின்று நவிலுமே" (மோகவதைப் பரணி) எனவும், "நனவே போலக் கனவகத் துரைத்தேன்." (மணிமேகலை) எனவும் வருவன வற்றால் உணரலாம்.

இக் கனவு திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், பெரிய புராணம் ஆகிய பல நூல்களிலும் பல ஆசிரியர்களாலும் குறிக்கப்பெற்று ஒப்புக்கொள்ளப்பட்ட தொன்றே யாம்.

இக் கனவு, (1) நினைவு மிகுதியாலும், (2) உடல் நிலையாலும், (3) ஊழ்வினையாலும், (4) அருளாலும் உண்டாகும் என்று தெரிகிறது.

I. நினைவு மிகுதியால் ஏற்படுவது.

திருக்குறள் கஉஉ ஆம் அதிகாரம், 'கனவு நிலை யுரைத்தல்' என்றதற்குப் பரிமேலழகர் '**நனவின் கண் நினைவும் மிகுதியாற் கண்டது**' என்று குறிக்கின்றார்.

மக்களில் அவரவர்களுடைய நினைவிற்குத் தக்கவாறு, மாணவப் பருவத்தில் விளையாடும் விளையாட்டும், அல்லது படிப்பைப்பற்றிய பேச்சும், காளைப் பருவத்தார்களாகிய மக்கள் ஒருவரை ஒருவர் நட்புற்றுப் பேசுதல் போலவும், பகைமை யுடையா ரிருவர் ஒருவரை ஒருவர் சண்டையிட்டுக்கொள்ளுதல் போலவும், ஆலய வழிபாட்டில் அழுந்திய உள்ளத்தாராய்

உள்ளார்க்குக் கடவுளுருவங்களைக் கண்டு களிப்பதுடன் அருளு தல் போலவும், கனவின்கண் காண்டல் இயல்பு, இவை அவ ரவர்களுடைய பருவத்திற் கேற்றவாறு முன் உள்ள எண்ண மிகுதியைக் கொண்டே இக் கனவு நினைவு மிகுதியால் உண்டா யது என்று துணிதற் பாலது.

II. உடல் நிலையால் கனவு உண்டாவதுண்டு.

காற்று (வாயு), மிகுதியான உடலினர் ஆகாயத்திற் பறத் தல், ஓடல் முதலியன காணுவர். நெருப்பு (பித்தம்) மிகுதியான உடலினர் தீப் பற்றல் முதலியன காண்பர். தண்ணீர் (கபம்) மிகையான உடலினர் தாமரைத் தடாகம் முதலியன காண்பர்.

'கனவினிற் காணும் வண்ணங் கபத்தினுர் கமலவாவி" என்று தொடரும் செய்யுளால் மேற் கூறியவை நிலைபெறும் என்க.

தங்கள் தங்கள் உடல் நிலைகளைக் கொண்டு இக் கனவு உண்டாயிற்று எனத் தெரிந்துகொள்ளலாம் என்பது மிகை யாகாது.

III. விதியாலுண்டாகும் கனவு.

கனவு விதியால் உண்டாகும் 'கங்குல், கள்ளிற்கூர் துயிலிற், காணு நண் பொருள் காணுங் கொல்லோ, மெல்லத் தான் விதி யாற் காட்டுஞ் செயலினை விலக்கலாமோ' என்று அதிவீரராம பாண்டியர் நைடதத்தின் கண் விளக்கி யிருப்பதாலும்,

'துயிலில வாதலாற் கனவு தோன்றல
அயில் வழி யொரு கனவமைந்து நோக்கினேன்
பயில்வன பழுதில'

எனக் கம்பர் இராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் 39 முதல் 48, 50, 52 முடிய செய்யுட்களின் மூலம் உணர்த்துகின்றமை யாலும் உணரக் கூடியதே.

கனு நூல் ஒன்று உள்ளது. இதனை இயற்றியவர் யாவர் என்பது தெரியவில்லை. இந் நூலின்கண் நன்மையானவை இவை என்பதும், தீமையானவை இவை என்பதும், தீமையை விளக்குவதற்கு வேண்டிய வழி இவை என்பதும், ஒவ்வொரு யாமத்திற் காணும் கனவு எத்தனை நாளில் பயன் றரும் என்ப தும் கூறப்பட்டுள்ளன.

நன்மை

பானுமதி தேவர் மலை வேலைந்தி கூபம்
பைம்பொன் மணி தந்தைமக வன்னை நரர் மாதர்
ஆனை பரிதே ரெருது கோயின் மறையோர்கள்,
அம்புய மிறைச்சி கனி பூமாமொ டன்னம்
மானினொடு கோழிமது சோரி மலர் நீறும்
மன்னுகடை மோரொடு பருத்தியு நலத் தான்
ஏனையுள வெள்ளை சப மானிரைக டீபம்
என்று இவை காண லினிதென்பர் கனவின்னே.

தீமை.

சுராபாடலோடல் கருநாக நீசர் துறவோரு மாயு மறவோர்
கரி நாய் குரங்கு நரிபே யரக்கர் கழு கோடு காக மிகையும்
வாவரசி தேனு மத யானை தேவ மறையோர் களலறி மொழியுங்
கரிதான யாவு மிகவே கனவி னிடை காண நன்மை யிலையால்.

பலன்.

பன்னி ரண்டாறு மூன்று பகரு மொன்றரை மாதத்தின்
முன்னுறும் யாமமாதி முறையினல் வரும் யாமங்கள்
மன்னிய வெழு நாளென்ன வைகறைப் பொழுது தன்னில்
பன்னிய கனக் கண்டார்க்குப் பலாபலன் பலிக்கு மன்றே.

கனவிற் குற்றம் ஒழிதற் குரியவை.

அரசுறு பூசை செய்தல் அந்தணர்க் கமுது நல்கல்
கருதிய தானம் பண்ணல் கங்கையிற் றீர்த்த மாடல்
வாமுறு சுரபி தொட்டு வணங்கல் பாரத நூல் கேட்டல்
புரையுறு கனவிற் குற்றம் போமென மொழிவ ரன்றே.

எனக் கன நூல் கூறுவனவற்று லுணர்க. முதற் கூறியன இரண்டும் பயனில்லை. பின் னிரண்டும் பயனுடையன. உளம், உடல் நல்ல நிலையில் உள்ளவர்க் குண்டாகும் கனவே பயனுடையது என்றறிக.

IV. இனி, அருளால் உண்டாகும் கனவு.

இக் கனவு யாவர்க்கும் உண்டாகாது. பற்றற்ற பெரியோர்க்கே உண்டாகும்.

இறை யருளால் உண்டாவதால் உடன் பயனளிக்கும் ஆற்றல் வாய்ந்தது. கண்ணப்பர் புராணம். 156, 7.

'அன்றிரவு கனவின் கணருள் முனிவர் தம் பாலே
.................................எழுந்தருளி...............கேளென்று'

'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்க லன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்தார்.'

என வருவனவற்றாலும்,

'பள்ளிகொள் பொழுதி தயலிக்கிப் பாமர் தாங் கனவில்
வெள்ள நீர்ச் சடையொடு நின்ற மேனியைக் காட்டி
யுள்ளம் வைத்தெம்மை யூதிமூன்ற மிர்தபா லொழியக்
கொள்ளு மிப்புறஞ் சிலம்பியான் கொப்புளென் றருள.'

என்று திருநீலகண்ட நாயனார் புராணச் செய்யுளாலும். தண்டி யடிகள் புராணச் செய்யுட்களாலும் அறிக.

கனவினால் முன் பிறப்பு அடையும் பயன் முதலியனவற்றை அறியலாம் என்பர் பெரியோர்.

இதுகாறும் கூறியவற்றால், கனவு உண்டாவது இயல்பென்றும், உள நிலையாலும், உடல் நிலையாலும், ஊழ்வினையினாலும், அருளாலும் உண்டாகும் என்றும், முன்னிரண்டும் பயனில்லை என்றும், ஊழ்வினையாற் றோன்றுவன யாமத்திற் கேற்றவாறு பயனளிக்கும் என்றும், தீக் கனவு காணின் ஆலய வழிபாடு முதலியவற்றாற் றீமை விலகும் என்றும், அருட் கனவு கண்டவுடன் அடியார்க்குக் கண்டவாறே பயனளிக்கும் ஆற்றலுடையது என்றும் கூறியனவாகக் குறித்துணர்க. கனவின்கண் உள்ள கருவிகளை முன்னரே உரைத்தாம். ஆண்டுக் காண்க.

இசைத் தமிழ்

கும்பகோணம், சங்கீதம் திரு. ப. சுந்தரேசன்,
இசை ஆசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி : துணர் உ௰சு, மலர் எ, பக்கம் 228)

கிளையலகும் நட்பலகும்

ஆசிரியர் :—எல்லா மாணவர்களும் கிளையலகு கூட்டுக் கணித முறையை நன்கு உணர்ந்திருப்பீர்கள். இனி, நாம் முன்னர்க் கூறியது போன்று நட்பலகமைதியை நன்கு அறிய வேண்டுமன்றோ?

மாணவர்கள் :—ஆம். ஆம்.

ஆ :—(இரண்டாங் கருவி மாணவனை நோக்கி) மாணவ, நட்பலகின் எண் என்ன?

இ. மா :—ஐயா, ஒன்பது.

ஆ :—ஆம், ஒன்பதலகுள்ள நரம்பு நின் கருவியில் எந்த இசை நரம்பாக நிற்கின்றது?

மா :—ஐயா, முதற் கருவியின் அமைப்பின்வழி எனது கருவியில் குரலின் அந்தர நரம்பிற்கு அலகு ஒன்பது.

ஆ :—ஆம், இங்கு இன்னும் படுவதோரமைப்பைக் கூற விரும்புகின்றேன். முதற் கருவியில் ஒன்பது அலகுகள் கொண்ட நரம்பு ஏதேனும் உளதோ?

மு. மா :—இல்லை. ஒன்பது அலகு கொண்ட நரம்பு எனது கருவியில் இல்லை.

ஆ :—மூன்றாங் கருவியில் ஏதேனும் உளதோ?

மூ. மா :—ஐயா. எனது கருவியிலும் ஒன்பது அலகுகளைக் கொண்ட நரம்பு இல்லை.

ஆ :—நான்காங் கருவியில்?

நா. மா :—ஐயா, எனது கருவியில் தாரத்தினந்தர நரம்பு ஒன்ப தலகு பெற்று நிற்கின்றது.

ஆ :—ஆம். இவை யாவும் நமக்குப் பல்வேறு அடிப்படையான இசை யமைதியின் நுட்பங்களைக் காட்டத் தக்கனவாக உள. இனி, இரண்டாங் கருவி மாணவர், நட்பலகாகிய ஒன்ப தினை ஒன்ப தொன்பதாகக் கூட்டித் தான அலகின் கூட்டுத் தொகை உ௰உ-ற்கு மேற்பட்டால் அதனைக் கழித்துக் கூறிவருவாராக.

இ. மா :—ஐயா. அப்படியே கூறி வருகின்றேன். நட்பலகு ஒன்பது. ஒன்பதோ டொன்பது கூட்ட, பதினெட்டு. இவ் வலகுகள் எனது கருவியில் உழையின் அந்தரத்திற் குரியன வாகும். பதினெட்டோ டொன்பது கூட்ட இருபத்தேழு. இவற்றுள் தான அலகுகள் இருபத்திரண்டு கழிபெற ஐந் தலகு எஞ்சும். ஐந்து அலகு தாரத்தினந்தரத்திற் குரிய தாகும். ஐந்தோ டொன்பதினைக் கூட்டப் பதினான்கலகாகிக் கைக்கிளை நரம்பிற் குரியதாகும். இனி, பதினான்கோடு ஒன்பதினைக் கூட்ட இருபத்துமூன் றலகாகும். இவ்வலகு களை உடைத்தாய நரம்பு விளரி யாகும். இந் நரம்பு எனது கருவியில் கடையாய நரம்பாகி நிற்கின்றது. நிற்க, ஐயா, இங்கு அடியேனுக்கொரு நினைவு தோன்றுகின்றது. முன் னர், கிளை முறையிலும் இருபத்துமூன் றலகு கண்டோம். அங்கும் யான் இந் நரம்பைக் கூறியுள்ளேன். ஆகையால் இதன் கருத்தறிய விரும்புகின்றேன்.

ஆ :—ஆம். மகிழ்கின்றோம். நீவிர் கூறிய இருபத்துமூன் றலகு தான அலகின் கூட்டுத் தொகுதிக்கு ஓரலகு கூடி நிற்ப தால், நம்மால் இங்கு உணர்ந்தறியப்படுவது ஓரலகின் மதிப்பினையே யாம். மிகவும் நுட்பமான ஒலியானதால், நம் முன்னோர்கள் இதனை யறிந்தே விடுத்துப் பின்னர் ஓரலகின் இருபங்கினை, அதாவது, இரண்டலகைக் கிளை முறையிலும நட்பு முறையிலுங் கண்டு, அவற்றின் இரு வேறு மதிப்பினையும் உணர்ந்தனர். மேலும், இவ்வாறு அமைவுறும் நுட்ப அலகு முறையை எவனொருவன் உணர் கின்றானோ அன்னானை இசைத் தமிழ் வல்ல பேரறிவாள

னுகக் கருதினர். அவ்வாறுற்ற நுட்பம் யாவும் ஈண்டு விரிப்பிற் பெருகு மாதலான், பின்னரே கூறுகின்றேன். இனி, ஓரலகோடு முறையே ஒன்பது கூட்டிக் கூறி வருவாயாக.

இ. மா:—ஒன்று மொன்பதும் பத்து. இவ் வலகுக ளுள்ள நரம்பு துத்த நரம்பாகும். இனிப், பத்தும் ஒன்பதும், பத்தொன்பது. இளி நரம்பினலகுகள் பத்தொன்பதே. பத்தொன்பதும் ஒன்பதும் இருபத்தெட்டு. தான அலகுகளாம இருபத்திரண்டு கழிபெற ஆறலகு எஞ்சி நின்று, குரல் நரம்பாகின்றது. ஆறினோடு ஒன்பதினைக் கூட்டப் பதினைந்து. உழை நரம்பிற்குரிய அலகுகள் பதினைந்து. பதினைந்துடன் ஒன்பது கூட்ட இருபத்துநான்கு. இவற்றுள் தான அலகுகள் இருபத்திரண்டு கழிக்க எஞ்சுவது இரண்டலகு. இவ் விரண்டலகே என் கருவியிலமைந்த முதல் நரம்பாகிய தார நரம்பிற் குரியதாகும். இங்கும் ஒரு நுட்பம் அறிய வாய்ப்புளது. முன்னர்க் கிளை முறையில் வரப்பெற்ற இரண்டலகு நரம்பிற்கும் இந் நரம்பையே கூறினோம்.

ஆ. :—ஆம், ஆம், ஆம். முன்னர்க் கூறியது கிளை முறையான் பெற்ற இரண்டு அலகுகள். இங்கு நீவிர் கூறிவருவது நட்பு முறையானே வரும் இரண்டு அலகுகள். இவ் விரண்டும் இருவேறு மதிப்பினை யுடையனவாகும். பின்னர் இது பற்றிப் பேசுவோம். மேலே செல்க.

இ. மா:—இனி, இவ்விரண்டலகினோடு ஒன்பது கூட்டப் பதினோரலகு. இதற்குரிய நரம்பு எனது கருவியில் இல்லை.

ஆ:—இத் தகைமைத்தாகிய பதினோரலகு பற்றியும் முன்பு கூறியுள்ளோம்.

மூ. மா:—ஐயா, எனது கருவியில் குரலினந்தரத்திற்குப் பதினோரலகு.

ஆ. :—ஆம். மாணவர்களே, அறிந்தீர்களா? இரண்டாங் கருவியின் குரலந்தர நரம்பின் அலகாகிய ஒன்பதினைக் கொண்டு நட்பு முறையானே கணித்துச் செல்ல ஏற்ற பெற்றி வந்த பதினோரலகானது மூன்றாங் கருவியிலும் குரலின் அந்தர நரம்பிற்குரியதாக நிற்றலை அறிந்து உணர்தல் இன்றி

யமையாதது. இனி, மூன்றுங் கருவி மாணவரே கணித்தறிந்து கூறி வருவாராக.

மூ. மா:—பதினொன்றினோடு ஒன்பதினைக் கூட்ட இருபது. இவ் விருபது அலகுகள் எனது கருவியில் உழையின் அந்தரத்திற் குரியதாகும். பின்னர் இருபதினோடு ஒன்பது கூட்ட இருபத்தொன்பது. தான அலகுகள் இருபத்திரண்டு கழிபெற எஞ்சுவது ஏழலகு. இவ்வலகுகள் தாரத்தின் அந்தரத்திற் குரியனவாகும். இங்கு முதற் கருவியின் குரல் அந்தரத்திற்குரிய அலகுகள் ஏழெனக் கூறியதையும் நினைவூட்டுகின்றேன். இனி, ஏழினோடு ஒன்பது கூட்டப் பதினாறலகுகள். அடியேனது கருவியிலமைந்த கைக்கிளை நரம்பினலகு பதினாறே. பதினாறினோடு ஒன்பதினைச் சேர்க்க இருபத்தைந்து. இவற்றுள் தான அலகு இருபத்திரண்டைக் கழித்துக் காண எஞ்சு மலகு மூன்று. மூன்றலகுள்ள நரம்பு எனது கருவியில் அமையப் பெறவில்லை. ஆனால், முதற் கருவியில் கிளை முறையாக வமைந்த மூன்றலகு. தாரத்தினந்தரமாகி நிற்கின்றது. இஃதும் தாங்கள் கூறு முறைப்படி மதிப்பு வேறுபடும் நீர்மையதோ?

ஆ:—ஆம், ஆம். இவை யெலாம் மிக்க நுண்ணிய மதிப்பு வேறுபாடுடையன. இனி, நீவிர் கூறப்போகும் அலகுகளின் முறையினை உமது கருவியில் அமைந்துளதைக் கூறுவதோடு மற்றக் கருவிகளிலும் அமைந்துள்ளதையுங் கூறி வருவீராக!

மூ. மா:—ஆம். அப்படியே கூறிவருகின்றேன். இனி, மூன்றினோடு ஒன்பது கூட்டப் பன்னிரண்டு. எனது கருவியில் துத்த நரம்பிற் கலகு பனனிரண்டே. முதற் கருவியில் கைக்கிளை நரம்பிற்கும் அலகு பன்னிரண்டு. இங்கு எனது கருவிக்கும் முதற் கருவிக்கும் அலகமைதியின் இசை முறை பிறழாது துத்தம் கைக்கிளை யென வருவதும் அறிந்து கோடற்குரியது. பின்னர், பன்னிரண்டோடு ஒன்பது கூட்டிக் காண இருபத்தொன்று. எனது கருவியில் இளி நரம்பிற்குரிய அலகுகள் இருபத்தொன்று. முதற் கருவியில் ஏழாமிசையாகிய விளரி நரம்பிற்கும் அலகுகள் இருபத்தொன்று. இங்கும் இசை முறை வழுவாது இளி, விளரி யென நிற்றல் நோக்குதற்குரியது. இனி இருபத்தொன்றினோடு ஒன்பது கூட்ட முப்பது ஆகும். அவற்றுள் தான அலகுகள் இருபத்திரண்டு கழிபெற எஞ்சி நிற்பது எட்டலகு. இவ்வெட்டலகுகள் எனது கருவியில்

குரலுக் குரியதாகவும் முதற் கருவியில் துத்தத்திற்குரிய தாகவும் அமைந்து நிற்கின்றது. எட்டிேைடு ஒன்பது கூட்டப் பதினேழு. இவ்வலகுகள் எனது கருவியில் உழை நரம்பிற்கும் முதற் கருவியில் இளி நரம்பிற்கும் உரியவை. மேலும், பதினேழிேைடு ஒன்பதைக் கூட்ட இருபத்தாறு. இவற்றில் தான அலகுகள் இருபத்திரண்டு கழிய எஞ்சி நிற்பது நான்கலகே. இந்த நான்கு அலகுகள் எனது கருவி யில் முதல் நரம்பாகிய தார நரம்பிற்கும் முதற் கருவியில் குரல் நரம்பிற்கும் உரியதாகும். இனி நான்கிேைடு ஒன் பது கூட்டப் பதின்மூன்றலகு. இவ்வலகுத் தொகை கிளையலகாதலான், நமது கணித முறையும் முடிவு பெறு கின்றது.

ஆ :—ஆம். மிகவும் மகிழ்ச்சி பெறுகின்றோம். மாணவர்களே, இதுகாறும் நாம் கணித வாயிலாகக கண்ட இசை யலகு முறைகளையும் அவை கருவிகளில் பொருந்தி உள்ள தகை மையையும் ஒரு சிறிது முடிபுபடுத்திக் கூறுகின்றேன். முதற் கருவியின் அமைப்பு முழுதும் கிளை முறையில் அமைந் துளது. இரண்டாங் கருவியின் அமைப்பு கிளை முறை யிலும் நட்பு முறையிலும் அமைந்துள்ளது. மூன்றாங் கருவி நட்பு முறையானே அமைந்துளது. முதற் கருவி யைச் சார்ந்தே இரண்டாங் கருவி, மூன்றாங் கருவி, நான் காங் கருவி அமைக்கப்பெற்றதால், மேற் கூறப்பட்ட கணித முறைகளைக் காண வாய்ப்பேற்பட்டது. ஆயினும், ஒவ்வொரு கருவியிலும் தனித்தனியே கிளை முறையையும் நட்பு முறையையும கண்டு கொள்ளவும் வாய்ப்புக்கள் பல. இவற்றுட் சில வழக்காறு ஒழிந்தனவாகவும் இருத்தல் கூடும். ஆயினும், இம் முறையே முதன் முத லாகக் கணித் தறியப்பட்டது. பின்னர் இவ்வமைப்பின் அடிப்படையின் தகவு பற்றியே நரம்புகளைக் குறைத்தும் கூட்டியும் கருவிகளுக் கேற்பக் கட்டி ஒவ்வொன்றையும் வெவ்வேறு முறையாகக் கொள்ளப்பட்டது. எத்தகைய புத்தம் புதிய கருவிகளை ஆக்கிக்கொண்ட போதும் அவற் றுள் நரம்புகள் கிளை நட்பு முறையாகவே கட்டிப் பெற வேண்டும். இனி, பாலை முறைகளை நீங்கள் நன்கு அறி வீர்கள். ஆயினும் அது பற்றி ஐய மேற்படுங்கால் வந்து வினவினல் நாம் மகிழ்ச்சியோடு கூற ஆயத்தமாக இருக் கின்றோம். நமது அலகு முறைகள் இத்துடன் முடிவு பெறுகின்றன. நலம், எல்லோரும் சென்று வருக.

பிழை திருத்தம்

இசைத் தமிழ்

துணர் உ௰௬, மலர் எ.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
199	௰௪	கூட்டுமுறைறையும்	கூட்டுமுறையையும்
,,	௰௬, உ௰	தானங்களெனக்களையும்	தானங்களையும்
,,	உ௬	அலகு கண்களின்	அலகு எண்களின்
225	உ௪	கூட்டிப் பார்க்கலாம்	கூட்டு, பார்க்கலாம்
227	உஅ	என்றும் உண்மையே	என்ற உண்மையே
228	உ௪	நூல்களில்	நரம்களில்

திருத்தம்.

சென்ற விகிருதி—ஐப்பசித் தமிழ்ப்பொழில் 197 ஆம் பக்கத்தில் கலைமகள் விழா நிகழ்ச்சியில் இரண்டிடங்களில் வரும் சொற்றொடர்களில் "வீரராகவ உயர்நிலைப் பள்ளி" என்பதை "வீரராகவ பிள்ளை உயர்நிலைப் பள்ளி" எனப் படிக்க வேண்டுகிறோம்.

(232 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1872ஆம் ஆண்டில் ஷாவினுடைய தாயார், ஒரு இசை யாசிரியைத் தொழிலை முறையாக ஏற்க லண்டன் மாநகர்க்குச் சென்றார். அதுவரை ஒரு பண்ணையில் அலுவலராக அமர்ந் திருந்த பெர்னார்ட் ஷா தம் அலுவலை விட்டு அன்னையாருடன் லண்டன் நகரம் போனார். அப்போதுதான் அவருடைய லண்டன் வாழ்க்கை தொடங்கியது.

லண்டனில் சில ஆண்டுகள் வரையில் குறிப்பிடத் தக்க வழியில் ஷா எந்த வகையான ஊதியமும் தேடிக்கொள்ள வில்லை.

அவருடைய இலக்கிய வாழ்க்கையின் முதற் பகுதி புதுமைக் கதைகள் எழுதியதே யாம். ஐந்து புதுமைக் கதைகள் எழுதியும் அவை யொன்றும் மக்களிடையே எடுபடவில்லை. ஆயினும், அவற்றை எழுதியதில் ஷாவுக்கு அமைந்த இலக்கியப் பண்புகள் குறிப்பிடத் தக்கன.

அடுத்தபடியாக இவர் செய்தித் தாள்தொழிலில் ஈடுபட்டார்' 'இலக்கியமென்று உலகம் சிறப்பாகப் போற்றுவதெல்லாம் செய்தித் தாள்களே என்று நான் எண்ணுகின்றேன்' என ஒரு சமயம் இவர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி பதின்மூன்று ஆண்டுகள் அளவும் இவர் செய்தித் தாள்களுக்கு இசைப் பொருள்களும், இசைப் பாக்களும் அனுப்பிவந்தார். இவர் இவ்வாறு இசை பற்றிய கட்டுரைகளும், இசைப் பாக்களும் எழுதியதன் நோக்கம் அதுகாறும் செல்வர் வாழ்க்கைக்கே இயைந்ததா யிருந்த இசை யின்பத்தை, எளிய பாமர மனித னுடைய வாழ்க்கைக்கு இயைந்ததாக அமைக்கும் முயற்சியே யாம்.

1898ஆம் ஆண்டில் ஷா ஓர் ஐரிஷ் சீமாட்டியை மணந்தார். அவருக்கு மக்கள் இலராயினும் அவருடைய மண வாழ்க்கை இனிமை மிக்கதாகவே யிருந்தது. ஜியார்ஜ் பெர்னார்ட் ஷா ஏதோ ஒருகலைமகனாக வாழ ஒருபொழுதும் விரும்பியதில்லை. பல்வகைப் பண்புகளிலும் ஈடுபடவேண்டு மெனவும், ஒரு நிறை

மகனாக வாழவேண்டு மெனவும் அவர் விரும்பி முயன்றார். 1882-இல் ஹென்றி ஜியார்ஜ்[1] என்பவருடைய சொற்பொழிவு ஒன்றைக் கேட்டபொழுது இவர் ஒரு பொதுவுடைமைவாதி[2] யானார். அவரிடமிருந்து மக்கள் வாழ்வில் பொருளாதார அடிப்படை அமைப்பின் கட்டாயத்தை ஷா உணர்ந்தார்.

பொதுவுடைமைத் துறையில் ஷா உழைத்துச் செய்த சேவைகள் பல. பொதுவுடைமைக் கழகங்கள் பலவற்றில் தொண்டாற்றினார். டாக்டர் பெஸன்ட்[3] அம்மையாருடன் கூடி பல அலுவல்கள் புரிந்தார்.

நம் இந்திய நாட்டின் அரசியல் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கரை கொண்டவர். காந்தி யடிகளார் வட்டமேசை மாநாட்டின்போது லண்டன் நகரில் இருந்தபொழுது அவரை ஷா நேரிற் போய்ப் பார்த்து அளவளாவினார்.

1931இல் ஷா இரஷ்யாவுக்குச் சென்று வந்தார்; 1933இல் நம் நாட்டிற்கு வந்தார்.

மற்றெல்லாத் துறைகளையும்விட நாடகத் துறையிலேதான் ஷா மிகுந்த காலமும் கருத்தும் கழித்தார். அரை நூற்றாண்டு அளவும் அவர் ஒரு நாடக ஆசிரியராகவே அமைந்து ஆண்டுக்கு ஒரு நாடகமாகப் பல நாடகங்களை உலகுக்கு அளித்தார்.

1885இல் நாடகக் கலை ஆய்வாளரான உவில்லியம் ஆர்ச்சர்[4] என்பவர் பெர்னார்ட் ஷா நாடகம் எழுதுவதில் ஈடுபடலாமெனக் குறிப்பிட்டார். அவ்வாறே அதில் ஷா ஈடுபட்டும் உடன் பயன் பெறவில்லை.

1915இல் அவருடைய மூன்றாவது நாடகம் வெளிவந்தது முதல் அவர் புகழ் உலகெங்கும் பரவி நிலைத்தது.

---

1. Henry George.
2. Socialist.
3. Dr. Annie Besant.
4. William Archer.

அவருடைய இலக்கிய நயத்திற்காக 1925ஆம் ஆண்டில் நோபெல் பரிசு வழங்கப்பெற்றது.

அவர் அத் தொகையை அப்படியே [1] ஸ்வீடன் நாட்டு இலக்கியம் ஆங்கிலம் பேசும் உலகெங்கும் பரவுவதற்காக உதவினூர்.

[2] வால்டேர், [3] கதே, [4] சோப(f)க்கில்ஸ் போன்று அவருக்கு மூப்பு மிகுந்தொறும் இலக்கிய நயமும் மிகுவதாயிற்று. அவர் தம்மை ஒரு தத்துவ ஞானி [5] யாகக் கருதினூர். தம் கருத்துக் களை வலியுறுத்தும் ஒரு கருவியாகவே அவர் தம் நாடகங்களைப் பயன்படுத்தினூர். [6] மக்களை என் கருத்துக்கு அமைக்கவே நான் நாடகங்கள் எழுதுகின்றேன்' என்று அவர் கூறியதுண்டு. அவ் வாறு எழுதும் பொழுது கருத்து வன்மை கருத்து முறைமைகளை மட்டுமே முதன்மையாக நோக்கினூர். நாடக உறுப்பினர்க ளுடைய தன்மை, நாடக அமைப்பு, நடிப்பு, மொழி நயம் முதலியவற்றை விட அவர்களுடைய கருத்து உரைகள், ஆய் வுரைகள், உரையாடல்கள் முதலியவற்றையே முதன்மையாக அமைத்தார். எனவே, வாழ்க்கைக் கருத்துக்களும், கொள்கை களும் மோதி முறையிடும் முறைமைப் பறைகளாகவே அவ ருடைய நாடகங்கள் பல அமைந்திருப்பது காணலாம்.

1921இல் அவர் வெளியிட்ட நாடகமொன்றின் [7] மூலம் மக்கள் வாழ்வியலைக் குறிப்பிடுங்கால் 'பல்வகைக் குறிக்கோள் களையும் கடந்து தாண்டி, அவர்கள் (மக்கள்) தசை நரம்பற்ற சூனிய சுழலை, (உலகம் தோன்றியபோது போராட்டச் சுழலா யிருந்து பின்) தூய மெய்யறிவுணர்வாகிய விடுதலை வழியை (வீடுபேற்றை) நாடுகின்றனர்.' என்ற தம் கருத்தை நிலைநாட்டி யுள்ளார்.

---

1. Swedish Literature.
2. Voltaire.
3. Goethe.
4. Sophocles.
5. Philosopher.
6. 'I write plays with the delibarate object of converting the nation to my opinions.'
7. Back to Methuselah.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஒரு நையாண்டிக்காரர் என மக்கள் எண்ணியிருந்த பெர்னார்ட் ஷா தம் முதுமையில் இங்கிலந்துமட்டுமன்றி உலகமே போற்றி ஏற்கும் ஒரு கவிஞராக இயைந்தமை பெரிதும் குறிப்பிடற் குரியது.

ஜியார்ஜ் பெர்னார்ட் ஷா தம்முடைய வீட்டுத் தோட்டத்தில் விழுந்ததனால் *1950*, செப்டம்பர், *11*ஆம் நாள் லட்டன்[1] என்னுமிடத்தில் உள்ள மருத்துவசாலைக்குச் சென்றார். அக்டோபர், 4உ அங்கிருந்து வந்துவிட்டார். மறுபடியும் நோயடைந்து படுத்தபடுக்கை யானார்.

நவம்பர், 1உ யன்று தன் உணர்வற்றுப் போனார். நவம்பர் 2உ, *4-59* க்கு இவ் வுலகை நீத்தார்.

முன்னாள் அவரைப் பார்க்க வந்தவர்கள் பலருள் ஆஸ்டர் சீமாட்டி[2] என்பவர் ஒருவர். அவரிடம் பெர்னார்ட் ஷா ' நான் மீளாது உறங்க விரும்புகின்றேன் ' என்று சொன்னாராம். அடுத்த நாள் மீளா உறக்க மெய்தினார்.

---

1. Lutton.
2. Lady Astor.

மதிப்புரை.

திருவாசகம், நீத்தல் விண்ணப்பம். கதிர்மணி விளக்கம்—பகுதி உ

சிவநேசன், திரு. இராமசாமிச் செட்டியார்.
திருத்தென்குடித்திட்டை

திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், பகுதி இரண்டின் படி ஒன்று ஆக்கியோரின் அன்பளிப்பாகப் பெற்றுப் படித்தின்புற்றேன்.

திருவாசகமும் மணிவாசகரும்.

ஏறுகந் தேறிய இறைவன் குருந்த நீழலில் குருமூர்த்த மாக எழுந்தருளி யாட்கொண்டு ஐந்தெழுத் துபதேசிக்கப் பெற்ற அருள்வாத வூரடிகள், அவ்வுபதேச மொழியையே முதலாகக் கொண்டு குருமணியைப் போற்றி, சிவபுராண மாதிய 'திருவாசகம்' பாடினர். அது கேட்டுத் திருவுள மகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு 'மாணிக்க வாசகர்' என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கினர் என்றால், அவர் 'பாடும் பணி கூடும் பொருட்டு, மதுரைமா நகரிற் குதிரை மாறியும், விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியின் மாற்றடிபட்டும்' நின்றனர் என்றால், 'மூகை பேசிட வழங்கி மணிமன்றுடும், எங்கணாயகன் காத்தால் ஏடு மெழுத்தாணியுங் கொண்டு எழுத'ப் பாடினர், அவ்வேடுகளை அழகிய சிற்றம்பலமுடையார் கைச்சாற்றுடன் பஞ்சாக்கரப் படியில் வைத்தனர், திருவாசகத்தின் பொருள் சிவபெருமானே என்று மணிவாசகப் பெருமானால் சுட்டிக் காட்டப் பட்டது என்றால், 'குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண் டார்' பெருந்துறையிற் சிவபெருமான் பெருந்திருநாட்க ளெல்லாம் மாணிக்க வாசகருக்கே நடக்கப் பணித்தனர், என்றால், திருவாசகத்தின் பெருமையும் மணிவாசகரின் மாண்பும் அளவிட வெளியவோ ?

'தேனூறு வாசகங்க ளறுநூறுந் திருக்கோவை நானூறு மமுதூற மொழிந்தருளி' யவற்றுள், நான்கு அகவல் களுக்கும் திருச்சதகத்திற்கும் பின்னர் நீத்தல் விண்ணப்பம் 'கடையவனேனை' எனத் தொடங்கிக் 'கடையவனே' என அந்தாதித் தொடையல் அரைநூறு கட்டளைக் கலித் துறைகளாகத் திருவுத்தரகோசமங்கையில் அருளியது. இதன் திருவுளக்கிடை 'நீத்தோர் குணத்து நீத்தல் விண் ணப்பம் ஆத்தமாம் பிரபஞ்ச வைராக்கியம்' என்பர். இதன் பேருரைப் பகுதியே கதிர்மணி விளக்கத்தின் இரண்டாம் பகுதி.

கதிர்மணி விளக்கமும் கதிரேசரும்.

'கதிர்மணி விளக்கம்' என்பது சிறப்பு மிக்க திருவாச கத்திற்கு, மகிபாலப்பதி மகாமகோபாத்தியாய, முதுபெரும் புலவர், பண்டிதமணி, சிவநேசப் பெருஞ் செல்வர் கதிரேசச் செட்டியா ரவர்க ளெழுதிய உரைநூல்.

திருவாசகத்தின் அருமை யறிந்து உரை எழுதுந் திறன் பண்டிதமணி யவர்கட்கே யுண்டென்றுணர்ந்த பலவான்குடி, மணிவாசக சங்கமாதிய பல சங்கத்தினரும், அன்பர் பலரும் வேண்டியதனுலும், அவர்கள் இளமை தொடங்கிப் பன்னூ லாய்ந்து திருவாசக ஆராய்ச்சி செய்தும், சொன்னயம், பொருணயந்தொடர நன்னயமாக திருவாசகப் பெருமையாதி விரிவுரைகள் மிக நிகழ்த்திவந்த பயனுலும், திருவருட்டுணை யாலும், கதிர்மணி விளக்கம் முதற் பகுதியாகத் திருச்சதகத் திற்குப் பேருரை எழுதிப் பதித்து வெளியிட்டும், இரண்டாம் பகுதியாக நீத்தல் விண்ணப்பத்திற்குப் பேருரை எழுதிப் பதித்து வெளியிட்டும் செயற்கரிய சிவஞான தானஞ் செய் துள்ளார்கள்.

அவர்களாற்றிய விரிவுரைகளில், 'பானிணைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து', 'வழங்குகின்ருய்க் குன் னரு ளாரமுதத்தை வாரிக் கொண்டு', இருதலைக் கொள்ளியி னுள்ளெரும் பொத்து' என்பன வாதிய திருவாசகங்களின் நயங்களை விளக்கக் கேட்டும், பள்ளியகரம், திரு. நீ. கந்தசாமி பிள்ளை யவர்களின் அரும்பெறற் றந்தையார் பொருட்டு 'இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும் துன்பந்

தொடர் பறுத்துச் சோதியாய்' என்ற திருவாசகத்தின் ஒரு வாசகத்திற்கு உரை வரைந் துதவியதைக் கண்டும், திரு வாசக முழுமைக்கும் உரை காண எண்ணியவாறு நிறைவேற அவர்கள் மூலம் கதிர்மணி விளக்கம் வெளிவர இறைவன் அருளினன். அவர்கள், 'மண்ணியல் சிறுதேர்', 'சுக்கிர நீதி' ஆதிய நூல்கள் எண்ணில மொழிபெயர்த்து வெளி யிட்டிருப்பினும்,

'தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.'

என்பதால் திருவாசக உரை வெளியீடே விழுமியதாகும். தத்துவ ஆராய்ச்சியுடன் கூடிய இவர்களன்றி வேறு எவரும் திருவாசகவுரை எழுத அரியர் எனலாம்.

நயங்களும் நலமுறு வாழ்த்தும்.

அரு ணூலின் பெருமையும் பேருரையின் அருமையும் பொதுவாக 'ஞயம் பட வுரை' என்பதற்கு இலக்கியமே. திருவாசகம், கதிர்மணி விளக்கம் ஆகியவை முழுதும் தேனு மின்னமுதமுமாய்த் தித்திப்பனவாயினும், கதிர்மணி விளக் கம் 2இல் விண்ணப்ப விளக்கவுரை 13இல், 'மடலின் மட்டே' என்பதற்கு இருளில் தொகுக்கும் தேன் போலாது, மல ரிதழி லுண்டாம் தேன் தூய்மை மிக்கது எனவும், 'மணியே' என்பதற்குக் குருமணி எனவும், 'அமுதே' என்பதற்கு மரண மிலாப் பெருவாழ்வு தருவது எனவும், 'என் மது வெள்ளமே' என்பதற்குச் சிவானந்தக் களிப்பில் தோய்ந் திருக்கச் செய்தமையின் எனவும், 18இல், 'மிக்க நஞ்சு அமுதா அருந்தினனே' என்பதற்கு, அமுதம் உண்ணுங்கால் உண் டாம் உவகை நஞ்சம் உண்ணுங்கால் உண்டாயிற்று எனவும், 20இல், புண்ணியப் பயன் துய்ப்பவராகிய தேவரும் அணுகு தற்கு அரிய மேலிடத்துத் திகழும் இறைவன், மெய்யன்பர் கட்கு எளியனாய் இந் நில வுலகத்துத் திருக்கோயில் கொண்டு காட்சி யளிக்கும் இயல்பின னென்பது தோன்ற 'உத்தர கோச மங்கைக் கரசே' என்றார்; இஃது அருமையில் எளிய அழகாகும் எனவும், 31இல், சிவபெருமானுக்கு ஐந்து திரு முகங்களும் ஐவகை நிறங்களுமுடையன என்று சிவாகமங்கள் கூறும் எனவும், 'நிறங்களோ ரைந் துடையாய்' என்ற

எடுத்துக்காட்டு நயமும், 35இல், திங்களும் பாம்பும் இறைவன் பக்கலில் பகைமைக் குணம் நீங்கி வாழுகின்றன என்னும் பகுதியும், மனதிற்குச் சந்திர சம்பந்தம் உண்டென்ற பகுதியும், 36இல், இறைவன் சடையில் விளங்கும் மந்தார மலரைப் பற்றிய வருணனைகளும், 37இல், அம்மையின் அருட்பெருக்கினையுடைய கண்களை நீர்ப் பெருக்கினையுடைய கடலாக வுருவகஞ் செய்தனர் என்பதும், 38இல், பெருமானது தலைமைத் தன்மையைப் புலப்படுத்துவாராய், 'சுடுகாட்டரசே' என்றனர் என்பதற்கு எடுத்துக்காட்டுகளும், 39இல், இறைவன் ஆண்டான் என்பது தோன்றத் தம்மை அடியேன் எனவும், பெரியோன் என்பது தோன்றச் சிறியேன் எனவும், பிறப்பிலான் என்பது தோன்றப் பிறப்பா லிழிந்த நாயேன் எனவும், கூறுவாராயினர் என்பனவும், 41இல், அருளுருவினளாகிய அம்மையை வழிபட்டு அவள் மூலம் அப்பனையடைதல் வேண்டுமென்னும் உண்மையும் எனவும், துன்பநீக்கத்தோடு இன்பப் பேறும் வேண்டி, 'சிவனே முறையோ முறையோ' என்றனர் எனவும், 42இல், 'சடை மன்ன' னென்றது முடிமன்னரின் மிக்க சிறப்புத் தோன்ற நின்றது எனவுங் காட்டிய நயங்களும் பிற நயங்களும் போற்றுந் தகையனவாகப் படிக்கப் படிக்கக் கருப்பு நுனியிருந் தயிர்த்தாற் போன்றினிக்கின்றன.

18இன் நயம் 'நஞ்சே யமுதாய் நயந்தாய் போற்றி' என்ற அடிகள் திருவாக்கையும், 35இன் நயம்,

'பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்'
'சந்திரனோடு கங்கை யரவையுஞ் சடையுள் வைத்து
மந்திர மானர் போலும்'

என வரும் தேவாரத் திருவாக்குகளையும் நினைப்பூட்டி இன்பம் தருகின்றன.

திருவாசகத்திலிருந்து அருமணிகளை, எல்லோரும் இன்புறும் வண்ணம், கதிர்மணி விளக்கத்தால் வாரி வழங்கும் அண்ணலாகிய தன வணிக மணி, என் குல மணி, சைவ சிகாமணி, பண்டிதமணி, முதுபெரும் புலவர் மணி, பெரும் பேராசிரிய மணி, திருவாசக உரை மணி, அன்பு மணி, கதிரேச மணியாகிய அவர்கள் கண்ணியமாகப், புண்ணியமும் புகழும் மிக்கோங்கி எண்ணிய வெல்லாம் பெற்று இனிது வாழ 'யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான்' திருவருளை வேண்டுகின்றேன்.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உசு	திருவள்ளுவர் யாண்டு கக௮க விகிருதி—மார்கழி 1950—திசம்பர்	மலர் கூ

மதிப்புரை

1, 2. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—தொகுதி க. பகுதி 1, 2.
திரு. E. S. வரதராசையர் அவர்கள், B. A.

3. சைவசித்தாந்த தோற்றுவாயும், வரலாறும் (Introduction and History of Saiva Siddhanta).

4. மரவழிபாடும் பாம்பு வழிபாடும் (Tree Worship and Ophiolatry)
வித்துவான்
திரு. G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., B. L.,

மேற்குறித்த நான்கு நூல்களும் ஆங்கிலத்தில் எழுதப் பெற்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரால் அழகிய முறையில் வெளியிடப் பெற்றவை.

தொல்காப்பிய மூல நூல்களைப் படித்தறிய இயலாத ஆங்கிலப் படிப்பாளர் பொருளதிகாரக் கருத்துக்களை நன்கு அறிந்துகொள்ளக் கூடிய முறையில் திரு E. S. வரதராசையர் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். இவர்கள் முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கது.

தமிழிலக்கிய வளங்களை மேனுட்டாரும் அறிந்து மகிழ்வதற்கு வாய்ப்பு அளித்த சிறப்பு திரு. வரதராசையருக்கு உரியதாகும்.

* * * *

திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அருட்டிரு. காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் நினைவாக ஏற்படுத்திய அறநிலையச் சார்பில் 1947, பிப்பிரவரியில் காசி இந்து பல்கலைக் கழகத்திலும், பிரயாகைப் பல்கலைக் கழகத்திலும் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிட்டதே மேற்குறித்த மூன்றாவது நூலாகும். திரு. பிள்ளை யவர்களது ஆராய்ச்சியும், சைவ சித்தாந்தத் தெளிவும் இந்நூலிலிருந்து வெளியாகும்.

தமிழர்களது மரவழிபாடு பாம்பு வழிபாடுகளின் கருத்தும், பயனும், சிறப்பும், திரு. பிள்ளை யவர்களின் ஆராய்ச்சித் திறனும், அவர்கள் எழுதிய இன்னொரு நூலிலிருந்து தெளிவாகும்.

துயரம்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து ஆறாவது பட்டத்திலிருந்த அருட்டிரு. சிவசண்முக சத்தியஞான சிவாச்சாரிய சுவாமிகள் 1950, திசம்பர், 14 ஆம் நாள் இரவு சமாதியுற்றார்கள்,

ஐந்தாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த உலகப் புகழ் பெற்ற அடிகளார்க்குப் பிறகு அவர்கள் வகுத்த வழியில் பொருள் நிலைக்கேற்ப இவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வந்தார்கள். இவர்கள் பிரிவு பெரிதும் வருந்தத் தக்கதாகும்.

* * * * *

இந்திய குடியாட்சித் துணை முதலமைச்சர் திரு. சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் 1950, திசம்பர், 15 ஆம் நாள் காலை 9–30 மணியளவில் இவ்வுலக வாழ்வு நீத்த கொடுஞ் செய்தி நமக்குப் பெருந்துயரம் தருவதாயிற்று. இக்கொடுஞ் செய்தி தெரிந்ததும் இங்குள்ள கல்வி நிலையங்கள் எல்லாம் மூடப்பெற்றன.

மதிப்புரை.

தெய்வத்திரு, சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகளின்
வெள்ளணி விழா நினைவு மலராகத்
தருமபுர ஆதீனத்தாரால் பதித்து வெளியிடப்பெற்ற
"திருக்குறள் - உரை வளம் - அறத்துப்பால்"
என்னும்

நூலிற்கு ஒரு மதிப்புரை.

இந் நூலில், வழ வழப்பும், தடிப்பும், வெண்மையுமுள்ள நல்ல தாளில், பெரிய எழுத்துக்களில், திருக்குறள், அறத்துப்பால் 38 அதிகாரங்களும் 510 பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

திருக்குறட்கு உரை ஆசிரியர் பதின்பர் என்பர். இவர்களுள், பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பழைய உரை எழுதிய ஆசிரியர். நுண் பொருள் மாலை ஆசிரியராகிய காரித்ன கவிராயர், இராமாநுசக் கவிராயர் இவர்களின் வரலாறு (தெரிந்தவரையில்) கொடுக்கப்பட்டிருக்கிறது. உவமைகளின் ஆராய்ச்சியும், இப்பதிப்பில் எடுத்துக் காட்டிய நூற் பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதியும் முன் இணையாக உள்ளன. குறள்களின் முதற்குறிப் பகராதியும், சொல்லகராதியும் பின் இணையாக உள்ளன.

இவ்வாதீனத்தார், நீதிநெறி விளக்கத்தைப் பலர் உரைகளுடனும், இலக்கண நுட்பங்களுடனும் பதிப்பித்து வெளியிட்டதைப் படித்தபொழுது, இதுபோல் மற்றை நூல்களையும் இவ்வாதீனத்தார் வெளியிடுவரோ என ஏங்கினேன். இவ் வேக்கத்தை மாற்றுவதற்காகவோ திருக்குறளை வெளியிட்டார் என இந்நூலைப் படித்துப் பெரும் பயனும் மகிழ்வும் எய்தினேன்.

(1) ஒவ்வொரு அதிகாரத் தலைப்பிற்குப் பொருளும், அவ்வதிகார வைப்பு முறைக்குப் பலர் கூறிய காரணங்களும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

(2) குறள் வெண்பா பெரிய எழுத்தில் உள்ளது.

(3) உரைப்பகுதி :—இப்பகுதியில், பரிமேலழகர் உரையும் விளக்கமும் விரிவாகவும், மணக்குடவர், பழைய உரை ஆசிரியர், பரிதியர், காளிங்கர், முதலியோரின் கருத்துரைகளும் காட்டப்பட்டிருக்கின்றன.

(4) உரை விளக்கப்பகுதி :—இதில், நுண்பொருள் மாலை ஆசிரியர், இராமாநுசக்கவிராயர் எழுதிய உரை விளக்கங்கள் உள்ளன. நுண்பொருள் மாலை, பரிமேலழகரின் உரையை விளக்குவதாகும்.

(5) மேற்கோட் பகுதி :—பல இலக்கண ஆசிரியர்களும், இலக்கண உரை ஆசிரியர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை விளக்கிக் காட்டத் திருக்குறளிலிருந்து எடுத்தாண்ட விளக்கங்கள் உள்ளன.

(6) ஒப்புமைப் பகுதி :—ஒவ்வொரு திருக் குறளின் கருத்தை பலர், பல நூல்களில் எப்படி எடுத்தாண்டார் என்பதை விளக்க அந்தந்த நூலிலிருந்து (Quotations) எடுத்துக் காட்டு காட்டப்பட்டிருக்கிறது.

(7) இந்நூலின் பதிப்பாசிரியராகிய வித்துவான் திருவாளர் ச. தண்டபாணிதேசிகரின் கருத்துக்கள் பின் குறிப்பாகப் பக்கங்களின் அடிப்பகுதியில் சிறு எழுத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

(8) வைப்பு முறை :—இதில் பல உரையாளர்கள் ஒவ்வொரு அதிகாரத்திலும் தழுவிய குறள் வைப்புமுறைகாட்டியுள்ளது.

இவ்வுரை ஆசிரியர்களில் கவி ராச பண்டிதர் குறள்களின் கருத்துக்களை ஆரிய மயமாக்கி யுள்ளார்.

மணக்குடவர் ஒருவரே வடமொழி மிகாத சிறந்த தமிழ் நடையில் உரை எழுதி யுள்ளார்.

கவி ராசபண்டிதரும் மற்றோரும் புகுத்துள்ள வடமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களையும் விளக்கங்களையும் பதிப்பாசிரியர் குறித்திருந்தால் தமிழனுக்கு குறள்களின் செம் பொருள் தெற்றென விளங்கும். தமிழ் நூலைத் தமிழனுக்குத் தமிழிலே விளக்கிக் காட்டவேண்டும் எனும் முறை தழுவத் தக்கது என்று நினைக்கிறேன்.

வேறுபட்ட கருத்துக்கள் :—

பதினைந்தாவது குறட்பாவிலுள்ள ‘கெடுப்பதூஉம்’ என்பதற்கு ‘பெய்யாது நின்று கெடுப்பதூஉம்’ எனப் பொருள் கொண்டார் பரிமேலழகர். மழை மிகப் பெய்து கெடுப்பதும் உளதாகையால், இவர் இக் கருத்தை ஏன் விடுத்தனர் என்று திகைத்திருந்த எனக்கு, கவிராச பண்டிதர் இக் கருத்தையும் ஏற்று விளக்கியுள்ளதைப் படித்து மகிழ்ந்தேன்.

23-ஆம் குறளில் ‘இருமைவகை தெரிந்து’ என்பதற்கு ‘பிறப்பு வீடு என்னும் இரண்டனது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து’ எனப் பலரும் பொருள் கொண்டுள்ளார். ஆனால் ‘இருமை’ என்பதற்கு (Duality) என்னும் ஆங்கிலச் சொல்லின் பொருளே தக்கதெனக் கொள்ளலாம். அதாவது, நன்மை-தீமை, அறம்-மறம், செல்வம்-வறுமை, ஒளி-இருள், இன்பம்-துன்பம், முதலியன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிவது.

புலவர்கள் ஆய்ந்தறிவார்களாக (இராம கிருட்டிண பரம அம்சர், ஒரு கையில் பொன்னும், ஒரு கையில் மண்ணும் ஏந்திக்கொண்டு, ‘இது பொன், இது மண், இரண்டும் ஒன்று’ என்பதாகப் பல தடவை சொல்லிக் கடைசியாக இரண்டும் ஒன்றென்று ஆற்றில் எறிந்து விடுவாராம். இதுவே இருமையின் ஒருமையை ஆராய்ந்தறிவது, இதுவே, இருமை வகை தெரிந்த நீத்தாரின் பெருமை.)

71-ஆம் குறளில் ‘அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்’ என்பதில், தாழ்=பூட்டு என்னும் பொருள் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இராமாநுசக் கவிராயர் ‘தாள்’ என்பது சினையாகு பெயராய்த் தாளிடப்பட்டக் கதவின் மேனின்றது’ என்று கூறியுள்ளார். எனவே, ‘தாழ்’ ஏற்றச் சொல்லா, அல்லது ‘தாள்’ ஏற்ற சொல்லா என்பது விளங்கவில்லை. ‘தாள்’ ‘தாழ்’ என மாறின தென்றால், இதற்கு இலக்கணம் கூறவில்லை. எனினும் ‘தாள்’ என்பதே ஏற்ற சொல். புலவர்கள் உன்னிப் பார்க்க. 75-ஆம் குறளின் பொருளில் இவ் வுலகத்து இல் வாழ்க்கைக் கண் நின்று இன்ப நுகர்ந்து அதன் மேல் துறக்கத்துச் சென்றெய்தும்

பேரின்பத்தினை ' என வடவர் கருத்தைப் புகுத்துப் பொருள் ஏற்ற பரிமேலழகருக்கு மாறாக, 'வையத்து அனைத்துயிர்க்கும் பொருந்திய முறையினால் மிக அன்பு செய்து அதுவே, இன்புற்றனராய் வாழ்கின்றவர் எய்தும் செல்வச் சிறப்பு ' என்று பொருள் கொண்டார் காளிங்கர்.

மேற் காட்டியது போல இந் நூலைப் படிப்போரின் பல கருத்துக்களை விளக்கிக் காட்டுவதற்கான தனிமைச் சிறப்புடைய பதிப்பு இது.

எல்லாருடைய உரைகளும் ஒருவருக்குக் கிடைக்குமேயானாலும், அவற்றை விரித்து வைத்து, கருத்துக்களை சீர் தூக்கிப் படித்துப் பொருள் ஏற்பது கடினம். ஆகையால் இப் பதிப்பு ஆராய்ச்சியாளருக்கும், விரிவுரையாளருக்கும் மிக்கப் பயன் படுவதாகும்.

மேலும், பல இலக்கண ஆசிரியர்களும், இலக்கண உரை ஆசிரியர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை விளக்கிக் காட்டத் திருக்குறள் அவர்களுக்குக் கலங்கரை விளக்காக இருக்கிறது என்பது இப் பதிப்பால் நன்கு விளங்குகிறது. தொல்காப்பியரின் பொருள் இலக்கணத்திற்கு உரையெழுதிய இளம் பூரணர் தம் கருத்தை விளக்க 50 நூல்களிலிருந்து 1400 மேற் கோள்கள் காட்டியுள்ளார். இம் மேற்கோள்களில் 200 திருக்குறளிலிருந்து ஏற்றவை. ஆகையால், மற்றவர்களுக்குக் திருக்குறள் கலங்கரை விளக்காக இருப்பது வியப்பல்ல. எனவே, இப் பதிப்பு, திருக்குறளைப் படிப்போருக்கும், பள்ளி ஆசிரியருக்கும், கல்லூரிக் கலைஞருக்கும் பெரும் பயனளிப்பதென்பதற்கு ஐயமே இல்லை.

வேண்டுகோள் :—

திருக்குறளில் அறத்துப் பாலை இந்தச் சிறந்த முறையில் வெளியிட்ட ஆதீனத்தார் மற்ற இரு பால்களையும் இச் சிறப்புடன் வெளியிட்டுத் தமிழுக்கும், தமிழருக்கும் பேருதவி செய்யுமாறு வேண்டுகிறேன்.

இக் கால ஆட்சிச் சுழலில் சிக்காது தருமபுர ஆதீனம் நீடூழி சீரும் சிறப்பும் கொண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

வெற்றிலை வாணிகர்.

(வித்துவான் திரு. ஔவை. துரைசாமி பிள்ளை, அண்ணுமலை நகர்)

புதுக்கோட்டைப் பகுதியில் வெள்ளாறு ஓடுகிறது. அதன் இரு கரையிலும் உள்ள நாட்டுக்குக் கோனாடு என்று சங்க காலத்தில் பெயர் வழங்கிற்று. இடைக் காலத்தில் விசயாலயன் இராசராசன் முதலிய சோழ வேந்தர் தஞ்சையில் இருந்து ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலத்தில் முதல் இராசராசனது 18-ஆம் ஆண்டுக்குப் பின் இக் கோனாட்டுக்கு இரட்டபாடி கொண்ட சோழ வள நாடு என்று பெயர் உண்டாயிற்று. ஆனாலும் பழம் பெயரை மறவாதபடி, கோனாடான இரட்டபாடி கொண்ட சோழ வளநாடு என்றே அது கூறப்பட்டு வந்தது.

இந்த நாட்டில் அந்தக் காலத்தில் விளங்கிய பேரூர் களில் திருநலக் குன்றம் என்பது ஒன்று. இப்போது அது குடுமியான் மலை என்ற பெயருடன் நிலவுகிறது. இத னருகே காப்புக்குடி யென்பது ஓர் ஊர். அந்த நாளில் வாழ்ந்த வேந்தர்கள், நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்களுக்கு நீர் வளம் பொருந்திய ஊர்களைக் கொடுப்பது வழக்கம். அதற்குப் பிரமதாயம் என்று பெயர்; அது பிரமதேயம் என்றும் மருவி வழங்கும்.

தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைக் கட்டிய இராசராச சோழனுக்குப் பின் அவன் வழியில் முதற் குலோத்துங்கன் என்னும் வேந்தன் ஆட்சி புரிந்தான். அவன் சுமார் 880 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1070 முதல் 1120 வரையில் ஆட்சி செய்தான். இந்தக் கோனாடான இரட்டபாடி கொண்ட சோழ வளநாடு அவனுடைய ஆட்சியில் இருந் தது. மேலும், அக் காலத்தில் நாட்டின் பரப்பைக் கணக் கெடுத்தவர், கோனாடு இருபத்து நான்கு வட்டகை பரப் புடைய தெனக் கணக்கிட்டனர்; இதை அப் பகுதியில் காணப்படும் கல் வெட்டுக்கள் உரைக்கின்றன.

இந்தக் கோனாட்டில் திருச்சிராப்பள்ளி வழியாகவும், தஞ்சை வழியாகவும் வெற்றிலை வாணிகர் வந்து வியாபாரம்

செய்வர். மலைநாட்டிலிருந்து குதிரை வாணிகரும் வந்து குதிரை வியாபாரம் செய்தனர். தஞ்சை மாநாட்டு மன்னார்குடிக் கல்வெட்டால் மிளகு வாணிகரும் பிறரும் மலைநாட்டிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் வந்து போன செய்தி தெரிகிறது. இவர்களிற் பலர் விற்றற்குரிய பொருள்களைப் பெருந் தொகையாகக் கொணர்ந்து ஓரிடத்தே பண்டகசாலை நிறுவி அதன் கண் தொகுத்துச் சிறிது சிறிதாக ஊர்களுக்கு அனுப்பினர். இவர்களைப் போலவே இந் நாட்டு வணிகர்களில் பலர் வெளிநாடுகளிலிருந்து வாணிகப் பொருள்களை வருவிப்பதும், இந் நாட்டுப் பொருள்களை வெளிநாடுகட்குக் கொண்டு செல்வதும் உண்டு.

இவ்வாறு, வணிகரது போக்கு வரவில். இடைச் சுரங்களில் ஆறலைகள்வரது குறும்பும் இருந்து வந்தது. அவற்றினின்றும் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலை இவ் வணிகர்க்கு நேரிட்டது. அவர்களைக் காக்க வேண்டிய கடமை அந் நாளை அரசர்க் குண் டென்பதைச் சங்க நூல்களே கூறுகின்றன. 'அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக், கைப் பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக், கொடியோர் இன்றவன் கடி யுடை வியன் புலம்' என்பதனால், வழிப் போக்கர்க்கு ஊறுண்டாகா வண்ணம் பழைய நாளைத் தமிழ் வேந்தர் காவல் புரிந்தமை விளங்குகிறது. என்றாலும், வணிகர் செல்லும்போ தெல்லாம் அரசனது படையைக் கொண்டேகுவது வணிகர்க்குப் பல சமயங்களில் இடுக்கண் விளைத்தது. சில சமயங்களில் அரசியற் படையின் உதவி கிடைப்பது அரிதாகும். அதனால் வணிகர் தாமே படைகளை வைத்தாளும் உரிமை பெற்றுப் படையும் கொண்டிருந்தனர். இம் முறை அந் நாளில் மேனாடுகளிலும் இருந்தது. ஐரோப்பியர் நம் நாட்டில் வாணிகம் செய்ய வந்தபோது தமது செலவிலேயே படைகளை வைத்தாண்ட செய்தியை நம் நாட்டுச் சரித்திரமே கூறுகிறதல்லவா? பகை பெரிதானபோதே அரசர் முன் வந்து தாங்கள் பெரும் படை கொண்டு பகைவர் குறும்புகளை அடக்கினர்.

இந் நிலையில் இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டில் வணிகர் பலர் வாழ்ந்தனர். அவருள் வெளிநாட்டு

(307 ஆம் பக்கம் பார்க்க.)

ஊழ் வினையும் உள் வலியும்.

திரு. அ. பழநியப்பன், சென்னை.

இவ் வுலகியற்றியான் இசைந்துதவும் இயற்கைச் சக்தியின் இன்றியமையாத் துணையால் இயங்கும் மக்களனைவரும், ஒத்த உருவினராய், ஒத்த பண்பினராய், இன்ப துன்ப மிரண்டினையும் ஒத்த அளவில் நுகர்பவர்களாய் அமையாமை கண்கூடு. எள்ளத்தனை ஒற்றுமையுமின்றிப் பல்வேறு கூறுனும், பலதிறப்பட்ட மக்களாய்ப் பிரிந்து, ஏற்றத் தாழ்வுடன், சிறுமை பெருமை யுற்று வாழ்தலைக் காணுந்தோறும், இயற்கையின் இன்னருளுக்கும் இடவேற்றுமை யுண்டோ வென ஐயுறத் தோன்றுகின்றது.

ஒருவன் செய்யும் நல்வினை தீவினைக்கேற்ப, இன்ப துன்ப மிரண்டும் அவனை வந்தடைவ தியல்பு. நல்வினை யாற்றி நலம் பல புரிவாரும், நலிந்து, நாடோறும் துன்புற்று வாழ்தலைக் காண்கிறோம். இஃது இயற்கையோ டொப்பாமை தெளிவு. 'இப்பிறப்பில் அவன் நன்மையே செய்தொழுகினும், முற்பிறப்பில் தீவினை யாற்றித் தீங்கிழைத்திருக்கிறான். அதன் விளைவை இப்பிறப்பில் துய்க்கிறான். அதை முன்னின்று முடிக்கிறது ஊழ். ஊழ் இறைவனின் இணையற்ற சக்தியின் திருவுருவம்' என்று கூறி ஏற்றம் தருவர் சைவசமய குரவர்.

மனத்திலே எப்போழ்தும் இருபெருஞ் சக்திகளுக்கிடையில் போர் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதிலொன்று நன்றுற்றத் தூண்டும், மற்றது அதைத் தடுத்துத் தீயவழிச் செலுத்தும் நல்லதனின்றும் அல்லதே மக்களைத் தன்வழி நடாத்திச் செல்லும் திறமை மிக்கது என்றாலும், அல்லதினின்றும் நல்லதே இறையருள் பெற்றி

லங்குவது. தீவினை நிகழ்த்தத் திட மளிப்பது ஊழ் என்றும், அஃது இறைவனின் அருளொடு ஒன்றிய தன்றென்றும், தானே தனித்து இயங்கும் ஒரு பெருஞ் சக்தி என்றும் கூறிப் பெருமை கொள்வார், வேறுபிற சமயத்தவர்.

ஊழ் எத்தன்மைத்து, எவ்விதமாக மக்களை இயக்குகிறது என்பதை விரித்து, ஒன்றிரண்டல்ல, பத்துப் பாட்டுக்களில், ஓர் அதிகாரமே ஆக்கியிருக்கிறார் திருவள்ளுவர் என்றால், அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டவும் வேண்டுமோ? 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்' என்னும் பாட்டின் கருத்தை உணர்ந்தால், ஊழ்வலியை வெல்ல வேறெவ்வலியாலு மியலா தென்பது தெற்றெனப் புலப்படும்.

மனிதன் அறிவுத் துணைகொண்டு ஆராய்ந்து ஆற்றும் செயல்கள் உரிய பலனைத் தந்தேதிரும். அதில் எதிர்பாராத தோல்வி கிட்டினால் அதற்குத் தக்க காரணங்க ளிருக்கும். 'வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியுந், துணைவலியுந் தூக்கிச் செயல்' வேண்டும். வினையாற்ற முனையுமுன் ஆய்ந்துணர வேண்டியவற்றில் ஏதாகினு மொன்றைப் பொருட்படுத்தாது தவறவிட்டு, அதன் பயனாய் இடைக்கண் முறிதலை, ஊழ் என்று கூறித்திரிதல் ஒவ்வாது. இன்னல் விளைய இடனளித்தது யாதென வினவி விடை தேடியடைய வேண்டும். தவற விட்டதைச் சிந்தித்து அறிந்தபின், மேலும் அத்தவறைச் செய்யாது, திருத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்பவன் சோர்வின்றி வேறுபல வினைகளாற்ற இயன்றவரை முயன்று அதில் வெற்றியும் பெறுவன். அஃதின்றி ஊழ்வினைப் பயனால் வந்துற்ற தென்றெண்ணி, ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால், சிந்தித்துணர நேரமில்லாது போய் விடும். எந்நேரமும் நிகழ்ந்தவற்றை எண்ணி எண்ணி ஏங்கி, உள்வலி இழந்து, ஊழ்வினையை நொந்து, துன்பப் படுவதிலேயே தன் வாழ்நாள் முழுமையும் கழிப்பான்.

செயல்புரிய இயலாமைக்கும், செய்த செயலின் குறை பாட்டிற்கும், தக்க காரணம் கண்டறிய முடியாதபோழ்து, மனிதன் தன் தவறையும், இயலாமையையும், ஒப்புக் கொள்ள மனமில்லாதவனாய், ஊழ்வலியைச் சரணடை கிறான். தன்னைச் சார்ந்தவர்களும் தன் இயலாமைக்கு உரிய காரணத்தை ஓர்ந்து உணர்த்துபவர்களாக அமை யாததால், தான் முயன்று முடிக்காத அத்தனையும் ஊழ் வினைப் பயனே என்ற முடிவிற்கு வந்துவிடுகிறான். அம் முடிவு, அவன் ஆய்ந்துணரும் ஆற்றலைச் சிதைத்து, செய லாற்றவிடாது தடுத்து, பல்வேறு இன்னல்கட்கு மாளாக்கி விடுகிறது.

குறிப்பாக, வாணிபம் செய்யப் புகும் ஒருவன், அத் துறையில் பயிற்சி பெற்றாரை அணுகி, அவர்தம் அனுபவ உண்மைகளை அறிந்து, பொருளீட்ட முற்படவேண்டும். அவன் தன் சூழ்நிலைக்கேற்ற பொருள்களை நன்காராய்ந்து, பருவவிலை அறிந்து வாங்கி, விலை உயரக் காத்திருந்து, உரிய காலத்தில் விற்று, நல்ல ஊதியம்பெற முனைவது சிறந்த முறை. வாங்கப்பெற்ற பொருளின் விலை மேலும்மேலும் உயர்ந்துகொண்டே வந்து, அந்த அளவில் நிலைத்து நின்று விடாது, எதிர்பாராத முறையில், ஒரே நாளில் அதிகப் படியான அளவில் குறைந்து விடுதலுங் கூடும். இது வாணிபத் துறையின் அன்றாட நிகழ்ச்சிகளி லொன்று. விலைப்பருவம், கொண்ட முதலிற்கு குறைவான அளவிற் றாழ்ந்து வருதலைக்கண்டவுடனேயே, காலம் கடத்தாது விற்று முதல் செய்தால், ஒரு சிறு தொகையை மட்டும் இழந்தாயினும், பெரும் பகுதியை மீட்கலாம். அவ்விழப் பும் ஊழ்வலியால் வந்துற்றதென எண்ணினால், செயலாற் றிச் சிறக்க உதவும். ஆய்ந்தறிதல் தடைப்பட்டுவிடும். அச்சிறு தொகையை இழக்க நேர்ந்ததில் மனந் தளராது, அதற்குரிய காரணங்களைத் துருவித் துருவி ஆராய்ந்தறி வதிலேயே, தன் முழுக் கவனத்தையும் செலவிடவேண்டும்.

கொள்முதல் செய்யும் போழ்தே பருவ விலையை நன்கு விசாரித்தறியாது, கூடினவிலை கொடுத்து வாங்கி விட்டோமா, அல்லது மக்களுக்கு இதுபோழ்து இன்றி யமையாது வேண்டப்படும் பொருளைத் தேர்ந்தெடுக்கத் தவறிவிட்டோமா, அன்றி ஓர் அளவிற்கு அதிகமான ஊதியம் பெற அவாவி உரிய காலத்தை உணராது ஒதுக்கிவிட்டோமா, அல்லது அப்பொருள் வேறு பலவிடங்களிலிருந்து வந்து எண்ணற்று மலிந்துவிட்டதோ என்றெலாம் நினைத்துப்பார்க்க வேண்டும். இவைகளி லேதேனுமொன்று காரணமா யமையும். கருத்தின்றி விட்ட காரணத்தை அறிந்து, தன் தவறை உணர்ந்த ஒருவன், மேலும் அத்தவறைச் செய்யாது, செய்வினை அத்தனையும் திருந்தச் செய்தல் வேண்டும்.

ஊழ் எனும் சொல்லை விதி என் றழைப்ப துண்டு. ஊழ் மிகவும் வலிமை பெற்றது; அதன் செயலைத் தடுத்து நிறுத்த வேறெவ்வழியானு முயன்றாலும், தான் முன்னே வந்து நிற்கும் என்று கூறினோம். நாம் எதிர்பாராத விதத்தில் சிலர் நம் மனத்தானும் எண்ண முடியாத செயலைப் புரிந்து, ஏற்றமோ அன்றித் தாழ்வோ அடையும் போழ்து, அவர்க்கு உறுதுணையாக நின்றியக்குவது ஊழ் எனக் கொள்ளலாம்.

ஊழ் உருவற்ற ஒன்றாகையான், தன் வலிமையைப் பிறன் ஒருவன் வழியாகக் காட்டித் தன் விருப்பப்படி அவனை நடாத்துகிறது. எறும்பு முதல் மக்கள் ஈறாக அதன் செயலைத் தாங்கி அதற்கு உறுதுணையாய், உற்ற கருவியாக யமைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. மக்கள் எத்துணை உறுதிப்பாடுடையவர்களாக இருப்பினும், ஊழ் வலி மேலிட்டால், நெறி தவறி நடந்து, நிகழ்ந்த மறு கணமே தன் பிழையை உணர்கிறார்கள். அக் கண நேரத்திற்கு மனிதனின் நுண்ணிய அறிவையும் ஊழ் எனுந் திரை மறைத்துத்தான் விடுகிறது. அறிவாற்றல் மிக்காரும்

கூட, ஊழ்வலியை வென்று தம் உள்வலியை உயர்த்த இயலாது என்பது ஒரு தலை. அது மனிதசக்தியினின்றும் மேம்பட்டதே!

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித், தாழாது உஞற்று பவர்' என்ற குறளை 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தில் படிக்கும்போது, குறளிலும் முன்னுக்குப் பின் முறண்பாடுண்டோ என ஐயுறத் தோன்றும். அதன் கருத்தை ஆய்ந் துணர்வதினின்றும் ஆசான் உரை சொல்லக் கேட்டால் உண்மை விளக்க மறியலாம். முற்பிறப்பில் செய்த தீவினையின் சின்னமாய் அமைந்த ஊழ், இப் பிறப்பில் துயர் தருவதைத் தடுத்து நிறுத்தி, அதனை வெல்லவே முடியாது. இம்மையிலும் தீவினையாற்றி, ஊழை உண்டு பண்ணிக்கொண்டு, மறுமையிலும் துன்புற்று வாழும் வாய்ப்பைத் தேடிக் கொள்ளாது காக்கலாம். அதன் மூலம் இனிவரும் ஊழை வெல்லலாம் என்பதே அப் பாடலின் உட்புதைந்து கிடக்கும் உயரிய கருத்து. மறுமையில் ஊழ்வலி தம்மைப் பற்றி இடர் செய்யாது காக்க இம்மையில் இயன்றவரை முயல வேண்டுவது இன்றியமையாத தாகும்.

ஒருவன் தனக்குத் துன்பம் வந்துற்றபோழ்து, அதற்குக் காரண காரியமா யமைந்தவற்றை அறிந்து அதன்பால் சீற்றங்கொண்டு பழிவாங்கும் நோக்கத்துடன், பற்பல தீச்செயல்களையும் ஆத்திரத்தில் அறியாது செய்துவிடுகிறான். அச்செயல், ஊழ் தன்னைப் பற்றி நின்று துன்புறுத்த இடனளிக்கும். உருவற்ற ஒன்றான ஊழ் ஒருவனைத் தன் கருவியாக்கிக்கொண்டு, பிறிதொருவனுக்குக் கேடு விளைவிக்கிற தென்ற உண்மையை உன்னி அறியும் தன்மையை பெற்றால் துன்புறுத்தியவன் மாட்டும் இரக்கம் பிறப்பது, இயல்பா யமையும். குற்றமற்ற அவன் செயலை மன்னித்து, அவனை முன்னின்றியக்கிய ஊழை நினைத்து வருந்தி, அத் தீயூழ் தன்னை அணுகாது காக்க முயலு

வான். எய்தவனை விட்டு அம்பை நோவது அறிவு டைமை யாமோ?

கிருத்துவ சமயங் கண்ட ஏசுநாதர் இம்மைத் துன் பத்தை இன்பமென ஏற்று, மறுமையில் ஊழ் எனும் தீயசக்தி தன்னை யாட்கொள்ளாது காப்பான் வேண்டி, தன்னைச் சிறைசெய்து, தன் னுடலைச் சிதைத்து, முன் முடிச் சூட்டித் துன்புறுத்திய கயவர்கள்பால் ஒரு சிறிதும் வெகுளாது, அவர் தம் அறியாமையைக் கண்டு வருந்தி, அன்னார்க்கு நல்லறிவு நல்க, இறைவனை வழுத்தியமை சான்று.

'ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங் கண்ணோடிப், பொறுத்தாற்றும் பண்பே தலை' என்பது தமிழ்மறை. தம துயிரைப் போக்க முடிவுசெய்து, தம்மைநோக்கி எறி குண்டை வீசிய கொடியவன் மாட்டும் அன்புகொண்டு இரக்கங் காட்டி, 'அவனைத் துன்புறுத்தாது விட்டு விடுக' என்றுரைத்த நம் காந்தியடிகளின் ஒப்பற்ற பெருந்தன் மையும் மற்றொரு சான்று.

ஊழ்வலி, பிற வலிகளிலெல்லாம் தலையாயது என்று நன்கறியும் மக்களனைவரும், ஊழ் தம்மைப் பற்றாது தடுத் துக் காக்க வேண்டும் வகையெலாம் முயல வேண்டுவது அவசியம். இம்மை மறுமை பற்றிய கருத்து வேற்று மை கொண்ட அறிஞர்களுங்கூட, ஊழ் எனும் ஒன்றைக் குறித்துச் சிந்தித்தேயாகவேண்டும். ஊழை ஒரு பொருட் டாக எண்ணி, தீவினைக் கஞ்சி நடக்காவிடில் தீங்கிழைத்து மாணு உவகை கொள்வாரின் தொகை பெருகிவிடும் என் பதில் ஐயமில்லை. ஊழின் வலிமைக் கஞ்சி நடப்பவர்க ளிடம், பிறர் செய்யும் தீவினையை மறந்து மன்னிக்கும் தன்மை தானாக வமைவதோடு, மற்றவர்பால் மன மிரங்கி அன்புகொண்டு இனிது வாழ இடமும் அளிக்கும். ஆகை யால் ஒவ்வொரு மனிதனும் ஊழ்வலிக் கஞ்சிப் பிறர்க்கு

கருங்கூத்து.

வித்துவான் திரு. சீ. மணிவாசகன் அவர்கள், தமிழாசிரியர்,
செயிண்ட் சோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

கருங் கூத்தென்பது பெருங் கூத்திற் கிடையறவு தோன்றாதிருத்தற் பொருட்டும், காட்சி காண்போருள்ளக் கிளர்ச்சி குறையாதிருத்தற் பொருட்டும், கூத்தரங்குகளில் காண்பிக்கப்படும் சிற்சில காட்சிகளடங்கிய ஒரு சிறு கூத்தாகும்.

இக்கால மக்களனைவரும் கருங் கூத்தென்னும் தூய தனித் தமிழ்ச் சொல்லினை யொழித்து, (Comic) என்னும் ஆங்கில மொழிச் சொற்றுணை கொண்டு, அக்கூத்தின் பெயரை வழங்கி வருகின்றனர்.

ஆனால் இக்கருங் கூத்தியல் முறை தொன்றுதொட்டு இன்றுவரை பொன்றாது நின்று நிலவி, தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்றது. தற்காலக் கூத்தரங்குகளி லும் பேசும் படக்காட்சிகளிலும் கருங்கூத்து இன்றியமை யாத பேருறுப்பாகவும் விளங்கி வருகின்றது.

கருங்கூத்தென்னுஞ் சொற்கு நச்சினார்க்கினியர் தண் ணிய நாடகம் எனப் பொருள் விரித்துள்ளார். இவ்வுரைக் கோர் விளக்கம் எழுதிய இளவழகனார் காணக் கருத நகை விளைத்தலான் அவ்வாறு கூறினார் என்க, என மொழிந் துள்ளார்.

ஊறு செய்யாது, அன்புவழி நின்று, பெறற்கரும் பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்வானாக!

'இன்பம் இடரென்று இரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடித்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே!' 'திருமூலர்'

எனவே கருங்கூத்து கண்ணுகிய புறவுறுப்பாற் காணவும், கருத்திற்கு முதலான மனவுறுப்பால் நினைக்கவும் நகை விளைக்கவேண்டுமென்ருராயிற்று.

ஆதலின் இக்கருங் கூத்தியல் முறை தமிழ் மக்களால் தவிர்க்கமுடியாததும் பெரும் பயன் உள்ளதாகவும் கருதப் பட்டு வருகின்றது.

பெருங் கூத்திற்கு எட்டுச் சுவைகளும் முற்றப் பொருந்தி யிருத்தலே சிறப்பாயினும் கருங்கூத்திற்கு எண் சுவைகளில் முன் சுவையாகிய நகைச் சுவையே விஞ்சி நிற்றலின் பெரு நகைக் கூத்தென்னும் பெயர் கருங் கூத்திற்குச் சாலப்பொருந்துவதாயிற்று. கருங் கூத்திற்கு பெரு நகைக் கூத்தென்னும் பெயர் எற்ருல் பெறுது மெனின், குறிஞ்சிக் கலியிறுதிப் பாட்டின்கண் ' முதுபார்ப் பான் வீழ்க்கைப் பெருங் கருங்கூத்து, ' ஊர்க்கெல்லாஞ் சாலும் பெருநகையல்கல் நிகழ்ந்ததொரு நிலையே ' என் னுஞ் சொற்றொடர் பற்ருகப் பெற்ரும்.

பெரு நகைக் கூத்தினலாய பெரும் பயனென்னை ? பெரு நகை விளைத்தலொன்றே பயனெனின், அன்று, பெரு நகை விளைத்தலொன்றே பெரும் பயன் ஆகாமை யின் என்க. மற்றென்னையோவெனின் கூறுவல்; முன்னர் கருங்கூத்து காணக்கருத நகை விளைக்க வேண்டுமெனக் கூறியவதனன், மனிதவாழ்வு செம்மைப் பாடடைய இன் றியமையாது வேண்டப்படும் மனத்திற்கினிய நலத்தெளிவு கருங்கூத்துக் காட்சியால் உண்டாகு மென்றலின் பெரும் பயன் உண்டென அறிக.

எனவே கருங்கூத்து தனி மனிதன் நல்வாழ்வுக்கு வழி யறிவிக்கும் ஓர் பெரும் பயன் சான்ற கலை யென்பது உறு திப்படுகின்றது. தனி மனிதன் நல் வாழ்வே உலக மக் களின் நல்வாழ்வாகலின் உலக மக்களனைவருக்கும் கருங் கூத்து, பெரும்பயன் கெழுமிய கலையாகப் பயன் படுகின் றது. இக்கருங்கூத்தியல் முறை நாட்டிற்கு நாடு வேறு

ஆங்காங்கே. (5)

திரு. கோ. தியாகராசன், G. M V. C., தஞ்சை.

தொல்காப்பிய மரபியலில்,

> 'மூங்கா வெருகெலி மூவரி அணிலோ
> டாங் கவை நான்கும் குட்டிக் குரிய.'

என்பது போன்ற சில நூற்பாக்கள் குட்டிகளுக் குரிய தனிப் பெயர்களை விளக்கிக் காட்டுவன. இதுபோல் நம் நாட்டில் சிறந்த பழங்களாகிய மா, பலா, வாழை இவைகளின் பிஞ்சுகளை, நிரல் நிரையே, 'மா வடு', 'பலா முசு', 'வாழைக் கச்சை' என்று குறிப்பிடுகிறோம். எனவே, இவ்வழக்கு மரபியலில் சேர்ந்ததன்றோ! (மரபு-Usage.)

2. தமிழ்ச் சொல் லிருக்கப் பிறமொழிச் சொல்லைப் பயன் படுத்தும் தமிழர்களுக்கு:

பட்டுத் தோன்றினும் கலை யமைப்பிலே ஒருமைப் பாடுடையதென்பது அறியக் கிடக்கின்ற உண்மை.

தற்போது தமிழ் நாட்டுப் பேசும் படக்காட்சிகளின் வழியாகக் கருங்கூத்துக் கலையினை சிறப்பித்து வரும் கலைவாணர் N. S. கிருஷ்ணன் அவர்களின் கலைத் தொண்டு தாழ்ந்த தமிழகத்தை உயர்ந்த தமிழகமாக்கும் என்பது ஒருதலை.

நிற்க பண்டைத்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான கலித் தொகையின் கண் கருங்கூத்துக் கருத்தமைந்த பாடல்கள் நிறைந்துள்ளன, அவற்றைத் தற்காலக் கூத்தரங்குகளிலும் பேசும் படக்காட்சிகளிலும் நடிப்பிக்கச் செய்து பொதுமக்கள் அனைவரும் அறியும்படிச் செய்தல் தமிழ்ப்பெருமக்களின் கடமையாகும்.

தொல்காப்பியத்தின்கண் நகைச்சுவைக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட ஆரியர் கூறுந்தமிழும். குருடரும், முடவரும் செல்லுஞ் செலவும், சுற்றத்தாரை இகழ்ந்து வரும் குழவி கூறும் மழலையும் கருங்கூத்தின் பாற்படுவனவேயாம்.

(அ)

வீடு, இல்லம், மனை என்னும் பல சொற்களிருக்க house (அவுஸ்) அல்லது கிரகம் என்று சொல்வானேன்!

தமிழன் வீட்டின் அமைப்பு எத்தன்மையது? தமிழன் வீடு மாந்தன் வடிவமுடையது! எப்படி?

(1) நம் முகத்தில் நீண்டு உயர்ந்திருக்கும் மூக்குப் போன்றது வீட்டின் மூக்கு—Λ.

(2) நம் முகத்தி லுள்ள வாய் போன்றது வீட்டின் வாயில் (இல் + வாய்-வாயில்).

(3) வாயின் மேற்புறத்தி லுள்ள கண்கள் போன்றன வீட்டு வாயிலின் இரு பக்கங்களிலு முள்ள மாடங்கள்.

(4) கண்களின் ஒளி போன்றன இம் மாடங்களி லுள்ள விளக்குகள்.

(5) வாயின் இரு பக்கங்களிலு முள்ள காதுகள் போன்றன வீட்டு வாயிலின் இரு பக்கங்களிலு முள்ள சாளரங்கள். (வீட்டின் முன்னிருந்து கூப்பிடும் ஓசை இச் சாளரங்களின் வழி உட்சென்று உள்ளிருப்பவர் காதுகளில் விழும்.)

(6) வாயிலின் மேலுள்ள பலகை நெற்றி போன்றது. நெற்றியில் சமயக் குறிகளை யிடுவது போல் வாயிலின் நெற்றியில் நாமம், சங்கு, சக்கரம், சங்கம் முதலியன செதுக்கப் பட்டிருக்கும்.

(7) இவ் வாயிலின்வழி உள் நுழைந்தால், ஒரு சிறு நடை யுண்டு. இது காற்றுக் குழலும், உணவுக் குழலு முள்ள கழுத்துப் போன்றது.

(8) இதைக் கடந்து உட் சென்றால் காற்றோடுவதற்கான திறந்த வாசல் உண்டு. இது நாம் காற்றை உட் கொண்டு வெளி உந்தும் நுரை ஈரல் உள்ள மார்பு போன்றது. (Thorax)

(9) இந்த வாசலின் நடுவி லுள்ளது துளசி மாடம். இது கடவுளை நினைக்கும் நெஞ்சு போன்றது. (துளசி மாடம் இல்லையேனும, இங்கு நின்று கடவுளை வேண்டுதல் உண்டு.)

(10) ஈரமுள்ளவர் நெஞ்சு போல், இந்த இடம் கோடைக் கால இரவில் கொஞ்சம் குளிர்ந்திருக்கும்.

(11) இந்த மார்பைக் கடந்து சென்றால் அடுப்பங்கரையுள்ளது. இது போன்றது நம் வயிறு. இவ் வயிற்றில் உணவும், வெப்பமும் உள்ளது விளக்கம்.

(12) இப் பகுதியின் பின்னுள்ள புழைக்கடை (கடை+புழை-புழைக்கடை) நம் வயிற்றின் கடையி லுள்ள கழிவாய்கள் போன்றது.

(13) நாம் நம் இரு கைகளையும் தோட்கள் வரை தூக்கினால் இடம் கூடும். இதுபோல் நம் வீட்டின் இருபக்கங்களிலும் கைகளை (பனங் கைகளை)த் தூக்கித் தாள்வாரங்கள் கட்டினால் இடம் மிகுதிப்படும். (தாள் என்னும் சொல்லிற்கு ஒட்டு என்னும் பொருள் உள்ளது. எனவே, ஒட்டிச் சேர்த்துள்ள இந்த இடத்தைத் 'தாள்வாரம்' என்பது ஏற்றதே. மேலும், உடலில் தொகுக்கப்பட்டதே தோள். எனவே, ஒட்டப்பட்டு நீண்டுள்ள கைகளா லாகிய இடம் உடல் அமைப்பிற்கு ஒப்பியதாகும்.)

(14) 'மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே' என்பதுபோல, இவ் வீட்டின் நிலையும், அதில் வாழும் மக்களின் நிலையும ஒத்துக் காணப்படுகின்றது.

(15) நம்மை நாளும் துப்புரவு செய்வதுபோல், நம் வீட்டையும நாளும் துப்புரவு செய்யவேண்டும். நாம் ஆடை, அணி அணிந்து அழகு செய்து கொள்வது போல, நம் வீட்டையும் அழகு செய்து வாழ்வதற்காக நம் பண்டையோர் அமைத்துக் கொடுத்த இருக்கையின பெயர் வீடு, இல்லம், மனை என்றிருக்க, அவுஸ் (House) அல்லது கிரகம் என்று சொல்லும் தமிழருக்குச் சனிக்கிரகம பிடித்துக் கொண்டது போலும்!

(ஆ)

(1) மதி என்னும் சொல்லிற்கு முதற்பொருள் அளவு. இப் பொருளில் மலையாளத்தில் இன்றும் வழங்குகிறது.

இச்சொல் ஆங்கிலத்தி லுள்ள 'estimate' என்னும் சொல்லை ஒப்பியது. மதி, மதிப்பு, மதித்தல், மதிப்பவர் என்பது போல esteem, estimate, estimation, estimator என்னும் ஆங்கிலச் சொற்கள் உள்ளன.

(2) ஞாயிறு ஒரு நாளின் அளவைக் காட்டுவது (நாள் + இறு-ஞாயிறு)

(3) ஆனல் மதியோ உவா (new moon) நாளிலிருந்து தான் நாளுக்கு நாள் வளர்ந்து நிறைமதியாகி, பின் நாளுக்கு நாள் தேய்ந்து முற்றும் மறைந்து முப்பது நாட்களை அளக்கும் காள் ஆயிற்று. இவ்வாறு மதியால் அளவிடப்படும் காலத்திற்குத் திங்கள் எனவும், அளவிடும் கோளைத் திங்கள் எனவும் சொல்லுகிறோம்.

(4) மதி வளரும் காலத்தை வளர்பிறை எனவும், (பிறை= பிற)-நிறை மதிக்குப் பின் தேயும் காலத்தைத் தேய்பிறை யெனவும் குறிப்பிடுகிறோம். இக் காலங்களில் மதியானது மாலைக்கு முன் தோன்றின் முன் நிலா எனவும், மாலைக்குப் பின் தோன்றின் பின் நிலா எனவும், குறிக்கிறோம். இவ்வாறு மெய்ம்மை நிகழ்ச்சிக்கும் அறிவிற்கும் ஏற்ற சொற்களை விடுத்துச் சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் என்னும் சொற்களைப் பயன்படுத்துவது ஏற்குமா ?

(5) சுக்கில பட்சம் என்றால் ஒளிப்பக்கம் எனவும், கிருஷ்ணபட்சம் என்றால் இருள்பக்கம் எனவும் பொருள் படும். இது மெய்யோ? நிறை மதிக்கு முந்திய நாள் ஒரு அளவுடன் இருபத்தெட்டு நாழிகைகள் நிலா தோன்றுவது போலவே, நிறைமதிக்குப் பிந்திய நாளும் அதே அளவுடன் இருபத்தெட்டு நாழிகைகள் நிலாத் தோன்றும். இது போலவே, நிறை மதிக்கு முன்னும் பின்னும் ஒத்த அளவில் ஒத்த நாழி

கைகள் நிலவு தோன்றும். மெய்ம்மை இதுவாக, நிறைமதிக்கு முந்திய காலத்தைச் சுக்கில பட்சம் எனவும், பிந்திய காலத்தைக் கிருஷ்ண பட்சம் எனவும் குறிப்பிடுவது மெய்ம்மைக்கும் அறிவிற்கும் மாறானதன்றோ? எனவே, 'பிற மொழி பெரு மொழி' என்னும் பேதைமை நீங்கித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துமாறு வேண்டுகிறேன்.

II

தமிழிலுள்ள சொற்றொடர்களில் (phrases) இரண்டிற்கு விளக்கம்.

1. இடக்கர் அடக்கல் ஒன்றுக்கு இரண்டிற்கு—'ஒன்றுக்கு' என்பது நீர் பிரிவதை மாத்திரம் குறிக்கும். 'இரண்டிற்கு' என்பது எருவும் நீரும் பிரிவதைக் குறிக்கும். தனியாக நீரை விடலாம்; ஆனால் எருவிடுங்கால் நீரும் பிரியும். ஆகையால், இயற்கையை ஒப்பி நீர் மட்டும் பிரிவதை 'ஒன்றுக்கு' எனவும், எருவும் நீரும் பிரிவதை 'இரண்டிற்கு' எனவும், தன்மானமுள்ள பண்டைத் தமிழன் பெயரிட்டான்.

2. 'தீட்டு, தொடக்கு': இதில் 'தீட்டு' என்பது தீண்டுவதால் உண்டாவது. 'தொடக்கு' என்பது தீண்டுதலில்லாமல் தொடர்பினால் உண்டாவது. தந்தையோ, தாயோ இறந்தால் அதுபொழுது அருகேயில்லாமல் பல காதங்களுக் கப்பால் உள்ள மக்கட்கும் 'தொடக்கு' உண்டு. எனவே, எங்களுக்கும், அவர்களுக்கும் தீட்டு, தொடக்கு இல்லையென்றால், எங்களிருவர்களுக்கும் ஒரு வகையிலும் பற்றில்லை என்பது பொருள். தமிழன் பண்பே பண்பு!

III

நம் நாட்டில் வழங்கும் சொற்களில் பல தமிழ்ப் பண்பிற்கு ஏற்காதவை இரண்டு.

1. ஈருருளி (Bicycle)

இந்த ஈர் உருளை உள்ள வண்டி மேல் நாட்டில் தோன்றிய பொழுது, அந் நாட்டில் நான்கு உருளை வண்டிகளே மிகுதியா

யிருந்தன. அவைகட்கு நான்குருளை வண்டி (four wheelers) என்னும் பெயர் வழங்கியது. எனவே, புதிதாக அமைக்கப்பட்ட இரண்டுருளை வண்டிக்கு 'பை சைக்கில்' (bicycle) என்று பெயர் கொடுத்தனர்.

நம் நாட்டிலோ, இந்தப் புதிய வண்டி (bicycle) வந்த பொழுது, இரண்டுருளை வண்டிகளே மிகுதி. நான்குருளை வண்டிகள் இருந்தன. ஆனால், அவைகள் மேல் நாட்டார் வண்டிகளைப் போலவே அமைக்கப்பட்டு, அவைகளுக்குப் பீட்டன், கோச், லாண்டோ முதலிய ஆங்கிலப் பெயர்களே வழங்கி வந்தன. இந்த பை சைக்கில் இந் நாடு வந்தபொழுது யாரோ ஒருவன் 'துவிச்சக்கரம்' என்றான், அச் சொல்லை 'ஈருருளி' என்று தமிழப் படுத்தினான் மற்றொருவன். ஈருருளைகள் உள்ள வண்டிகளே மிகுதி உள்ள தமிழ் நாட்டில் 'ஈருருளி' என்னும் சொல் ஏற்காது!

மாடு பூட்டியிருக்கும் வண்டியை மாட்டுவண்டி எனவும், குதிரை பூட்டிய வண்டியைக் குதிரைவண்டி எனவும், கையால் இழுக்கும் வண்டியைக் கைவண்டி யெனவும், பின்னின்று தள்ளும் வண்டியைத் தள்ளுவண்டி எனவும், பிள்ளை நடை பழகும் வண்டியை நடைவண்டி எனவும் பெயரிட்ட தமிழ்ப்போக்கிற்கு ஏற்க பைசைக்கிளை 'மிதிவண்டி' (காலால் மிதித்துச் செலுத்துவதால்) எனப் பெயரிடுவது ஏற்றது. சீனர்கள் இந்த வண்டிக்கு 'கியோக்' தப்சர், (காலால் உதைக்கும் வண்டி) எனவே பெயரிட்டிருக்கிறார்கள்.

2. வடமொழிகலந்த இச்சொல்லை 'அகரவரிசை' என அறியாத் தமிழன் பெயரிட்டனன் போலும்.

அட்டவணைகளும், பெயரேடுகளும், மற்றும் அகரவரிசையில் எழுதப்படுவனவே; சொற்களையோ, பெயர்களையோ எளிதில் தேடிப்பார்ப்பதற்கே அகரவரிசையில் எழுதுவது. ஆகையால், இச் சொல் அகராதி என்னும் நூலின் உட்கருத்தை நன்கு விளக்கும் சொல்லன்று.

ஷெல்லி.

திரு. வேலூர்க் காரமுகன்.

அவனியை அருங் கவிகளால் அழகுற வைத்த அருங் கவிகள் அரும்புகையில் எதிர் காலம் ஏமமுறப் பல்லாண்டுகள் பாரில் வாழ்வரென்ற உயரிய நம்பிக்கையாம் பேரொலியுடன் கவிமணி முடிதாங்கிச் செயற்கரிய செழுமைச் செய்யுள்கள் வனைந்து, முழுமதி யென மாண்புடன் மிளிர்ந்து சின்னாளிருந்து சிதைந் தொழிந்து குவலயத்தை என்றும் துன்ப ஆழியில் மூழ்க வைத்தவர்களுள் ஆங்கில அருங் கவி ஷெல்லியும் ஒருவரே. 36ஆம் வயதிலே பெருங்கவி பைரன் பாரை விட்டகன்றார்;

ஆங்கிலத்தில்,

Lexicon=A vocabulary or book containing an alphabetical arrangement of the words in a language or a considerable number of them with the DEFINITION of each.

Dictionary—A book containing the words of a language, usually arranged alphabetically, with EXPLANATIONS OF THEIR MEANINGS.

மேலே காட்டிய இரண்டு ஆங்கிலச் சொற்களின் பொருள்கள் கொண்ட சொல்லே அமைப்பதே தக்கது.

இத்தகைய சொல்— சொல் விளக்கம். விளக்கம் என்னும் சொல்விற்கு வேர்ச்சொல் 'விள்'. விள்=திறத்தல், பிரித்தல். எனவே, சொற்களைத் திறந்து பிரித்துக் காட்டுவதால் உட்பொருள் நன்கு தெரியும். இக் கருத்தை ஏற்றே 'நீதி நெறி விளக்கம்' என்னும் பெயருள்ள ஒரு நூல் தமிழில் உள்ளது. ஆகையால் 'சொல் விளக்கம்' என்பதே தற்காலம். 'அகராதி' என்னும பெயருடன் வழங்கும் நூலிற்கு ஏற்ற பெயராகும்.

தமிழ் வாழ்க.

25ஆம் வயதிலே கனிவுறுங் கவி கீட்சு குவலயத்தினின் றகன் ருர்; 30ஆம் வயதிலே சிறந்த கவி ஷெல்லி விபத்தால் உலகை விட் டொழிந்தார். ஒரே காலத்திய முப் பெருங் கவிகள் ஒருவர் பின் ஒருவராய் ஓடி ஒளிந்தமை இறைவனின் திருவுள ளமோ அன்றி அவனி எய்திய சாபமோ!

1792, ஆகஸ்டுட் 4ஆம் நாளை என்றும் நினைக்கவல்ல இனிய இயல்பை அரிய ஆங்கில இலக்கியம் பெற்றமை, சால்புடைய ஷெல்லி கவி மணி முடிதாங்கி—கலைக்கோ லேந்தி—இயற்கை ஒளியுடன்—புரட்சிக் குரலுடன்—சிந்தனை வித்துடன்—சீர் திருத்தக் கொள்கையுடன்—உருகிப் பெருகி உளங் குளிர வைக்கும் இசையுடன் இலங்கியமையா லன்றோ!

இயற்கையி லிரண்டறக் கலந்து, இவர் வுள்ளமும் இயற்கை யும் ஒன்றி, உணர்ச்சி பெற்று, துன்ப உச்சியிலே பல காட்சிகள் கண்டு, கவலைக் கடலில் மூழ்கி மூழ்கி, இன்னற் கரை எய்தி இடி யுண்டமையால் வாழ்வியலை இவர் உணர்ந்ததைப் போன்று இவர் காலத்திருந்த எவரும் உணர்ந்தார்களில்லை. இளம் வயதில் பள்ளியில் மாணவனு யிருக்கையில் பரிதியும், மதியும் விண்மீன்களும் இலங்கும் நீல நிற வானத்தில் இவர் தம சிந்தையை ஒன்ற வைத்து, அவண் ஏகும் மேகங்களைக் கண்டு, நனவு நிலையை மறந்து, கனவு நிலையில் திளைத்து, மகிழ்ந்ததுடன் பசும் புல் தரை மீதிருக்கையில் உறங்கிய உள்ளம் விழிப்புற்று வையகம் மேகத்தால் கவரப்பட்டுள்ள தென்றும், தன்னையு மறியாமல் கண்ணீர் பெருக்கெடுத் தோடிற் றென்றும், பகைவர் களிடத்திருந்தும் கொடியோர்களிடத்திருந்தும் துன்பக் குரல் செவியுற்றதாகவும், பின்னர் இரு கைகளைக் கட்டி மெய்யறி வுடன்—நீதியுடன்—உரிமையுடன் இருப்பதாகத் தேர்ந்து நம்பிக்கை பெற்றுத் தனிமையிலிருக்க விழைந்ததை தன் நண்ப னுக்குப் பதினென்ரும் வயதிலேயே கவி பாடிப் பகர்ந் ததை எண்ணுங்கால், இவ் வவனி வாழ்வு இன்ன லுடைத் தென்பதை இளமையிலேயே உணர்ந்து அவல வாழ்வின் ஆழத் தின் அடியை எழிலுடன் விளக்கிய சால்பு ஒன்றிற்கே வையகம் இவரைப் பாராட்டுகிறது. பள்ளிப் படிப்பில் பற்று கொள்ளா மல், இயற்கைச் சோலைகளையும், அழகிய மலர்ச் செடிகளையும்,

உயர்ந்து வளர்ந்த மரங்களையும், அருவிகளையும், குளங்களையும், பசுமைக் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்து மிக வுயர்ந்த பெரிய மணி நூல்களைப் படித் தின்புற்றுக் காலங் கழித்து வந்தார். கூரிய அறிவின் பிழம்பாக இவர் விளங்கியமையால் விநாடியில் பல வரிகளைப்படிக்கும் பேராற்றல் பெற்றதுடன், மேல் புலத்தை மேன்மையுற வைத்த யவன மொழியையும் லத்தீன் மொழியையும நன்கு பயின்று, பின்னைய மொழியில் பாக்க ளியற்றும் சிறந்த புலமை எய்தி, மேல் நாட்டுக் கவிகளுக்கே தலையாய ஹோமரின் இலியட், ஒடிசி என்ற இலக்கியத்தைக் கற்றுத் தேர்ந்து தெளிந்து பீடுடை பிளாட்டோவின் கொள்கைகளை அலசி யறிந்து, சிந்தனை ஒளியால் பேருவகை எய்தி, ஒரு நாளில் 18 மணி நேரம் பல நூல்களைப்படித்தே காலங் கழித்துப்பள்ளிப் படிப்பில் கருத்து கொள்ளாது, கல்லூரிப் படிப்பில் ஊன்றி நிற்காது, 'நாத்திகத்தின் இன்றியமையாமை' என்ற கட்டுரையை வெளியிட்டமையால், கல்லூரியிலிருந்து வெளியேற்றப் பட்டார். உலகை இரு பகுதியாகப் பிரித்து, மன்னரும், மதவாதிகளும், செல்வவந்தர்களும் தீங்குடைய பகுதிக் குரியவர்களென்றும், நற்பொருளாளர்களும் (Philosoper), துன்பப்பட்டவர்களும், ஏழைகளும், நன்மையுடைய பகுதிக் குரியவர்களென்றும் கூறினார். மன்பதையின் இயற்கை உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துவது மனிதனால் அமைக்கப்பட்ட சட்டம் என்பது வெறும் புரட்டு அல்லது பித்தலாட்டம் என்றார். அழகிய பொருளை விழி காண்கையில் உள்ளத்தில் அழல் அரும்புவதால் காதலிப்பதும் காதலிக்காமலிருப்பதும் மனிதனுடைய ஆணையிலா இருக்கிறதென்று வினவுகிறார். காதலின் கனிவு உரிமை என்றும் அதை வரையறுத்துக் கட்டுப்படுத்தினால் உதிர்ந்து கருகிவிடு மென்றும் கூறுகிறார். அடக்கம், பொறுமை, பயம் இவைகளுக்குக் காதல் எதிர்மறை என்றியம்பித் திருமணம் என்பது சிறைக்கூடம் என்றார்.

பூதங்களையும், ஆவிகளையும் காண, காடு, மேடு, குகை, இடுகாடு முதலிய விடங்களிலெல்லாம் சென்று பார்த்த பொழுது ஒன்றையும் காணமல் பறவைகளின் குரலையும், மலர்ந்த மலர்களையும் கண்டாரே யன்றி வேறொன்றையும் கண்டாரில்லை, இவர்தம் இயற்கையின் அடிப்படையாகிய காதல் குடும்பத்தி

லரும்பி, நண்பர்களிடம் மலர்ந்து, தம்பால் காய்த்துச் சமூகத்திடை கனிந்து பழுத்தமையால், தம்பால் நம்பிக்கையும், கடமையில் நம்பிக்கையும், உலகை இயக்கும் காதலில் நம்பிக்கையும், மனிதன் முழு நன்மை யுறுவதில் நம்பிக்கையும், உயிர் யாண்டும் இருப்பதில் நம்பிக்கையும், இயற்கையிலுள்ள தெய்வீகத்தில் நம்பிக்கையும் கொண்டு, சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், விடுதலைக்கும், மாதர் உரிமைக்கும், மக்கள் உரிமைக்கும், பெரிதும் விழைந்து அரும்பாடு பட்டதுடன், மதம் மன்னராட்சிக்கு அடிகோலி மக்களை அடிமைப்படுத்தும் கொடுங் கருவி எனத் தேர்ந்து, மதத்தை எதிர்த்துக் கொடுமையை எதிர்த்துப் பெரும் புரட்சிக்காரராகப் பீடுடன் பிறங்கினர். இவரின் தனியுறிவு தகவுடன் திகழ்ந்ததைப் போன்றே சிறந்த ஒழுக்கச் சீலஞகை ஒளிர்ந்தார்.

எச்சமயத்திற்கும் சிக்காமல் இயற்கையைப் பெரிதும் விரும்பி, எல்லாம் கடவுளாயிருத்தலால் கடவுள் என்ற ஒன்று தனியாக இல்லை என்ற இயற்கை வாதக் (அக்னுஸ்டிக்) கொள்கையை இறுகப்பற்றித் தீர்க்க முடியாதவைகளைத் தீர்க்கமுடியாதென்றும், தெரியாததைத் தெரிந்துகொள்ள முடியாதென்றும், ஒளி மறைவின்றி வெள்ளையாகத் துளக்கமற விளக்கிய உண்மைக்கும் இவர்தம் தனி யறிவின் தகவுக்கும் அறிஞர் உலகம் இவரைப் பாராட்டுகிறது. என்ருலும் மலைமீதிருந்து மணிமொழி மொழிந்து ஈரைந்து கற்பனைகளை இவ் வுலகிற் கீந்து சிலுவையில் சிதைந்த சிந்தனையாளர் இயேசுவையும் அவரின் அற நெறியையும் ஷெல்லி போற்றிப் புகழ்ந்து மதித்தாலும், இயேசுவின் பெயரால் பிறங்கிய கொள்கைகளையும் அதன் பேரில் நிறுவப்பெற்ற சமயத்தையும் மிகவும் வன்மையாகக் கண்டித்துச் சமுதாயம் சீர்பெற்று அறிவுத் துறையிலேகி விளக்கமுற்று நலமுறப் பெரிதும் பாடுபட்டதுடன், நோயால் நலமிழந்தவர்களுக்கு மருத்துவ வுதவி செய்து, பணமும், கொடுத்துக் காப்பாற்றியதுடன், நோயால் துன்புற்றவர்கள் மனு மூலம் தெரிவித்தால் அவர்களில்லம் போந்து விரைந்து ஆவன புரிந்து ஊக்க மூட்டியதுடன் தம்பணப்பையை என்றும் நோயாளிகளுக்குத் திறந்து வைத்திருந்ததுடன், எளியோர்களுக்கும் ஏழைகளுக்கும் நிரம்பப் பணவுதவி செய்து தம் நண்பர்கள் பட்ட கடன் எல்லாவற்றை

யும் தீர்த்து ஏனையோரையும் ஏமமுற வைத்த உயர்வு இவருக்கன்றி எக் கவிகளுக்கு மில்லை. எண்ணியதை எழுதி, எழுதியதைப்போல் நடை முறையில் வாழ்ந்து, வள்ளலைப் போல் பொருளை வாரி வழங்கி, வறுமை, நோய், கடன் முதலியவைகளால் சிக்குண்டவர்களுக்குப் புகலிடந் தந்து, ஏனையோரையும் ஏமமுற வைத்த மாண்பு ஷெல்லிக்கே உண்டு.

சிறந்த செல்வ வளம் நிறைந்த குடும்பத்தவ ராயினும், இவருக்கும் இவர் தந்தைக்கும் உடன்பா டில்லாமையால் குடும்பத்தைப் பிரிந்து தனித்திருந்தபொழுது, எழில் திகழும் விழியும், பொலிவுடை முகத்தோற்றமும், இனிய குரலும், நல்ல சாயலும், சிரித்த பண்பும் உருவாய் ஒளிர்ந்த எழிலுடைப் பூங்கோதை ஹேரியட் மீது காதல் கொண்டார். இவ் வணங்கு தாயிழந்து, தமக்கையுடனும், தந்தையுடனும், மிடியுண்ட, வாழ்வுக்கிரையானதுடன், பள்ளியிலும் பகரொணுக் கொடுமைக்கிரையாகி துன்புறுவதை, ஷெல்லியிட மறிவிக்கவே, ஷெல்லி மிகவும் இரங்கிக் கனிந்து துன்புற்ருலும், தம்முடைய இன்மை வாதக் கொள்கையை வற்புறுத்தி வந்தமைக்கு இவ் வணங்கு ஒன்றும் கூருது, இவர் மீது நிலைத்த பற்று கொண்டமையால் உரையாடலிலேயே இவர் காதல் வித்தை அவள் வுள்ளத்தில் தூவி அன்பு நீர் பாய்ச்சியதால், தற்கொலைக்குத் திட்டமிட்ட தாதையின் திட்டம் தவிடு பொடியானது போலும். ஹேரியட்டிற்கும் ஷெல்லிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து பெருகினும், ஷெல்லி ஏற்கனவே காதலித்த சூரோவ் என்ற அணங்குமீது காதல் இல்லாம லில்லை. என்ருலும், ஹேரியட்டைக் காதலியாகக் கொண்டதும் இவருக்கும் இவர் குடும்பத்திற்கும் நட்பு ஏற்பட்டு ஆண்டுக்கு 200 பவுன்கள் பெறுவதாக உறுதி ஏற்பட்டதும், காதலியின் துயர் துடைக்கக் காதலி ஹேரியட்டுக்கு விடுத்த முடங்கலில் வாழ்வு நடாத்த 200 பவுன்கள் ஆண்டுக்குப் போதவில்லையாளுல் காதல் ஒன்றே போத வைக்கும் என்று ஷெல்லி வரைந்ததை எண்ணுங்கால், காதலியின் காதலுக்கு எவ்வளவு உயர்வு தந்தார் என்பதை உரைக்கவும் வேண்டுமோ!

இருவரும் வெளியூர் ஓடி உவகையுடன் வாழ்கையில் ஷெல்லி தம் காதலிக்கு லத்தின் மொழியையும் அதன் இலக்

கியத்தையும் கற்றுக் கொடுத்த இருவரும் இலக்கியம் பயின்று இன்புற்றனர். உரையாடுங்கால் அறமுறையில் நேர்மையுடன் நற்பொருள்களை முன்னிறுத்தி மனமொத்து பேசிப் பேருவகை எய்துவர்! இருவரும் கனிந்த காதலால் கட்டுண்டு கழி பேருவகை எய்தி இல்லத்தை மணி நூல்களால் நிரப்பி இருவரும் ஒருவராகி வாழ்ந்துவரினும், யாது காரணத்தாலோ இரண்டாண்டு கழிந்து மனம் அனலாகும் பிரிவு நிகழ்ந்ததை எண்ணுங்கால் மனம் நடுநடுங்கி உள்ளம் கலக்கமுறுமலிருக்காது.

ஷெல்லியின் முடங்கலைக் காண்கையில் பாவை பற்று கொண்டமையால்தான் பற்று கொண்டதாகவும், திருமணமென்பது பெருந்தொல்லை என்று கூறித் தாம் ஒரு திங்களாக இல்லத்தில் இல்லை என்றும், தனிமையிலிருந்தும், நண்பர்களிடமிருந்தும், நற்பொருள்களிடமிருந்தும் விலகியதாகவும், அவைகள் யாவும் மறைந்து வந்த அழல் வாழ்வைப் புதுப்பிப்பதாகவும், மரங்களும் நுண்பொருள்களும் அருவிகளும் இவரை இழுக்கின்றன வென்றும் கூறியதை அறிகிறோம். ஹேரியட்டிற்கும் ஷெல்லிக்கும் உடன்பாடு கரைந்து எதிர்மறை அதிகரிக்கவே ஷெல்லி, மேரி என்ற மங்கைமீது காதல் கொண்டாலும், ஷெல்லிக்கு ஒருவித கலக்கம் ஏற்பட்டது. கடைசியில் இருவருக்கும் நிலைத்த பிரிவு ஏற்பட்டதால் சிறந்த ஷெல்லியின் வாழ்வு சிதைந்து மனம் பெரிதும் மங்கிற்று. அவலமும் கவலையும் தொல்லையும் ஷெல்லியைச் சூழ்ந்தன. ஹேரியட் மேஜர் ரையான் என்ற மாற்றான்மீது பற்று கொண்டு, 1818 இல் நீரில் மூழ்கி இன்னுயி ரிழந்தாள். பிரிவு ஏற்பட்ட பிறகு ஹேரியட் இறந்தாலும், ஷெல்லியின் உள்ளத்தில் ஆறாப் புண் ஏற்பட்டு இந்நிகழ்ச்சி அவர் மனதில் என்றும் புதுமையாகவே இருந்ததுடன், இவரின் கடைசிக் காலம் வரை ஹேரியட்டை எண்ணி எண்ணி உருகாமலில்லை. காதலித்த காரிகை கைவிட்டு அயலானிடம் தொடர்பு கொண்டிருந்தமை தெரிந்த பின்னரும் ஷெல்லி அக்காரிகையை மறவாமலிருந்தமை புலவரின் பெருந்தகைமையை விளக்குகிற தன்றோ! புறக்கணித்த பெட்ரேசை டாண்டே மதித்ததைப் போல் ஷெல்லியும் ஹேரியட்டை மதித்தார். மேரியுடன் ஷெல்லி நலமுடன் வாழ்ந்து, பிரான்ஸ், இடாலி முதலிய நாடுகள் சுற்றி இன்புடன் வாழ்ந்து பல பெருங் கவிகள் வனைந்தார்.

உலக வாழ்வில் ஊசலாடிய ஷெல்லி உலக இலக்கிய வானத்திலே இயற்கைக் கவியாக விரைந்து பறந்து நடனம் என்றும் ஆடும் உவமையில்லா உயர் பெருஞ் சிறப் பெய்தி இற வாப் புகழ் எய்தி யுள்ளார். அரிய ஆங்கில இலக்கிய அரங்கில் உளத்தை உருக்கும் பாக்கள் பாடிய முப் புலவர்கள் தாம் ஆங்கில மும்மணிக் கவிகள். விழி யிழந்த மில்டன் யாத்த லிசிடாசும், ஷெல்லி யாத்த அடோனியும், டெனிசன் யாத்த நினைவுப்பா (In Memorium) வும் உயர் பெரும் பாக்களென்ப தில் ஐய மில்லை. உயரிய நடையில் கனிவுறுங் கருத்துக்களைக் கூறுகையில் படிப்போரின் எண்ணத்தையும், உணர்ச்சியையும், அறிவையும் கட்டுப்படுத்திப் பிரதிபலிக்க வைக்கும் பேராற்றல் பெற்றவர். எழில் நிறை அழூற் குழலி இவர் உள்ளத்திலும் வெளியிலும் மகிழ்வுடன் கூத்தாடிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. இவர் யாத்த பாக்களின் பெரும் பகுதியில் கனிந்த உள்ளத்தின் குழைவும் எழிலும் பொலிவும் இனிமையும் இயற்கை ஒலியும் ஒளியும ஒளிர்தல் கண்கூடு. கவி யியலில் இவர் இலங்க வைத்த இன்ப வுயர்வைப் போன்று தம் வாழ் வியலில் விளங்க வைத்த உயரிய பண்பாட்டை உரைக்கையில் வையகமே இவருக்கு வணங்கும். ஹேரியட்டும் இவரும் இன்பக் காதலில் திளைத்து மகிழ்ந்திருக்கையில் ஹேரியட் அயலானை அடைந்து அகமகிழ்ந்து வாழ்ந்ததை யறிந்த ஷெல்லி பெரிதும் துன்புற்றாலும், ஹேரியட்டை விலக்கத் துணிந்தாலும் ஹேரியட் டிடம் மன முடைந்து உரையாடுகையில், 'நம்மிருவரிடம் மலர்ந்த காதல் மலர் வாடினும் நட்பு மலர் மலர்ந்துளது' என்று உரைத்த உயர்வுக்கு உலகி லீடுண்டா? ஒழுக்கத்தாலும் அறிவியலாலும் உலகை உருவாக்க உயரிய ஒப்பற்ற பிராமிதஸ் அன்பௌண்ட் (Prometheus Unbound) என்ற நாடகத்தை நல்லுலகம் கண்டு நலமுறப் பெரிதும் உயரிய நோக்குடன் வரைந்ததில் வானுலகத் துன்பத்தை விளக்குகிறுர்.

கனிவுறும் செய்யுளியலால் அலங்கரிக்கப் பெற்ற நான்கு அங்கங் கொண்ட நாடகத்தில் சிறந்த அறிவும் உயரிய ஒழுக்க மும் கொண்டு, பேராசை, பழிவாங்கல், தம் நலம் இவைகளை விட்டொழித்து, விண்ணுலக அடிமைகளின் தலைவராக விளங் கும் பிராமிதஸ் என்பவர் பனிக்கட்டிக ளிருக்கும் பனி மலையின்

உச்சியில் விலங்கிடப்பட்டுமுன்றே கடவுளை எதிர்த்து விரியன் பாம்புகள் போன்ற விலங்குகளின் கொடிய துன்பத்திற்கும் இன்னலுக்கும் இரையாகிச் சிறிதும் வணங்காமல் உரமுடனும் உறுதியுடனும் விளங்கி நோய்தான் தமக்கு மூல மென்றும், எத்தகைய துன்பம் தொடர்ந்து பெருகி வரினும் அதைத் தளராது தகைக்க வேண்டு மென்றும், உண்மை, விடுதலை, காதல் இவைகள் தாம் தூய வாழ்விற்கு அடிகோலுகிற தென்றும், இதில் கடவுளாயினும், வேறு எவராயினும் தலையிடின் அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டு மென்றும், வன்மையாளர்களை எதிர்க்கும் எளியோர்களுடன் சார்ந்து கடவுளின் கொடுமை ஒழியும் வரை போரிட வேண்டு மென்றும், உள்ளத்தை இருளாக்கவும் தகைக்கவும் எவராலும் என்றும் முடியா தென்றும், ஆனல் துன்பத்தைத் தோற்றுவிக்கவே முடியு மென்றுரைத்துச் சிறிதும் பணியாமல் எதிர்க்கவே, குருவுக்கும் இவருக்கும் இணக்கம் ஏற்படுத்த டெமகார்கன் தலையிடவே பகைமை மறைந்து இணக்கம் நிலவவே இருள் இரிந்து, உரிமை ஒளிர்ந்து, அமைதி நிலவி, குடியரசு புன் முறுவல் செய்தது.

அறப் பண்புகளை முன்னிறுத்தி எளியோரின் நன்மைக்குப் பாடுபடின் உயரிய வெற்றிதான் பரிசு என்றாலும், தொல்லையும் துன்பமும் விட்ட பாடில்லை என்றதுடன் அவலம் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும் என்பதை உணர்த்தவே மேற்படி நாடகத்தை யாத்தார் போலும்.

திடுக்கிடும் கொடிய தீங்குடைய இருள் மலிந்த வெறுக்கத் தகுந்த பாத்திரங்களையும் போற்றிப் புகழ வல்ல நல்ல பண்பாடுடைய பாத்திரங்களையும 'தி சென்சி' என்ற நாடகத்தில் திகழ வைக்கிருர். காமமும் கொடுமையும் அநீதியும் உருவாயமைந்த சென்சிக்கு இரு பீடு நிறைப் பண்பாடுடைய புதல்வர்களுண்டு; இவ்விரு புதல்வர்களைக் கொல்லக் கொடுமையே உருவான சென்சி திட்ட மிடுகின்றுன்; இது நிற்க, ஒழுக்கமும் அழகும் உருவா யமைந்த பெட்ரேஸ் என்ற மகள் உண்டு; மல்லி மலர் போன்ற தூய்மையும் நுண்மை யுள்ளமும் பெற்ற இவளிடம் ஆற்றலும், தகவும் திகழ்ந்து விளங்கின; விழியில் அழகும், அமைதியும், இனிமையும் இனிதே இலங்கின.

தகப்பனுன சென்சி தன் மகள் பெட்ரேசை மருவப் பெரிதும் தொல்லை கொடுத்து வந்தான்; பெட்ரேஸ், தன் தந்தையின் கொடுஞ் செயலுக்கு இரை யாகாமல் தந்தையின் கொடுமையை ஒழிக்கத் தன் சிறிய தாயார் லூக்ரிடியாவிடம் தெரிவிக்கவே, லூக்ரிடியா நஞ்சு கலந்த இனிய பானத்தைக் கொடுத்ததும் சென்சி மயக்கமாய்த் தூங்கிக்கொண்டிருக்கையில் திட்டப்படி ஒலிம்பியாவும் மெரிசோவும் வந்து கழுத்தை நெறித்துக் கொன்றனர். தன்னலமே உருவான போப்புக்கு இச் செய்தி தெரிந்ததும் விசாரணை செய்கையில் தூய்மையும் வாய்மையும் மெய்மையும் உருவான பெட்ரேஸ் எவ்வளவோ வாதாடியும் பலனில்லாமல் போயிற்று; மாண்புடைய பெட்ரேசுக்கு மரணம் தான் பரிசாகக் கிடைத்தது; ஆணவத்தை, அநீதியை, ஒழுக்க மின்மையை வன்மையுடன் எதிர்த் தொழித்த ஒழுக்க அழகி பெட்ரேசுக்கு மண்ணுலகில் மரணம்தான் பரிசாயினும் விண்ணுலகிலே வாழும் உயர் பரிசு பெற்றனள்.

குவலயத்தில் கொடுமையே உருவாகிக் கற்புடையாளைக் கொலை செய்யத் திட்டமிட்ட கொடும்பாவியைக் கற்பரசி கற்பைக் காக்கக் கொலை செய்தால் கற்பரசியைக் கொல்லச் சட்டமிருக்கும் சண்டாள உலகத்தின் சுடுமையை விளக்கினுர் போலும். காமத்தின் உச்ச நிலையையும் கற்பின் உச்ச நிலையையும் விளக்கிக் கற்பு தோற்கவும் காமம் வெற்றி பெறவும் உலகச் சட்டம் உதவுகிறதை உரைக்கிருர்.

க்னிவுறும் கவியும், உழுவல் நண்பரும், இளமையில் வளமுடைய பொருள் செறிந்த செழுமையுடைய பாக்கள் பல பாடிய கீட்ஸ் தன் காதலி பானி பிரொளனி காதலித்துக் கைவிட்டமையால் கலக்க முற்று நோய்வாய்ப்பட்டு இன்னுயி ரிழந்தமைக்கு ஷெல்லி வருந்தி, வெதும்பி, சிதைந்து, கவலை நிரம்பித் துயராழியில் மூழ்கி மூழ்கி விடுத்த கண்ணீர் அலைகள் ‘அடோனி’ என்ற தலைப்பு கொண்டு ஆங்கிலச் செய்யுளியல் சொல்லோவியமாகச் சிறந்து விளங்கல் கண்கூடு. பீடுடை பிளாட்டோவின் தத்துவ உரையாடல்கள் சிந்தனைக்கும் அறிவிற்கும் விருந்தளிப்பதைப் போன்று, ‘அடோனி’ விருந்தாக விளங்குவதுடன் பல புதை பொருளுண்மைகள் மலிந்த வாழ்வியலின் கலைக் கருவூலமாகவும் விளங்குகிறது.

மாண்புடைய விழி இழந்த மில்டன் என்ற பெருங் கவி ஆங்கில இலக்கியத்தைப் பெரிதும் வளமுற வைத்து மறைந்த பின்னர் ஆங்கில இலக்கியம் வறண்ட பாழ் வனமாக இருந்த இழுக்கை அழித்தொழிக்கத் தோன்றிக் கவிக் குழவியாக விளங்கிய கீட்ஸ் மறைந்தமைக்குப் பெரிதும் வருந்துவதாகவும், மேற்கொண்டு மாநிலத்தில் வாழ்ந்திருப்பின் பெருங் கவியாக விளங்கி இருப்பாரென்று கூறித் துயரமே உருவான தாதை துன்ப மேலீட்டான் வளமை இழந்த மலரை உண்மைக் காதல் கண்ணீரால் வளர்க்கையில் அம் மலர் இறந்துபடின் எய்தும் துயரை கீட்சின் மறைவு ஒக்குமெனவும் புலம்புகிருர். புதையுண்ட விடத்து அவர் நிழல் வெண்மை நிறங் கொண் டுழல்வதால் அவர் விழிப்புறுவ தில்லை என்றழுது, அவர் மறைவால் அவர் மீதிருக்கும் அன்பும் நம்பிக்கையும் என்றும் மறையாவென்று கூறியதுடன், அவர் பிரிவால் ஏற்பட்ட துக்கமும் மறையா தென்று மொழிந்து மழை பொழிந்து மறையும் மேகம் போன்று இரிந்து விட்டாா என்று இன்னல் நீர் சொரிகிருர். மாரிக் காலம் வந்து செல்கிற தென்றும், ஆனல் கீட்சின் மரணத்தின் துயர் எக் காலமும் உழன்றுகொண் டிருக்கு மென்றும், துயர் என்றும் இறவாமலிருக்கிற தென்றும், ஆதலால் துயரத்திற்கு மரணம் வரவேண்டு மென்றும், உயிரினங்கள் எங்கிருந்து ஏன் வந்தன வென்று வினவிப் பெரியோர்களும் சிறியோர்களும் மரண முறுகிருர்களென்று உலக நிலையாமையை நன்கு நவின்று; மீண்டும் தேர்வுறும் பொருட்டுக் கீட்ஸ் மரண மெய்தவில்லை என்றும், மரணத்திற்கு மரணம் வந்த தென்றும், அவர் இயற்கையில் கலந்து இயற்கையாகவும், இசையாகவும், இடியாகவும், பறவையின் இன்னிசையாகவும் ஒளிர்கிருர் என்றுரைத்து, எல்லாம் மாறினும் மாருத ஒன்று உள தென்றும், வானுலக ஒளியானது உலக நிழலைப் பறக்கடிக்கிற தென்றும், ஒளியுடைய தெய்வீக இயலைக் கறைப்படுத்துவது வாழ்க்கை என்றும், ஆதலால் மரணம்தான் கட்டாயம் தேவை என்று உலக வாழ்க்கையைச் சிறிதும் விரும்பாது வெறுத்து விண்ணிலே கீட்சின் உயிர் ஒளிப் பிழம்பாக ஒளிர்கிற தென்றும் புகழ்ந்து பகர்கிருர்.

தோல்வியையும் தொல்லையையும் அவலத்தையும் கண்ட ஷெல்லி உயர உயரப் பறந்து இன்னிசையால் உவகை யூட்டிய

(வானம்பாடி) என்ற பறவையைப் பெரிதும் உவகையுடன் பாடி உவகை யுறுகிறார். கீட்சுக்கு நைட்டின்கேல் பறவை புகலிடம் நல் கியதைப் போன்று ஷெல்லிக்கு (வானம்பாடி) புகலிடம் நல்கி தூய போலும். அப் பறவையின் இன்னிசைக்கு இரையான ஷெல்லி உலகையு மறந்து உயரப் பறந்து பாடிய பறவையை விண்ணுலக ஒளியுடைய விண் மீனென்று புகழ்ந்துரைத்து, உயரச் சென்றமையால் விழிக்குத் தெரியவில்லை யாயினும் அதன் இன்னொலி செவிக்குப் புலனாகிற தென்றார். மறைக்கப் பட்ட கவியின் கருத்தொளி ஒளிர்வதைப்போன்று தடையின்றித் தகவுடைய பாடல் பாடி உடைந்த உலகுக்கு நம்பிக்கையை ஊட்டுகிற தென்றும் கூறித், தகவுடைய தாதையின் உள்ளம் காதல் மேலீட்டான் சோகமுறும் நேரத்தில் இரகசிய இடத்தில் ஆறுதல் கூறுவதை யொக்க இப் பறவை பாடுகிற தென்று பகர்ந்து, மக்கள் பாடலில் சோகமும் துயரமும் துக்கமும் மலிந் துள்ள தென்றுரைத்து, ஆனால் வானம்பாடி பாடலில் இனிமை யும், பொலிவும், உயர்வும, நூலின்பத்தினும், பேரின்பமும், உள்ளன வென்று மகிழ்ந்து திகழ்ந்தார். தனிமையில் தோய்ந்து உலகியலை வெறுத்துக் கவிகள் பல பாடிய ஷெல்லி மேகத்தையும், காற்றையும், கடலையும் பெரிதும் புகழ்ந்து பாடி இயற்கை இன்பத்தில் தேங்கித் திளைத்தார்.

அருவிகள் ஆறுகளுடன் ஒன்றுவதையும், ஆறுகள் கட லுடன் ஒன்றுவதையும், விண் காற்று உணர்ச்சியுடன் ஒன்று வதையும், உலகிலுள்ள யாவும் தெய்வீகச் சட்டத்தால் ஒன்று வதையும் கண்ட இவர், தாம் ஏன் ஒன்றி இருத்தல் கூடா தென்று வினவி மலைகள் வானத்தை முத்த மிடுகின்றன வென் றும், அலைகள் பிணைந்திருக்கின்றன வென்றும், பரிதி யொளிப் பாரைப் பற்றியுள்ள தென்றும், மதியொளி மாண்புடைக் கடலை முத்தமிடுகிற தென்றுரைத்தது, தம் காதலி தம்மை முத்த மிட வில்லையானால் அவை யாவும யாதுக்குப் பய னென்று காதலின் தத்துவத்தை ஷெல்லி விளக்கியதைப் போன்று விளக்கியவர் எவருண்டு இவ்வவனியில்?

அவனியில் அணங்கால் அவல முற்ற ஷெல்லி துன்ப உச்சி யடைந்து துயராழியில் மூழ்கி இன்னற் கரை எய்தி இடியுண் டிடர்ப்பட்டுப 'புன் முறுவல் செய்யும் பூ நாளை இறக்கும்; நிலைக்கு மென்று நினைத்த யாவும் (நம்மை) சோதித்துப் பறந்து விடும்; இவ் வுலக இன்பம் எத் தகைத்து? இருளை எள்ளி நகையாடும் மின்னலின் மிகுந்து ஒளிரும் ஒளியினும் குறுகியது,' என்று மன முடைந்து உலக இன்பத்தின் நிலையாமையை இயம்பி உலகத் தத்துவ ஞானி போல் உலக இலக்கியக் கடலிலே நல முறும் நற் கற்பனை களாம் இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற ஆங்கி லத் தங்க ஓடத்திலே தகவுட னமர்ந்து எழுதுகோ லேந்தி ஓய் யாரமாக உலவுகிறார்.

மேற்புலத்து உயரிய கவிகள் மிகச் சிறுபான்மையராயினும் இவர்களிடம் ஷெல்லி நல்லிடம் பெற்றமை வியப்பன்றோ! ஐரோப்பிய இலக்கியத்தின் உயிரா யிலங்கும் மா பெருங் கவி டாண்டே செய்யுளியலில் சந்தத்தைச் சிறக்க வைத்ததைப் போன் றெவரும் சிறக்க வைத்தார்களில்லை; என்றாலும் டாண்டேயுக்கு இணையாகச் சந்தத்தின் சிறப்பைச்செய்யுளியலில் சிறக்க வைத்த சிறப்புப் பெருமை ஷெல்லி ஒருவருக்கே உண்டு.

'ஐடியலிசத்திலும், முக்கியத்துவத்திலும்,' இசையிலும் இவரை வெல்ல இன்றளவும் எக் கவியும் தோன்றவில்லை. வாழ்வியலை முன்னிறுத்தி இயற்கையைத் துணையாக்கி நலமுறும் நற் கற்பனையால் சிறந்த செய்யுளியற்றி உயர்ந்த உரைநடையில் கட்டுரைகள் பலதீட்டிய ஷெல்லி உயிரைப்பற்றி மிகமிக உருக்க மாக உரைத்ததைப் போன்று எவரும் உரைத்தார்களில்லை.

'இனிய பாடலின் வெள்ளி அலைகளிலே என் உயிர் உறங்கும். அன்னப் பறவை போன்ற மந்திரப் படகாய் ஓடுகிறது,' என்று கூறிய ஷெல்லி ஒரு நாள் படகிலே மிக மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருக்கையில் திடீரென்று புயல் காற்று தோன்றியதால் படகு கவிழ்ந்தது; சென்றவர்களுள் ஒரு இளைஞன் தப்பிக் கரை யடைந்து மரணச் செய்தியை அறிவித்ததும் பைரனின் வாய் குழறிற்று; கவிகள் யாத்த கவி விபத்தால் இன்னுயி ரிழந்து கரையோரம் சேர்ந்ததும் அவருடைய ஆடையின் பையில் கீட்சின் கவிகள் இருந்தன.

மஞ்சள் நிற மணலில் பரிதியின் பொன் கிரணங்கள் சொரிய நீல நிற அலை மோத ஷெல்லியின் உடலுக்குத் தீயிட்ட னர்; பாக்கள் பாடிய பேருடலை அழல் அணுக அணுக வெண்மை நிற ஒளி ஒளிர்ந்தது; ஓர்ப்புக் குறைவிடமான அவர் மூளை அழலால் குமைபி வெந்ததைக் கண்ட பெருங்கவி பைரன் சிந்தனையால் வெந்தமூளை அழலால்வேகிறது என்று கருதிக் கலக்க முற்றார் போலும். ஷெல்லியின் நெஞ்சம் மிகப் பெரிதாய் இருந்ததுடன் அழலால் எரிக்க முடியவில்லை யாதலால அதை அவருடைய உடன் பிறந்தாளுக் கீந்தனர். ஷெல்லியின் சாம்பல் உரோம நகருக் கனுப்பப்பட்டுப் 'புராடெஸ்டண்டு' இடு காட்டில் வைக்கப்பட்டது.

பாக்கள் பாடி, கவிகள் வனைந்து, நாடகங்கள் இயற்றிக் கட்டுரைகள் வரைந்து, சீர் திருத்தத்தைச் செப்பி, பண் பாட்டைப் பகர்ந்து, ஒழுக்கத்தை ஒளிர வைத்து, காதலால் கலக்க முற்று, மனைவியால் மன முடைந்து, உலகை வெறுத்து, இயற்கையைத் தழுவிப் புவியில் வாழ்ந்து, புனலில் மூழ்கி, அழலில் கலந்து, காற்றாகி, விண்ணாகி, இறவாப் பெரு நிலை எய்திய, ஷெல்லி வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

(280 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வணிகரும் இருந்தனர். அவருள் தெலுங்கு நாட்டினர் பலர். அந் நாட்டில் வாணிகம் செய்து வந்தனர். தெலுங்கு நாட்டில் கோகழி யைஞ் ஞூறு, திரிபுர தளம் மூன்று லக்ஷம் என நாடுகள் பெயர் பெற்று விளங்கின. அந் நாடுகளிலிருந்து வந்து வாணிகம் செய்தோர் தங்களை ஐஞ் ஞாற்றுவர், ஆயிரவர் எனக் கூறிக் கொள்வர். தெலுங்கு நாட்டிலிருந்து வந்து கோனுட்டில் வாணிகம் செய்தோருட் சிலர் தங்களை ஆயிரவர் என்று கூறிக் கொண்டனர். அவருள் கிராஞ்சி மலை கிளிய னின்ருன் திருமலை சகஸ்ரன் என்பவன் ஒருவன். கிராஞ்சி மலை யென்பது கிரௌஞ்ச மலை யென்பதன் திரிந்த பெயர். கிழிய நின்ருன் என்பது கிளிய நின்ருன் எனத் திரிந்து போயிற்று. 'கிளியனூர்' எனத் தொண்டை நாட்டில் ஊர்கள் இருப்பதை நோக்க, இக் கிளியன் என்பது ஓர் இயற் பெயராக இருக்கலா மெனக் கருதுதற்கும் இடந் தருகிறது. கிராஞ்சி மலை இப்போது குண்டூர் மாவட்டத்தில் உள்ளது. குண்டூர் மாவட்டத்துக் குண்டூரின் பழம் பெயர் குமட்டூர் என அவ் வூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. வடுக நாட்டுக் கிராஞ்சி மலையில் தோன்றிக் கிளிய நின்ருன் என்னும் வணிகன் மகனுப்க் கோனுட்டில் வந்து வாணிகம் செய்த திருமலை, சகஸ்ரம் என்னும் குடியைச் சேர்ந்தவனுவன். சகஸ்ரன், ஆயிரவன் என்னும் பொருள் தருவது.

தெலுங்க நாட்டு வணிகனுன திருமலை சகஸ்ரன் கோனுட்டில் வாணிகம் செய்கையில், அருளாளன் சகஸ்ரன் என்ற வேருெருவனும் வந்து வாணிகம் செய்தான். அவனது ஊர் வேத கோமபுரம்; அதனல் அவன் வேத கோமபுரத்து அருளாளன் சகஸ்ரன் என்று வழங்கப் பட்டான். இவனது வேத கோமபுரமும் தெலுங்க நாட்டில் உள்ளதோர் ஊர் இவ் வூரவர் பலர் சோழ நாட்டில் ஆடுதுறைப் பகுதியில் தங்கியிருந்தனர். அதனுல் அப் பகுதி விக்கிரம சோழச் சதுர் வேதி மங்கலத்து வேத கோமபுரம் என்று பெய ரெய்தியிருந்தது (A. R. 366 of-1907). முதல் இராசராசனுடைய அரசியற் சுற்றத்தாருள் 'இராசேந்திர சிம்ம வள நாட்டுக் குறுக்கை நாட்டுக் கடலங்குடி வேத கோமபுரத்துத் தாமோதர பண்டன் என்ற ஒருவன் (Ep. Indi. XXII. பக். 254) எனவே, கி. பி. பத்து, பதினேராம் நூற்ருண்டிலேயே வடுக நாட்டு

வணிகர் பலர் தமிழ் நாட்டிற் புகுந்து வாணிகம் செய்தன ரென்பதும், வேதியர்கள் கோயில்களிலும் அரசியலிலும் பணிபுரிந்தன ரென்பதும் தெரிகின்றன.

பணி மேற் கொண்ட நாட்டவரும் பிறரும் மீண்டும் ஒருங்கு கூடி 'கோவிராச கேசரி வன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௩௰௬-வது (முப்பத்தாறுவது) இரட்டபாடி கொண்ட சோழ வள நாட்டு நாட்டோம் திருநலக் குன்ற முடைய மகா தேவர்க்கு இந் நாட்டுப் பிரமதேயம் காப்புக்குடி, கிராஞ்சி மலை கிழிய நின்றான் திருமலை சகஸ்ரனும், வேத கோம புரத்து அருளாளன் சகஸ்ரனும் இவ் விருவரும் இந் நாட்டில் வந்திறங்கின வெற்றிலைக்குத் தரகு கொண்டு முப்பத்தாறுவது முதல் இத் தேவர் அடைக்கா யமுதுக்கு ஆட்டு (ஆண்டு) முப்பதினாயிரம் பாக்கும் வெற்றிலைக் கட்டு எழு நூற்றைம்பதும் இவ் விருவரும் இவர்கள் வர்க்கத்தாருமே சந்திராதித்தவல் (சந்திராதித்தர் உள்ள வரையில்) இடக் கடவராகவும்......... இது நாட்டோமும் மூன்று படைப் பொற் கோயில் கைக்கோளரும் இந் நாட்டுப் படை பழியிலி ஐஞ் ஞூற்றுவருமே இது நிலை நிறுத்தக் கடவோமாகக் கல் வெட்டுவித்தோம்' (P. S. No. 125) என்று திருநலக் குன்ற முடையார் கோயில் முன் மண்டபத்துக் கீழ்ப் புறச் சுவரில் கல் வெட்டுவித்தனர்.

இவ் வேற்பாட்டின்படி இரண்டாண்டுகள் கழிந்தன. சகஸ்ரர் இருவருக்கும் முன்னர் இருந்த சிறப்புப் பண்டு போல் உண்டாகவில்லை; வருவாயும் குறைந்தது. புதியராய்த் தோன்றிய வணிகருள் சிறுத் தொண்ட நம்பி யென்பான், தான் முன்னர் நிகழ்ந்த உடன்படிக்கையில் கலந்து கொள்ளாதது பற்றித் தனக்குள்ளே வருத்த முற்றான். கைக் கோளர் தலைவரும் பழியிலித் தலைவரும் சொன்னதை ஏற்காது போனது பெருங் குறையாகத் தோன்றிற்று. பின்பு ஒரு நாள் அவர்களைக் கண்டு தன் கருத்தைத் தெரிவித்தான். அவர்கள் நாட்டுத் தலைவர்களுக்குத் தக்க முறையிற் சொல்லிச் சிறுத் தொண்ட நம்பியின் வேண்டுகோளை ஏற்குமாறு செய்தனர். சோழ வேந்தன் ஆணை பெற்று, தானைத் தலைவரும் நாட்டவரும் கூடித் திருமலை சகஸ்ரனையும் அருளாளன் சகஸ்ரனையும் வருவித்து ஆராய்ச்சி செய்தனர். திருநலக் குன்ற முடையார்க்குச் செலுத்த வேண்டு மளவிற் செம் பாகத்தைச் சிறுத்

தொண்ட நம்பி ஏற்றுக் கொள்வது தக்கதெனத் துணிந்தனர். சிறுத் தொண்ட நம்பியும் அதற்கு இசைந்தான். பின்பு, 'மூன்பு கல் வெட்டின திருமலையும் அருளாளனும் இவ் விருவரும் செம் பாகமும், தாமோதரன் சீகிருஷ்ணனை சிறுத் தொண்ட நம்பி செம் பாகமும் கொண்டு திருநலக் குன்றத்திலே இருந்து பரிமாறித் திருநலக் குன்றமுடையார்க்கு இப்படியா லுள்ளது செலுத்தக் கடவார்களாக' என மூன்பு வெட்டின கல் வெட்டின் கீழே பொறித்தனர்.

இது நிகழ்ந்த சில ஆண்டுகட்குப் பின் வெற்றிலைப் பாக்கின் விலை உயர்ந்தது. அதனுல் திருமலை முதலிய தரகர்கட்கு வருவாய் மிகுந்தது. ஆகவே, நாட்டில் முன்னர் நிகழ்ந்தது போன்ற பூசல்கள் உண்டாதற்கேற்ற குறிகள் வணிகரிடத்தே உண்டாயின. நாட்டுத் தலைவர்கள் அவற்றை முன்னறிந்து ஆராய்ந்து தரகு விகிதத்தை உயர்த்தக் கருதினர். அவர் கருத் தறிந்த வேந்தன் முதற் குலோத்துங்கன், தனது ஆட்சியின் சம்அ-ஆம் ஆண்டு முதல் (நாற்பத்தெட்டாம் ஆண்டு முதல்) உயர்த்துக் கொள்க என்று ஆணை யிட்டான். மிக்குவரும் வருவாய்க்குச் செலவினமும் கண்டு, நாட்டவர் கூடி, வெற்றிலைத் தரகர் மூவரையும் கூட்டி, 'இக் கல் வெட்டுப்படியுள்ள அடைக்கா யமுதும் இலை யமுதும் இடக் கடவார் திருமெய்ப் பூச்சுக்கு சம்அ-வது முதல் திங்கள் ஒன்றுக்கு ஐந்து திராமமாக ஆண்டுக்கு அறுபது திராமம் இறுக்கக் கடவார்களாகக் கல் வெட்டுவித்தோம்' என்று முடிபு செய்து வேந்தற்குத் தெரிவித்தனர். வணிகர் மூவரும் அவ்வாறே செய்து வருவாராயினர். கோனுட்டில் வெற்றிலை வாணிகத்தில் குழப்பமும் கலகமும் இலவாயின.

நிற்க, மேலே கூறிய திருமலை சகஸ்ரனும் அருளாளன் சகஸ்ரனும் கோனுட்டில் இருந்து வாணிகம் செய்து பெருஞ் செல்வத் தலைவர்களாய் விளங்கினர். ஏனை வணிகர் பலரும் இவ் விருவர்க்கும் அடங்கியே இருந்தனர். ஆயினும், பொன்னுசை மக்களைச் சும்மா இருக்கவிடாதன்றே? திருமலையும் அருளாளனும் ஒருவரின் ஒருவர் மிக்க செல்வம் ஈட்ட விரும்பித் தம்மிற் போட்டியிட்டு மாறுபடுவாராயினர். ஈர் பேனுகிப் பேன் பெருமாளாயிற் றென்பது போல, இம் மாறுபாடு முறுகிப் பெருகிப்

பெரும் பகையாய் முற்றிவிட்டது. இருவரிடையேயும் போரும் பூசல்களும் மிகுந்தன. இருவருடைய படைகள் அடிக்கடி போரிடத் தலைப்பட்டமையின், வாணிகப் போக்கு வரவு ஆறலை கள்வரால் அலைப்புண்டது. இவ் விருவரும் வெற்றிலையும் பாக்கும் கொணர்ந்து வாணிகம் செய்பவர்கள். இவர்களுடைய செயலால் கோனாட்டில் வெற்றிலைப் பாக்கு பஞ்சம் பெரிதாயிற்று. இவர்கள் பால் வெற்றிலை பாக்கு வாங்கி விற்கும் சிறு வணிகர் பெருந் துன்ப முற்றனர். சில காலங்களில் வெற்றிலை பாக்கு கிடைப்பது அரிதாகவே, கோயில் காரியங்களும் முட்டுப்பட்டன. வேறே வணிகர் சென்று வெற்றிலை பாக்குக் கொணர்தற்கு அஞ்சினர்.

சில நாட்களுக்குப் பின் வேற்று நாட்டவர் சிலர் இவர்களால் சீர் குலைந்த வெற்றிலை வாணிகத்தை நடத்த லுற்றனர். கோனாட்டு வணிகருட் சிலர் அவர்கட்குத் துணை செய்தார்கள். வணிகர் பலராகவே அவரவரும் கட்டுப்பாடின்றித் தாந்தாம் வேண்டியவாறே விற்பனை புரிந்தனர். அதனால் கோயிலுக்குச் சேர வேண்டிய தரகும் குறையலுற்றது. அது கண்ட திருநலக்குன்றத்துக் கோயி லதிகாரிகள் புதுவராய்த் தோன்றிய வெற்றிலை வாணிகரை ஊக்கி, வேண்டும் வசதிகளைச் செய்து கொண்டார்கள். சுருங்கச் சொல்வோமாயின் வெற்றிலை பாக்கு வாணிகம் பழைய வடுக வாணிகர் கைவிட்டுப் புதியராய் வந்த வணிகர் கைக்கு மாறிப் போவதாயிற்று. ஆயினும், திரு நலக்குன்ற முடையார் கோயிலுக்குரிய வருவாய் செம்மை பெறவில்லை. இதனை எண்ணுவோரும் அருகினர். ஊரி ரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போலக் காப்புக்குடி வெற்றிலை வணிகர் இரண்டு பட்டுக் கலகம் புரிய, அயல் நாட்டு வணிகர்க்கு ஆக்கம் பெருகிற்று. உண்ணாட்டவருக்குச் சலுகை குறைந்தது. திருநலக் குன்றமுடையார் கோயிற்குரிய தரகு வருவாயும் நாட்டவர் வருந்தும் அளவுக்குக் குன்றிப் போயிற்று.

இதற்கிடையே, நாட்டிலுள்ள நல்லோருட் சிலர், கிராஞ்சிமலை கிழிய நின்றான் திருமலை சகஸ்ரனையும் அரு ளாளன் சகஸ்ரனையும் கண்டு நிகழ்வது முற்றும் நினைவுறக் கூறினர். இருவர் உள்ளமும் உண்மையை ஓர்ந்து கண்டன. சான்றோர் சிலர் கூடி இருவரையும் சந்து செய்வித்தனர்.

இருவரும் ஒற்றுமை கொண்டு வெற்றிலை வாணிகத்தைத் தொடர்ந்து நடத்தினர். ஆயினும், புதியராய் வந்து தோன்றிய வணிகர் முன் இவ் விருவரது வாணிகமும் சிறக்கவில்லை. வணிகரிடையே பொறாமையும் பூசலும் போரும் உண்டாயின. அவரவர் பக்கலிலும் ஆட்கள் பலர் மாண்டனர்.

அந் நாளில் இக் கோனாடு, இரட்டபாடி கொண்ட சோழ வளநாடென்ற பெயரால் சோழ வேந்தர் ஆட்சியிலிருந்த தென முன்பே கூறினோம். அக் காலத்தே இந் நாடு பொற்கோயிற் படையும் பழியிலிப் படையும் என இரு படைகளின் காவலில் இருந்தது. இவ் விரண்டற்கு முரிய தலைவர் இருவரும் காவற்றலைவராய் இருந்தனர். இவ் விருவரும் தொடக்கத்தில் நடுவு திறம்பாது நின்று நாட்டு மக்கட்கு இவர்களால் ஊறுண்டாகா வண்ணம் பாதுகாத்து வந்தனர். புதியராய்த் தோன்றிய வணிகர், தானைத் தலைவர் இருவரையுங் கண்டு, 'வடுக வாணிகர் பூசலால் நாட்டிலுண்டான வெற்றிலைப் பாக்குக் குறையை நாங்கள் முன்னின்று நீக்கி நற் பணி புரிந்தோ மாதலால், எங்கட்கு இனி இந் நாட்டில் இடமில்லாதவாறு செய்தல் முறையாகாது' என வேண்டிக் கொண்டனர். அவர் செயலின் நலந் தேர்ந்து தலைவர் இருவரும் அவர்கள் வாணிகத்துக்குச் சலுகை தரத் தொடங்கினர். ஆனால், அவர்கள் திருநலக் குன்ற முடையார்க்குச் செலுத்த வேண்டிய தரகினைக் குறைத்தே செலுத்தினர். கிராஞ்சி மலைத் திருமலையும் வேத கோமபுரத்து அருளாளனும் தாம் செய்த தவற்றுக்கு வருந்திக் கோனாட்டுத் தலைவரிடத்தும் கோயிலாரிடத்தும் முறையிட்டனர். பெருஞ் செல்வர்களாதலால், சகஸ்ரர் இருவரும் வாணிகத்தால் ஊதியம் பெருகினும் சிறுகினும் திருநலக் குன்ற முடையார்க்குரிய தரகு குறையாமலே ஆண்டுதோறும் செலுத்தி வந்தனர். புது வாணிகர்க்கு அஃது இயலாதாயிற்று. இவற்றையெல்லாம் எண்ணிய தலைவர்கள் செய்வது தெரியாது திகைப்புற்றுத் தஞ்சை மாநகர்க்குச் சென்று சோழ வேந்தன் முதற் குலோத்துங்கன் திருமுன் முறையிட்டனர். வேந்தர் பெருமான் கோனாட்டுப் படைத் தலைவர் இருவர்க்கும் திருநலக் குன்ற முடையார் கோயிலதிகாரிகட்குத் திருமுகம் விடுத்து 'உண்மை யாராய்ந்து தரகர்களைக் நிறுவி முறை வழங்குக' என்று ஆணை பிறப்பித்தான். திருமுகம் கோனாட்டுத் தலைவர் பால் வந்து சேர்ந்தது.

திரு முகம் வரக் கண்ட கோனாட்டுத் தலைவர்கள் எதிரெழுந்து வரவேற்று வேந்தனை வாழ்த்தி, பொற் கோயில் கைக்கோளர் மூன்று படைத் தலைவரையும் பழியிலிப் படை ஐஞ்ஞூற்றுவர் தலைவரையும் ஏனைத் தலைவர்களையும் திருநலக் குன்றத்து மகா தேவர் கோயிலினுள்ளால் ஒருங்கு கூட்டி ஆராயத் தொடங்கினர். அரசியலாணைப்படி முதற்கண் திருநலக் குன்ற முடையார் கோயிற்கு ஆண்டு தோறும் வேண்டி யிருக்கும் வெற்றிலைப் பாக்குத் தரகு கணக்கிடப் பெற்றது. 'ஆண் டொன்றுக்கு அடைக்காய் அமுதுக்கு முப்பதினாயிரம் பாக்கும் எழுநூற்றைம்பது கட்டு வெற்றிலையும்' வேண்டியிருப்பது தெளிவாயிற்று. மேலும், இவற்றை முன் பெல்லாம் திருமலை சகஸ்ரனும் அருளாளன் சகஸ்ரனுமே கொடுத்து வந்தார்களென்பதைக் கோயிற் கணக்குகள் தெரிவித்தன; அவ் விருவருடைய கணக்குகளும் அவ்வாறே குறித் திருந்தன. பின்னர், இந் நாட்டில் இனி வந்திறங்கும் வெற்றிலை பாக்குகட்குத் தரகு செலுத்தி வாணிகம் செய்யும் தலையுரிமை நல்குவது பற்றி ஆராய்ச்சி நடந்தது. தானைத் தலைவர் இருவரும் அவர்தம் துணைவரும் புதியராய்த் தோன்றிய வாணிகர் சார்பாகப் பேசினர். அவர்களால் மேலே கண்ட தரகினைத் தர இயலாமை விளங்கிற்று. திருமலையும் அருளாளனும் வழக்கம் போல் தாங்கள் செலுத்துவதாக உடன்பட்டனர். அதனால், கூடி யிருந்த மகா சபையார். 'இனி, இந்த நாட்டில் வந்திறங்கும் வெற்றிலைக்குத் தரகு கொண்டு கிளிய நின்றான் திருமலையும் அருளாளன் சகஸ்ரனும் இவர்கட்குப் பின் இவர்கள் வருக்கத்தாரும் இடக்கடவர்களாக' என்று தீர்மானித்துச் சோழ வேந்தனுக்குத் தெரிவித்தார்கள். வேந்தர் பெருமான், தனது ஆட்சி ஆட்சி யாண்டு முப்பத்தாருவது முதல் இங்ஙனமே நடைபெறுக' என்று கல்வெட்டித் தருமாறு பணித்தான். மேலும், இதனைக் கோனாட்டாரும் மூன்று படைப் பொற் கோயில் கைக் கோளரும் இந் நாட்டுப் படை பழியிலி ஐஞ் ஞூற்றுவரும் நிலை நிறுத்தக் கடவ ரென்றும் ஆணை பிறப்பித்தான்.